# திருக்கோயில்

OFFICE OF THE STATE EDITOR
90/வெ/73
19 JUN 1973
19/6/73
... UNIT, MADRAS

(185)



மாலை 15]    பரிதாபி-சித்திரை. வைகாசி-மே 1973    [மணி 8

திங்கள் வெளியீடு

தமிழ்நாடு அரசின்
அறநிலைய ஆட்சித்துறை வெளியீ...



திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அரசினர் கலைக்கல்லூரிக் கட்டிடத்திற்கு மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. மு. கண்ணப்பர் அவர்கள் தலைமையில், கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. நாவலர் இரா. நெடுஞ்செழியன் M. A. அவர்கள் அடிக்கல் நாட்டுதல்

---

## பொருளடக்கம்


1. கம்பரும் கவிதையியலும்
2. அருட் பெருங் காப்பியம்
3. நயஞ் செறிந்த நன்றியுரை
4. சமய தீபம்
5. மாணிக்க வாசகர் மாட்சி
6. திருப்பணி செய்வதன் சிறப்பு
7. சிவத்திரு ஞானியாரடிகள்
8. அருள்மிகு ஞானியாரடிகள்
9. ‘‘நம் கலைஞர் நீடூழி வாழ்க!’’
10. தமிழ் வளர்த்த துறவிகள்


---

### சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்


ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும் தனிப்பிரதி விலை ரூபா. ஒன்று மட்டும்

‘திருக்கோயில்’ இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் ‘‘திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34’’ என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது. —ஆசிரியர்.

OFFICE OF THE STATE EDITOR GAZETTEERS
90/Gu/73
19 JUN 1973




மாலை 15 ] பரிதாபி - சித்திரை, வைகாசி - மே 1973 [ மணி 8

# கம்பரும், கவிதையியலும்

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

★ ★ ★

**முன்னுரை :**

தமிழ் மொழிக்கு எத்தனையோ பல சிறப்புக்கள் உண்டு. ஏராளமான இனிய சிறந்த கவிதைகளைப் பெற்றிருத்தலும் அவைகளுள் ஒன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட காலம் தொட்டே, தமிழிற் சிறந்துயர்ந்த கவிதை இலக்கியங்கள் தோன்றி வளர்ந்து வருகின்றன. தமிழைப்போலப் பழமையும் பெருமையும் வாய்ந்த, சிறந்த கவிதை இலக்கியங்களைப் பெற்றுள்ள மொழிகள், உலகில் ஒரு சிலவே யாகும். தமிழ் நூல்களுள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு துறையில் தனிச் சிறப்புடையது. பொதுவாக எல்லா வகையான மக்களும் எளிய இனிய முறையிற் கவிதையின்பம் துய்த்து மகிழ்தற்குத் துணை புரிவது, கம்பராமாயணம் என்னும் கவின்மிகு நூலே எனலாம்.

அதன்கண் கதையின் சிறப்பும், கருத்தின் வளமும், கவிதையின் எழிலும் ஒருங்கே பொருந்தி ஒளிர்கின்றன "எல்லாச் செல்வங்களையும் பெற்று, இவ்வுலகம் முழுவதையுமே அரசாட்சி புரிந்தாலும்; தேவருலகம் சென்று, அங்கே கற்பக மர நிழலில் அமர்ந்து, எத்துணைப் போகங்களைத் தான் நுகர்ந்தாலும்; கற்றவர்களின் உள்ளத்தினைக் களிப்படையச் செய்வது கம்பநாடன் கவிதை ஒன்றேயாகும். அதனைப்போலக் கற்றவர்களின் உள்ளத்

---

இரசிகமணி திரு. டி.கே.சி. அவர்களின் வட்டத் தொட்டித் தமிழன்பர் குழுவில், மாட்சிமிகு. நீதிபதி திரு. எஸ். மகராசன், B.A., B.L., அவர்கள் தலைமையில் நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது.

(28-4 73) -ஆசிரியர்.

தைக் களிதுளும்பச் செய்வது வேறுபிறிதொன்றில்லை.''

''கம்ப நாடன் கவிதையிற்போற்

கற்ருேர்க் கிதயம் களியாதே''.

கம்ப நாடரின் கவிதைச் சிறப்பு, கட்டுரைத்தற்கு எளிய தொன்றன்று. பெண்களிலெல்லாம் திருமகள் போலவும், விண்மீன்களிலெல்லாம் சூரியன் போலவும், உலகிலுள்ள மலைகளிலெல்லாம் இமயமலை போலவும், ஈடும் எடுப்பும் இன்றிச் சிறந்துயர்ந்து திகழ்வது கம்பராமாயணம். அதனைப்போன்ற கவின் மிக்க நூல் வேருென்றனை நாம் காண்பதரிது.

''கம்பரா மாய ணம்போற்

கவின்மிகு நூலும் காணேம்''

148709.

**கவிஞர் உள்ளம் :**

கம்பராமாயணம் உலகப் பெருங்காப்பியங்களுள் ஒன்று. உலகப் புகழ்பெற்ற இலியதம், ஈனிதம், துறக்கநீக்கம், மகா பாரதம் போன்ற பெருங்காப்பியங்களுடன் மட்டுமேயன்றித், தனக்கு மூலமுதல் நூல் ஆகிய வான்மீகி ராமாயணத்துடனும்கூட, அது சரிநிகர் சமானமாகத் திகழத்தகும் சிறப்புடையது (1)

உலகப் பெருங்கவிஞர்களுள் ஒருவராகிய ஷேக்ஸ்பியர், தம்முடைய நூல்களில் அங்கங்கே கவிதை பற்றியும், நடிப்பினைப் பற்றியும் குறிப்பிட்டுச் சென்றிருத்தல், ஈண்டு நாம் எண்ணி உளங்கொள்ளுதற்கு உரியது.

''கவிஞனின் கண்ணுனது, மிகச்சிறந்ததோர் உள்ளெழுச்சியினுல் விண்ணில் இருந்து மண்ணையும், மண்ணிலிருந்து விண்ணையும் சுற்றிச் சுழன்று அளந்து பார்வையிடுகின்றது; பிறர் காணவும் கருதவும் இயலாத பொருள்களின் இயல்புகளைக் கற்பனை யுணர்வானது உருவாக்கித் தரத்தர, அவைகளைக் கவிஞனின் எழுதுகோல் எழில் கனிந்த வடிவங்களாக இனிது தீட்டுகின்றது; காற்றுப்போல நுண்ணியனவாய்க் காணப்படாமையின் இல்லனவாய் விளங்கும் அவற்றிற்கு ஓர் உறைவிடமும் பெயரும் அளிக்கின்றது'' (2).

என்று ஷேக்ஸ்பியர் தம்முடைய 'ஒரு நடுவேனிலின் இரவுக் கனவு' என்னும் நூலிற் பாடியிருப்பது, ஒரு கவிஞர் என்ற நிலையில் அவர் எத்தகையவர் என்பதனை, நாம் உணர்வதற்குத் துணை புரிகின்றது.

இங்ஙனமே மிகவும் புகழ்பெற்ற பிறிதொரு நூல் ஆகிய ஹாம்லெட் என்னும் நாடகத்தின்கண், மிகச் சிறந்த நடிகராகவும் விளங்கியிருந்த ஷேக்ஸ்பியர் தம்முடைய நடிப்புக்கலையுணர்வின் நலமனைத்தும் விளங்கும் வண்ணம் வழங்கியுள்ள ஒரு சில குறிப்புக்களும், இங்கே இவைபற்றி நாம் அறிந்து கொண்டு இன்புறுதற்குரியன.

''நீங்கள் உங்கள் பேச்சுக்களை நயமாகவும் பொருத்தமாகவும் பேசுங்கள். கூச்சவிட்டுக் கத்தாதீர்கள். காற்றை ஈர்வாள் கொண்டு அறுப்பது போன்று, கைகளை மேலும் கீழும் ஆட்டிக் குதிக்காதீர்கள். அமைதியாகப் பெருந்தன்மை தோன்ற

---

(1) "In the Ramayana of Kamban, the world possesses an epic which can challenge comparison not merely with the Iliad, and the Aeneid, the Paradise Lost and the Maha Bharatham, but even with its original itself, namely, the Ramayana of Valmiki."

- V.V.S. Aiyer.

(2) "The poets eye, in a fine
frenzy rolling,
Doth glance from heaven to earth
from earth to heaven;
And as imagination bodies forth
The form of things unknown,
the poets pen
Turns them to shapes, and gives
to airy nothing
A local habitation and a name"

—William Shakespeare,
A Midsummer Night's Dream.

Q2m2n, N59TK N73·15·8 (175)



நடியுங்கள். உணர்ச்சியினைப் புயலும் சூருவளியும் போலஆக்கிச் சிதைத்து விடாமல், அளவாகவும் செம்மையுடனும் வெளியிடுங்கள். உணர்ச்சியினை அளவுக்கு மீறி மிகைப்படுத்தி, இரைச்சலும் கூச்சலும் இட்டுப் பேசி சுவைத்திறன் இல்லாத தரையாளர்களைக் களிப்பூட்ட முயலாதீர்கள். மிகைப்படுத்தி நடிப்பவர்களின் உரையாடலைக் கேட்பது, என் உள்ளத்தைப் பெரிதும் துளைத்து வருத்துகின்றது. அளவுக்கு மீறி நடிப்பவனைச் சவுக்கினால் அடித்து ஒறுத்தலை நான் விரும்புகின்றேன். அத்தகையவன் செயல், ஏரோதையே விஞ்சும் ஏரோது போல இருக்கின்றது. மிகை நடிப்பை விலக்கி விடுமாறு உங்களை யான் பெரிதும் மன்றாடி வேண்டுகின்றேன்.

அதன் பொருட்டு மிகுந்த கோழை போலவும் ஆகிவிடாதீர்கள். உங்கள் அறிவின் திறனையே ஆசானாகக்கொண்டு ஏற்றபடி இனிதாக நடியுங்கள். சொல்லுக்குச் செயலும், செயலுக்குச் சொல்லும் ஒத்திருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். இயற்கையினை உள்ளது உள்ளபடியே விளக்கிக் காட்டுவதுதான், நடிப்பின் குறிக்கோள். அளவிற்கு மிகவோ குறையவோ நடித்தால், ஒருவேளை அறிவில்லாதவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரலாம்! ஆனால் அறிவுடையவர்களுக்கு அது வருத்தத்தையே விளைவிக்கும். மனித இயல்பைப் 'போலச் செய்து' காட்ட மாட்டாமல், காண்போர்க்கு அருவருப்பை உண்டாக்கி விடுபவர்களை, மனிதர்கள் என்றே நான் மதிக்கமாட்டேன்... நகை வேழம்பர்கள் என நடிப்பவர்கள், தங்களுக்கென்று எழுதப்பெற்ற வசனத்தை மட்டுமே பேசுக. அவர்கள் தம்மனம் போனபடி எதனையும் உளறுமல் இருப்பது இன்றியமையாதது'' (3).

இக்குறிப்புக்களின் வாயிலாக, ஒரு நடிகர் என்ற நிலையில் ஷேக்ஸ்பியர் எத்தகைய அநுபவமும் உணர்வும் வாய்ந்து விளங்கியிருந்தார் என்பதனை, நாம் அறிந்து கொள்ளப் பெறுகின்றனம் அல்லமோ?

இவ்வாறு ஷேக்ஸ்பியர் தம் இயல்பும் உணர்வும் புலனாகுமாறு இடையிடையே சிலசில குறிப்புக்களை 'நெஞ்சின் மிக்கது வாய் சோரும்' என்னும் உண்மைக்குப் பொருந்த விடுத்துச் சென்றுள்ளமை போலவே, கம்பரும் தம் கவியுள்ளமும் கருத்தும் புலப்படுமாறு தமது நூலிற் சிற்சில குறிப்புக்களைப் பொறித்துப் போந்தருளியுள்ளார். கம்பராமாயணம் முழுவதையும் நன்கு நுனித்து ஆராய்ந்து கற்பவர்களுக்கு, இடையிடையே போதரும் அவர் தம் கவிதையியற் குறிப்புக்கள் ஆராப்பெரு விருந்தாக அமையும். இங்கு இயன்ற வரையில் அவற்றை நாம் ஒரு சிறிது ஆராய்ந்து கண்டு மகிழ்வோம்!

---

(3) "Speak the speech, I pray you, as I pronounced it to you, trippingly on the tongue...Nor do not saw the air too much with your hand, but use gently—for in the very whirlwind of your passion, you must acquire and beget a temperance that may give it smoothness.

O, it offends me to the soul to hear a robustious periwing-pated fellow tear a passion to tatters, to very rags, to split the ears of the groundlings...I would have such a fellow whipp'd for o'er doing Termagant; it out-herods Herod. Pray you avoid it.

Be not too tame neither, but let your discretion be your tutor. Suit the action to the word, the word to the action; with this special observance, that you overstep not the modesty of nature... The purpose of playing is to hold, as it were, the mirror up to nature..

Let those that play your clowns speak no more than is set down for them...

- Shakespeare, Hamlet, 3; 2; 1-43

(1) கவிஞரும் சொல்லும் :

அயோத்திமா நகரம் கவிஞர்கள் அனை வராலும் புகழப்பெற்றது. வடநூல் முனி வர்கள் பலரும் போற்றி வாழ்த்தியது. தேவர்களும்கூடத் தம்முடைய உலகத்தை விட்டு இறங்கிப் போந்து, தங்கி வாழ்வ தற்கு விரும்புகின்ற அத்துணை மாட்சிமை வாய்ந்தது.

செவ்விய மதுரம் சேர்ந்தநற் பொருளிற்
சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞர் அனைவரும்; வடநூல்
முனிவரும் புகழ்ந்தது; வரம்பில்
எவ்வுல கத்தோர் யாவரும் தவஞ்செய்து
ஏறுவான் ஆதரிக் கின்ற
அவ்வுல கத்தோர் இழிவதற்கு அருத்தி
புரிகின்றது, அயோத்திமா நகரம்

—நகரப்படலம், 1.

இப்பாடலின்கண் அயோத்திமா நக ரினைப் புகழ்தலே, கம்பரின் கருத்தாயினும், கவிஞர்களைப் பற்றியும், அவர்கள் வழங் கும் சொற்களைப் பற்றியும்கூட, அவர் இடைப்பிறவரல் போலக் குறிப்பிட்டிருக் கும் திறம், நினைத்துணர்ந்து மகிழத் தக்கது. கவிஞர்கள் கையாளும் சொற்கள் செம்மையுடையவை; மதுரம் சேர்ந்தவை; நற்பொருள் உணர்த்துபவை; சீரியவை; கூரியவை; தீவியவை (இனிமை மிக்கவை) என்கின்றார். இத்தகைய சொற்களைக் கையாளும் திறமை பெற்றவர்கள்தான், கவிஞர்கள் ஆவர் எனவும் சுட்டுகின்றார்.

''செவ்விய மதுரம் சேர்ந்தநற் பொருளிற்
சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞர்''

எனவரும் வரிகள், கம்பரின் கவிதை யுணர் வை மட்டுமேயன்றிக் கவிதை குறித்தும், அதிற் பயின்றுவரும் சொற்களுக்குரிய இயல்புகள் பற்றியும் அவர் கொண்டிருந்த பல அநுபவம் மிக்க கருத்துக்களைப் புலப்படுத்துதல் காணலாம்.

(2) புன்கவியின் தெளிவின்மை :

அயோத்திமா நகரம் உயர்ந்த மதில் களை உடையன. அம் மதில்களைச் சுற்றி ஆழமான பெரிய அகழி அமைந்துள்ளது. அதன்கண் உள்ள நீர், தெளிவு இன்றிக் கலங்கியிருக்கின்றது. அணுகுதற்கு இய லாதபடி அதற்குப் பல காவல்கள் அமைந் துள்ளன. மேலும் அங்கே ஏராளமான கொடிய முதலைகளும் உண்டு. இங்ஙனம் அகழியானது, ஆழமும் கலக்கமும் காவ லும் உடையதாய், முதலைகளும் நிறைந் திருக்கும் தன்மையினை, அரிய இனிய பல உவமைகளாற் கம்பர் அழகுற விளக்கு கின்றார்.

அகழியின் பரப்பு, கடல் போன்றது; அதன் ஆழம், பொன் விலை மகளிர் மனம் போன்று, அளவிட்டு அறிய முடியாதது; அதன் கலக்கம், நல்ல புலமை நலம் நிரம்பப்பெறாத ஒருவனின் புன்கவியைப் போலத் தெளிவு இன்றி மருள் விளைவிக் கும் தன்மையது. அதற்கு அமைந்துள்ள காவல், கன்னிமகளிர் தங்கிவாழும் அந்தப் புரம்போலப் பகைவரால் எளிதில் அணுகு தற்கு இயலாத அருமைப்பாடு வாய்ந்தது; அங்கே வாழும் வலிய கொடிய முதலைகள், நம்மை நன்னெறியிற் செல்ல விடாமல், புன்னெறியில் வீழ்த்தி வருத்துகின்ற ஐம் பொறிகளைப் போன்றவை.

அன்னமா மதிலுக்கு ஆழிமால் வரையை
அலைகடல் சூழ்ந்தென அகழி,
பொன்விலை மகளிர் மனம்எனக் கீழ்ப்போய்ப்
புன்கவி எனத்தெளிவு இன்றிக்,
கன்னியர் அல்கும் தடம்என யார்க்கும்
படிவரும் காப்பின தாகி,
நன்னெறி விலக்கும் பொறிஎன, எறியும்
கராத்தது நவிலலுற் றதுநாம் !

—நகரப்படலம், 14

அகழியின் இயல்பினை விளக்குதற்கு அழகிய ஐந்து உவமைகளை ஆராய்ந்து கூறியருளிய கம்பர், 'புலமை நிரம்பாத நிலையில் ஒருவன் பாடும் புன்கவிகள் பொருட்டெளிவு இல்லாமல், பயில் வோர்க்கு ஐயங்களை மிகுவித்து, மயக்கமே விளைத்துக் கேடுசூழும்' என்னும் உண்மை யினை, உணர்த்தியிருத்தல் உளங்கொளத் தக்கது.

(3) **செஞ்சொற் கவியின்பம் :**

இராமபிரான் விசுவாமித்திர முனிவருடன் மிதிலைமா நகருக்குச் செல்கின்றார். மிதிலை நகரின் அழகிய பல்வேறு காட்சிகளைக்கண்டு மகிழ்ந்து கொண்டே, அதன் வீதிகளில் அவர் நடந்து போகின்றார் அது போது மிதிலை நகர அரண்மனையின்கண் உள்ள கன்னிமாடத்தின் மேலிடத்தில், அன்னங்கள் கூடி விளையாடி இன்புறும் இடத்திற்கு முன் புறத்தில், சீதைப் பிராட்டி நின்று கொண்டிருக்கின்றாள். அங்ஙனம் சீதை நின்று கொண்டிருத்தலை இராமபிரான் காண நேர்கின்றது. அந்தச் செய்தியைக் கம்பர் சொல்ல வருகின்றார்.

சீதையின் அழகினை இராமபிரான் காண்கின்றார். சீதையோ பேரழகு வாய்ந்தவள். அவளது அழகின் அளப்பருஞ் சிறப்பினை யெல்லாம் விளக்க முயல்கின்றார் கம்பர்! அவருக்கு ஓர் உவமை போதவில்லை. பல உவமைகளைக் கூறுகின்றார். பொன்னின் சோதியும், பூவின் நறுமணமும், தேனின் தீஞ்சுவையும் போலச் சீதைப்பிராட்டி பொலிந்து தோன்றினாள் என்கின்றார். அப்போதும் அவருக்கு மன நிறைவு ஏற்படவில்லை. ஆதலின் ஒரு சிறந்த கவிஞன் செம்மையான சொற்களால் யாத்த ஒரு சிறந்த கவிதையினால் விளையும் இன்பம் எத்தகையதாக இருக்குமோ, அவ்வாறு சீதை பொலிந்து நின்றாள் எனப்பாடி இன்புறுகின்றார்.

> **பொன்னின் சோதி, போதினில் நாற்றம்**
> **பொலிவே போல்,**
> **தென்னுண் தேனில் தீஞ்சுவை,**
> **செஞ்சொற் கவியின்பம்**
> **கன்னிம் மாடத் தும்பரின் மாடே**
> **கனி பேடோடு**
> **அன்னம் ஆடும் முன்றுறை கண்டு**
> **ஆங்கு அயல் நின்றார்.**
>
> —மிதிலைக்காட்சிப்படலம், 23.

ஒரு காலத்து ஒரு பொறிக்கு மட்டுமே இன்பந் தரவல்ல பொருள்கள், உலகிற் பல உண்டு. ஆனால் ஐம்பொறிக்கும் ஒரு சேர இன்பம் தரவல்ல பெருமை, பெண்களுக்கு உரியதாம். இதனைக் 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணேயுள' எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறுவர். அம் முறையிற் சீதைப் பிராட்டியின் பேரழகு, இராமபிரானின் ஐம்பொறிகளுக்கும் ஒரு சேரப் பேரின்பம் தரவல்ல நிலையிற் சிறந்து பிறங்கிற்றும். இதனை விளக்குவதற்குக் கம்பர் பொன்னின் சோதி, போதினில் நாற்றம், தேனில் தீஞ்சுவை என்பனவற்றோடு, செஞ்சொற் கவியின்பம் எனவும், சீதைப்பிராட்டி பொலிந்து திகழ்ந்தாள் எனக் குறிப்பிட்டருளியுள்ளார் இதனால், கம்பர் வெறும் கவிஞர் மட்டுமேயல்லர், கவிதையின்பம் இனையதென்று அனுபவித்துணர்ந்து திளைத்தவரும் ஆவர் என நாம் உணரலாம்; இல்லையேல், சீதையினையே அவர், "செஞ்சொற் கவியின்பம்" என்று சிறப்பித்து உருவகம் செய்து பாடியிருத்தல் இயலாது என்பது திண்ணம். 'கவியின்பமாவது உலகம் முழுவதையும் அரசனாக இருந்து ஆட்சி செய்து பெறும் இன்பத்தைக் காட்டிலும் மேம்பட்டு உயர்ந்தது என்று, சிவபெருமான் சான்றாக யான் ஆணையிட்டு வலியுறுத்திக் கூறுவேன்' என்னும் பொருளமைய, "அர (ன்) சாட்சியாக அறைவேன்; கவியின்ப அரசாட்சி இன்பின் உயர்வாம்" என்று, பேரறிஞர் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் அவர்கள் பாடியிருத்தல், இங்கு நினைந்து இன்புறற்பாலது.

(4) **சான்றோர் கவி :**

இராமபிரான் தன் தந்தையாகிய தசரதனின் கட்டளைப்படி, சீதையோடும் இலக்குவனோடும் காட்டிற்குச் செல்லுகின்றார். அங்கே அகத்தியமுனிவர், 'நீவிர் உறைவதற்கு ஏற்ற இடம் கோதாவரிக் கரையில் உள்ள பஞ்சவடி என்னும் ஆச்சிரமமே யாகும்' என்று கூறுகின்றார். வழியில் அவர்கள் சடாயுவைச் சந்தித்து மகிழ்கின்றனர். சடாயு அவர்களுக்குப் பஞ்சவடிக்குச் செல்லும் வழியினைக் காட்டுகின்றார். மூவரும் கோதாவரிநதி தீரத்தை அடைகின்றனர். அக் கடவுள்மா நதியின் அழகும் சிறப்பும் கண்டு இன்புறுகின்றனர்.

இங்ஙனம் கோதாவரியினை வீரர் கண்டார் என்பதொன்றே, கம்பர் பாட வேண்டுவது ஆயினும், கோதாவரியின் வெள்ளம் போல, அவர் தம் கவிதை யுள்ளத்திற் கற்பனை வெள்ளம் பெருகி விடுகிறது. ஆதலின், கோதாவரி நதியினைச் சான்றோர் கவிதையோடு ஒப்பிட்டுக் காட்டி உள்ளம் களி துளும்புகின்றார் கம்பர்.

கோதாவரி நதியானது, தான் பாயும் நாட்டிற்கு அழகும் சிறப்பும் அளிக்கின்றது; செழிப்பை யுண்டாக்கி விளை பொருள்களை மிகுவிக்கின்றது; வெள்ளப் பெருக்கின் மிகுதியினால் பற்பல கால்வாய்களின் வாயிலாக எங்கும் பரவி நிறைகின்றது; இறங்கு நீர்த்துறைகள் பலவற்றை அங்கங்கே கொண்டு ஒளிர்கின்றது; மலை காடு வயல் மணல்வெளி கடற்கரை என்னும் ஐவகை நிலப் பகுதிகளின் வழியாகவும் ஓடிப் பாய்ந்து பயன் தருகின்றது; பளிங்கு போல விளங்கி மிகவும் தெளிந்து காணப்படுகின்றது; வற்றாத பெருநதியாதலால் குளிர்ச்சி நிரம்பி இடையறாமல் ஓடிக் கொண்டே யிருக் கின்றது.

சான்றோர் அருளிய கவிதையோ, நாட்டிற்குச் சிறப்பையளித்து உலகுக்கும் நலம் பயக்கின்றது; அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பெரும் பொருள்களையும் நல்குகின்றது; கற்பவர்களின் அறிவுக்கு விருந்தாக அமைகின்றது; அகத்திணை புறத்திணை என்னும் பொருட்டுறைகளை யுடையதாய்ப் பயில்பவர்க்குக் கவலைகளை நீக்கி ஆறுதல் அளிக்கின்றது; குறிஞ்சி முல்லை பாலை நெய்தல் மருதம் என்னும் ஐந்திணை வளங்களையும், அவற்றிற்குரிய புணர்தல் இருத்தல் பிரிதல் இரங்கல் ஊடல் என்னும் ஐவகை ஒழுகலாறுகளையும் பற்றிச் செவ்விதின் விளக்குகின்றது; நமக்கு எழும் ஐயங்களை நீக்கித் தெளிவு பெறச் செய்கின்றது; மெல்லென்ற ஓசை யுடன் தடையறச் செல்லும் நடையழகு பெற்று விளங்குகின்றது. இங்ஙனம்,

1. புவியினுக்கு அணியாதல்
2. ஆன்ற பொருள் தருதல்
3. புலத்திற்றாதல்
4. அவியகத்துறைகள் தாங்கல்
5. ஐந்திணை நெறி அளாவல்
6. சவியுறத் தெளிதல்
7. தண்ணென்று ஒழுகல்

என்னும் பலவகை ஒப்புமைகளும், கோதாவரி நதிக்கும் சான்றோர் கவிதைக் கும் இடையே விளங்குதலைச் சுவைபெரு கவும், சிலேடை என்னும் அணிநலம் அமையவும் பாடியிருக்கும் கம்பரின் கவிதைத்திறம், சாலவும் பாராட்டிக் களிப்பதற்குரியது.

புவியினுக்கு அணியாய், ஆன்ற
பெ ருள்தந்து, புலத்திற் றாகி,
அவியகத் துறைகள் தாங்கி,
ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து, தண்ணென்
றொழுக்கமும் சான்று, சான்றோர்
கவிஎனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்!

## (5) கவிஞர் சொற்பொருள் :

இராமபிரான் சபரிக்கு வீடுபேறு அளித்த பின்னர்ப் பம்பை என்னும் பெரிய பொய்கையினை அடைகின்றார். ஆதலின் கம்பர் அதன் சிறப்பினைப் புனைந்து பாட முற்படுகின்றார். பம்பைப்பொய்கை மிகவும் அழகானது. கீழே பாதாளம் வரையில் ஆழ்ந்து சென்று, நாகர்கள் வாழும் இடம் இதுதான் என்று காட்டக் கூடிய தன்மை அதற்கு உண்டு. அத்தகைய அதன் ஆழம், சிறந்த கவிஞர்கள் பயன்படுத்தும் சொற் களின் பொருள்கள் எங்ஙனம் மிகவும் ஆழ்ந்து ஆழ்ந்து நுணுகிச் செல்லுமோ, அங்ஙனம் பெரிதும் நெடிது ஆழ்ந்து சென்றுள்ளது என்கின்றார்.

எற்பொரு நாகர்தம் இருக்கை ஈதெனக்
கிற்பதோர் காட்சிய தென்னினும் கீழுறக்
கற்பகம் அனையஅக் கவிஞர் நாட்டிய
சொற்பொருள் ஆம்எனத் தோன்றல் சான்றது

—பம்பைப்படலம், 5.

கற்பக மரம் நினைத்த பொருளை யெல்லாம் விரைந்து கொடுக்க வல்லதாதல் போல, உள்ளத்திற்கு இனிய பொருள் களைப் பற்றியெல்லாம், உடனே தங்கு தடையின்றி விரைந்து பாட வல்லவர்களே கவிஞர்கள்! அத்தகைய சிறந்த கவிஞர்கள் வழங்கும் சொற்கள் மாட்சி மிக்கனவாக விளங்கும். அவற்றின் ஆழ்ந்த அழகிய நுண்பொருள்கள், ஆராயுந்தோறும் மேன் மேல் விரிந்து வளர்ந்து செல்லும் இயல் பினவாகத்திகழும். இவ்வுண்மையினைக் கம்பர் இப்பாடலிற் செம்மையுற விளக்கி யிருக்கும் தன்மை, கற்போர்க்குக் கழிபேருவகை பயப்பதாகும்.

## (6) நாவரும் கிளவிச் செவ்விநடை :

இராமபிரான் திருவுள்ளப் படியே சுக்கிரீவன், வானர வீரர்களை நான்கு திசை களுக்கும் உய்த்துச் சீதையைத் தேடி வருமாறு அனுப்புகின்ருன். அதுபோது சுக்கிரீவனின் கட்டளைப்படி தென்றிசை நோக்கிச் செல்ல உள்ள அநுமான்பால், இராமபிரான் சீதைப்பிராட்டியின் அடை யாளங்களை யெல்லாம் எடுத்துக் கூறியருள் கின்ருர். சிதையின் நடையழகு தேவர்களும் கண்டு வியந்து வணங்கத் தக்கது. அன்னத் தின் நடையோ, பிடியின் நடையோ, அதற்கு ஒருசிறிதும் ஈடாக மாட்டா. சிறந்த புலவர் பெருமக்களின் நாவிலே இருந்து பெருகும் அழகிய கவிதையின் நடையும் சொல்லும் (Style and Diction) எத்துணை அழகும் சிறப்பும் உடையன வாக மிளிருமோ, அத்தகைய நடை யழகினை உடையவள் சீதை என்று இராம பிரான் இயம்பியதாகக் கம்பர் கவினுறப் பாடியருள்கின்ருர்.

**பூவரும் மழலை அன்னம்**
**புனைமடப் பிடியென் றின்ன**
**தேவரும் மருளத் தக்க**
**செலவின எனினும் தேறேன்;**
**பாவரும் கிழமைத் தொன்மைப்**
**பருணிதர் தொகுத்த பத்தி**
**நாவரும் கிளவிச் செவ்வி**
**நடைவரும் நடையள் நல்லோய்;**

—நாடவிட்ட படலம், 64.

இதன்கண் ‘குலவிச்சை கல்லாமற் பாகம்படும்’ என்றபடி, தொன்றுதொட்டுப் பாரம்பரியமாக வரப்பெறும் புலமை சிறப் புடையதாகலின், அத்தகைய புலவர் பெருமக்களைத் ‘தொன்மைப் பருணிதர்’ என்று சிறப்பித்தார். அத்தகைய சிறந்த புலவர்களுள்ளும் ஒரு சிலர்க்கே முயல வேண்டாமல் எளிதாகக் கவிபாடும் ஆற்றலும் பேறும் வாய்க்குமாகலின் ‘**பாவரும் கிழமை**’ என்று பாராட்டினர். அனைய கவித்திறம் அமையப் பெற்ற வர்களின் நாவினின்று மலரும் சொற்களும் சொற்றொடர்களும் தாமே ஒழுங்குபட்டு வரிசையின் அமைந்து செம்மை மிக்க சிறந்த நடையழகு வாய்ந்து திகழுமாகலின், ‘தொடுத்த பத்தி **நாவரும்கிளவிச் செவ்வி நடை**’ எனப் போற்றிப் புகழ்ந்தார். இவ்வாற்ருல் நமக்குக் கம்பரின் நல்ல கவிதையுள்ளம் புலனுதல் காணலாம்.

## (7) நல்லியல் நவையறு கவிஞர் சொல் :

போர்க்களத்தில் வச்சிரமுட்டி, பிரகத் தன், துன்முகன் முதலிய வீரர்கள் இறந்து பட்ட செய்தி, இராவணனின் செவிகளை எட்டுகின்றது. அதுகேட்டு வருத்தமும் சீற்றமும் அடைந்த இராவணன், தானே போர்க்களத்திற்குப் புறப்பட்டுப் போகின் ருன். போர் முனைக்கு இராவணனே போந் துள்ளான் என்னும் செய்தியினை, இராம பிரான் அறிகின்ருர். அவரும் போர்ப் பறந்தலைக்குச் செல்ல விரும்பினர். அதன் பொருட்டுத் தம் வற்கலை யாடையின்மேல், வயிரவாளை எடுத்து அணிந்தார். சேவடியில் வீரக்கழல் சேர்த்தினர். மார்பிற் கவசம் தரித்தார். பின்னர்த் தம்முடைய தோளில் அம்புப் புட்டில் ஆகிய தூணியைத் தாங் கினர். அத்தூணி எத்தகையது தெரியுமா? சிறந்த நல்ல குற்றமற்ற கவிஞர்களின் நாக்குப் போன்றது அது! அதனில் இடை யருது குறைவின்றிப் பெருகிக் கொண்டே இருக்கும் அப்புகளோ, இணையற்றுச் சிறந்த நல்லியல் நவையறு கவிஞர்தம் நாவினின்று இடையருமல், தங்கு தடை யின்றிப் பெருகி வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும் ஆற்றல் மிக்க அழகிய அரிய சொற்கள் போன்றவை என்கின்ருர் கம்பர்!

பல்லியல் உலகுறு பாடை பாடு அமைந்து
எல்லையில் நூற்கடல் ஏற நோக்கிய
நல்லியல் நவையறு கவிஞர் நாவரும்
சொல் எனத் தொலைவிலாத்
தூணி தூக்கினன்

—முதற்போர் புரிபடலம், 114.

கவிஞர்கள் என்போர் எந்த ஒரு நூலையும் முறையாகக் கற்று முயலாமலே, வாயில் வந்தவாறு வெறும் சொற்சதிர்களால் வரப்பின்றிப் பாடி விடுபவர் அல்லர். "கல்லாதான் ஒட்பம் கழிய நன்று ஆயினும் கொள்ளார் அறிவுடையார்" எனத் திருவள்ளுவர் கூறுதற்கேற்ப, அத்தகையவர்களின் கவிகள் **'நன்கவி'** எனப் போற்றப்பெறுமல் **'புன்கவி'** எனவே இகழ்ந்து புறக்கணிக்கப் படும். ஆதலின் கவிஞர்கள் என்போர் நல்ல மொழியறிவு பெற்றிருத்தல் வேண்டும். எனவே **'பல்லியல் உலகுறு பாடைபாடு அமைந்து'** என்றார். பல மொழிகள் பயிலுதல் இயலாவிடினும், தாம் அறிந்த மொழியிலாதல் ஆழ்ந்த புலமை கைவரப்பெற்று, அதன் எல்லையற்ற நூற்கடலின் எல்லை கண்டு கற்று வல்லவர்களாக விளங்குதல் வேண்டும். ஆதலின், **'எல்லையில் நூற்கடல் ஏற நோக்கிய'** என்றார். மேலும் கவிஞர்கள் என்போருக்கு நற்பண்பு-நல்லொழுக்கம்-நற்குறிக்கோள் என்பன மிகவும் இன்றியமையாதன வாகலின், அவையனைத்தும் அமையப் பெற்றவர்களே, சிறந்த குற்றமற்ற கவிஞர்கள் எனத் தக்கவர் ஆவர் என்பது, கம்பரின் கருத்து. எனவே, **'நல்லியல் நவையறு கவிஞர்'** என்றார். இத்தகைய கவிஞர்களுக்கே,

"எனைவைத்தி எனைவைத்தி எனச்சொற்கள்
இடையிடைநின் றிரந்து வேண்ட,
இனிவைப்பாம் இனிவைப்பாம் ......"

என்று கூறக்கூடிய முறையில், அவர்தம் தூய நாவினின்று சீரிய சொற்கள் இடையருமல் தொடர்ந்து தாமே வெளிப்படும். இவ்வுண்மையினை வலியுறுத்த **'நவையறு கவிஞர் நாவரும் சொல்'** என்றார்.

இராமபிரான் போருக்குப் புறப்பட்டு, அம்புப் புட்டிலை எடுத்துத் தம் தோளில் அணிந்து கொண்டார் என்று சொல்லவரும் இடத்தில், இங்ஙனம் கவிஞர் பெருமான் ஆகிய கம்பர், தம் கவியுள்ளத்தின் இயல்பு புலப்படும் வண்ணம், கவிஞர்களின் இயல்பினையும், அவர்களுக்குரிய அளவிலாச் சொல்வளத்தின் நிறைவையும் உவமையாக எடுத்துக் காட்டிப் பாடியிருக்கும் திறம், கழிபேருவகை விளைவிப்பதாகும்.

## (8) ஆற்றற் கவிஞரின் அங்கதம் :

இராமபிரான் அநுமன் மீது இவர்ந்து போர்க்களம் சென்றார். அரக்கர் எறிந்த படைக்கலங்களை யெல்லாம் வானர வீரர்களின் உடலிற் படாதபடி தடுத்து விலக்கினர். முதல் நாட் போரிலேயே, இராவணன் ஒருவன் மட்டுமே எஞ்சி நிற்க எதிர்த்து வந்த அரக்கரை யெல்லாம் ஒழித்தார். இராவணனின் வில்லை ஒடித்தார். அவனது தேர் குடை கொடி ஆகிய அனைத்தையும் பொடிப் பொடி ஆக்கினர். தம் அம்பொன்றினுல், அவனுடைய மணிமுடியையும் இடறிக் கீழே விழுமாறு செய்தார். அதனுல் இதுகாறும் போருக்குச் சென்றால் 'வெல்லும் அவ்வளவு அல்லது தோற்றிலா விறலோன்' ஆகிய இராவணன் செய்வதறியாமல் திகைத்து வெள்கி நின்றான்.

அப்போது இராவணன் எவ்வாறு இருந்தான் தெரியுமா? ஒருவன் எவ்வளவு தான் சிறப்பும் செல்வாக்கும் மிக்கவனுக இருந்தாலும் "பெண்கொலை புரிந்த நன்னன் போல வரையா நிரையத்துச் செலீஇயரோ?" என்று பரணர் பாடியது போல, ஆற்றல் நிறைந்த ஒரு நல்ல பெரிய கவிஞனின் பகைமையை வருவித்துக் கொண்டு, அக்கவிஞனுல் அங்கதம் (Satite) என்னும் வசைகவி (Lampoon) யினைப் பாடப்பெறுவான் எனின், அதன்

விளைவாகத் தன் சிறப்பும் செல்வாக்கு மெல்லாம் அழிந்தொழிந்து போக, எவ்வாறு ஒருவன் இழிவடைந்து தாழ்ந்து வருந்தி நிற்பானே, அவ்வாறு இராவண னும் இராமபிரானல் மணிமுடியிழந்து இழிதகவுற்று வருந்தி நின்ருனும்.

மாற்ற ருந்தட மணிமுடி
 இழந்தவாள் அரக்கன்,
ஏற்றம் எவ்வுல கத்தினும்
 உயர்ந்துளன் எனினும்,
ஆற்றல் நல்நெடுங் கவிஞன்
 அங்கதம் உரைப்பப்
போற்ற ரும்புகழ் இழந்தபேர்
 ஒருவனும் போன்ருன்.

—முதற்போர்புரி படலம், 249.

இப்பாடலில் கவிஞர்களின் இணையிலா ஆற்றலையும், அவர்களின் அன்பைப் பெருமற் பகைமையை அடைந்து அங்கதம் பாடப்பெறுபவர்கள் கேடுற்று வருந்துதலையும், கவிஞர்பிரான் ஆகிய கம்பர் குறிப்பிட்டருளி யிருத்தல், கருதியுணரற் பாலது. 'வில்ஏர் உழவர் பகை கொளினும் கொள்ளற்க; சொல்ஏர் உழவர் பகை' எனத்தெய்வப் புலவர் திருவள்ளுவர் தாமும் கூறியிருத்தல் காணலாம்.

(9) பல் அலங்காரப் பண்பு :

இராமபிரானல் மணிமுடி இழந்த இராவணன் போர்க்களத்தினின்று, பூதலம் என்னும் நங்கை தன்னை நோக்கி, வெறுங் கையோடு இலங்கைபுக்கான். சானகி நகுவள் என்றே அவன் மனம் நாணத்தாற் சாம்பியது. அந்நிலையில் பாட்டனகிய மாலியவான் இராவணன்பால் வந்து, அவனுக்கு ஆறுதல்கூறி, உற்றது வினவினன். அதுபோது இராவணன் இராமபிரானின் பல்வகை ஆற்றல்களையும் எடுத்துக் கூறி வியந்து பின்வருமாறு புகழ்கின்ருன்.

இராமபிரானின் வில்லாற்றலுக்கு இணையே இல்லை. வேதங்கள் உண்மை தவறினலும், அவனுடைய அம்புகள் தம் குறி தவறமாட்டா. அவை கள் பல திறப்பட்டன. அவைகள் மேன் மேற் கிளைத்து, ஒன்று பத்து நூறு ஆயிரம் எனப் பெருகிக் கொண்டே செல்லும் இயல்பின. சிறந்த கவிஞர்களின் நாவினின்று தடைப்படாமல் நிரலே இயைந்து வெளிப்படும் பொருள் பொதிந்த சொற்கள் போலவும், அச் சொற்களால் முறையே அமையும் எதுகை மோனை முதலிய தொடை வகைகள் (Rhymes and alliterations) போலவும், அவற்றில் இயைந்து அழகுற அமையும் இசைத்திறங்கள் (Rhythm) போலவும், அவ்விசைத் திறன் அமைந்த செய்யுட்களுக்கு இனிமை யூட்டும் பலவகை அணிகள் (Figures of Speech, Rhetoric) போலவும், இராமபிரானின் வில்லினின்று புறப்படும் அம்புகள் எல்லாம் வியத்தகு செயல்கள் புரிகின்றன. 'ஒப்புவேறு உரைக்க லாவதில்லை. வேதம் தப்பின போதும், அன்னன் தனு உமிழ் சரங்கள் தப்பா' என்கின்ருன் இராவணன்!

நல்லியற் கவிஞர் நாவிற்
 பொருள்குறித் தமர்ந்த நாமச்
சொல்லெனச் செய்யுள் கொண்ட
 தொடைஎனத், தொடையை நோக்கி
எல்லையில் செல்வம் தீரா
 இசைஎனப், பழுது இலாத
பல்லலங் காரப் பண்பே
 காகுத்தன் பகழி மாதோ.

—கும்பகருணன் வதைப்படலம், 22

இவ்வினிய பாடலின்கண் கவிஞர்களின் சிறப்பினை 'நல்லியற் கவிஞர்' என்றும்; அவர் தம் நாவினின்று வெளிப்படும் சொல்லின் இயல்பினைப் 'பொருள் குறித்து அமர்ந்த நாமச்சொல்' என்றும்; அச்சொற்களினல் செய்யுளும், செய்யுட் டொடைகளும், செய்யுட்கு அழகுதரும் சிறந்த அணிவகைகளும் அமையும் அருமைப் பாட்டினைப் 'பல்லலங்காரப் பண்பே' என்றும்; கம்பர் குறிப்பிட்டருளி யிருத்தல், நினைத்தொறும் மகிழ்ச்சி விளைவிப்பதாகும்.

(10) புலவர் சொற்றுறை :

இலக்குவனுக்கும் கும்பகருணனுக்கும் இடையே போர் நிகழ்கின்றது. கும்ப

கருணன் தன் தோள்கொட்டி ஆர்ப்பரித்தான். அவ்வார்ப்பரிப்பு கூற்றுவனையும் துணுக்குறச் செய்தது. அவனால் வானரப் படையில் ஓர் பாதியின் மேலும் அன்று தேய்ந்தது. அது கேட்டுச் சினந்து, சுமித்திரை பயந்த சிங்கம் ஆகிய இலக்குவன், அரக்கர்களைச் சென்று தாக்கினான். ஒரு சிலர் கைகள் வெட்டுண்டனர். ஒரு சிலர் செவி அறுபட்டனர்; வேறு சிலரின் மூக்குகள் தனித்து விழுந்தன. மற்றும் சிலர் கால்கள் முறிந்தனர். பிறர் சிலருடைய கண்கள் பழுதுற்றன. இங்ஙனம் இலக்குவனின் அம்புகள் பகைவரின் ஒவ்வோர் உறுப்பினையே அறுத்தொழித்தமை, புலவர் பெருமக்கள் சிலர் தமக்குக் கொடுக்கப்பெறும் பொருளின் அளவிற்கு ஏற்றபடி கொடுப்போரைப் புகழ்ந்து செய்யுட்கள் இயற்றி முடித்தலைப் போன்று விளங்கியது.

சிலவ ரைக்கரம்; சிலவ ரைச்செவி;
சிலர் நாசி;
சிலவ ரைக்கழல்; சிலவ ரைக்கண்
கொளும் செயலால்,
நிலவ ரைத்தரு பொருள்வழித்
தண்தமிழ் நிரப்பும்
புலவர் சொற்றுறை புரிந்த வும்போன்
றன சரங்கள்.

—கும்பகருணன் வதைப்படலம், 226.

(11) தமிழ்நெறி வழக்கம் ;

இராவணனின் மூலபல சேனைகள்யாவும் போரில் மடிந்தொழிந்து போகின்றன. அதனை அவன் கேள்வியுறுகின்றான். அச்செய்தி உண்மைதானா? என்று அறியத் தானே நேரில் போர்க்களம் காணப்போதருகின்றான். அங்கே அவன் பல துயரம் மிக்க காட்சிகளைக் காண்கின்றான். அவனது கண்களில் இருந்து வருத்தத்தினால் நீர் கொழிக்கின்றது; சீற்றத்தினால் குருதி கொப்பளிக்கின்றது. இராமன் தன் வில்லினின்று பொழிந்த அம்புகளினால் அரக்கர் பல்லாயிரவர் இறந்து கிடத்தலையும், இரத்த வெள்ளம் ஆறுபோலப் பெருக்கெடுத்துக் கடலிற் சென்று கலத்தலையும், கடல் அதனையுண்டு உமிழ்ந்து அலைமோதுதலையும், இராவணன் கண்டான்.

குமிழிநீ ரோடும் சோரிக்
கனலொடும் கொழிக்கும் கண்ணன்,
தமிழ்நெறி வழக்கம் அன்ன
தனிச்சிலை வழங்கச் சாய்ந்தார்;
அமிழ்பெருங் குருதி வெள்ளம்
அற்றுவாய் முகத்தில் தேக்கி
உமிழ்வதே ஒக்கும் வேலை
ஓதம்வந்து, உடற்றக் கண்டான்.

—இராவணன் களங்காண் படலம், 25

இப்பாடலிற் கம்பர் இராமனின் ஒப்புயர்வற்ற வில்லைத் தனிச்சிலை என்று பாராட்டுகின்றார். அவ்வில்லின் ஒப்புயர்வற்ற தன்மையினை விளக்க, வேறு பிற மொழிகளுக்கு இல்லாத இலக்கண நெறிமுறைகளும் (Grammatical Refinements), மரபு வழக்குகளும் (Traditional & Idiomatic Usages) ஆகியவற்றை, ஒப்பற்ற நிலையில் பெற்று விளங்கும் ஒப்புயர்வற்ற தமிழ் மொழியின் சிறப்பே, அவ்வில்லுக்கு ஏற்ற உவமையாகும் எனக் கருதி, 'தமிழ்நெறி வழக்கம் அன்ன தனிச்சிலை' எனப்புகழ்ந்து போற்றுகின்றார். கம்பர் தமிழ்ப் பெருங் கவிஞர். தமிழால் உயர்ந்தவர். தமிழை உயர்த்தியவர். தமிழ் மொழி நூற் கடலின் ஆழமெலாம் கண்டு அளந்தறிந்த தமிழ்ப் பெரும் புலவர். தமிழின் அருமை பெருமைகள் அனைத்தையும் தகவுற உணர்ந்தவர். அதனால்தான் அவர்தம் தமிழியற் கவிதை நெஞ்சம், இராமனின் இணையற்ற வில்லுக்கு உவமைகூற வருங்கால், தமிழ் நெறி வழக்கின் தன்னிகரற்ற தன்மையினை எடுத்துக் காட்டியருள்கின்றது. இதனாற் கம்பரின் கவிதையுள்ளமும், தமிழுள்ளமும் நமக்கு நன்கினிது விளங்குதல் காணலாம்.

முடிவுரை :

இதுகாறும் கூறிவந்த வாற்றால், கம்பரின் பெருமையும், அவர் தம் கவிதையின்

அருமையும், அனைவருக்கும் புலனாகும். இதுபற்றியே நம் தேசிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்.

''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை வெறும் புகழ்ச்சி யில்லை...''

எனப்பெரு முழக்கம் புரிந்தருளினர். இத்தகைய பெருங் கவிஞர்பிரான் ஆகிய கம்பர் அருளிய காவியத்தினை முறைப்படி ஆராய்ந்து கற்றின்புறுதல் நம் அனைவருக்கும் கடமையாகும்.

''அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்தினி திருக்கும் கவியுளம் காண்கிலார்''

எனப் பாரதியார் பாடியிருப்பது போன்று, கதைச்சுவை ஒன்று மட்டுமே கருதியன்றி, ஆழ்ந்து இனிதமைந்திருக்கும் கம்பர் தம் கவியுளத்தையும் கண்டு மகிழும் முறையில், நாம் அவர் தம் நூலைக் கற்றல் இன்றியமையாதது "நாங்கள் இந்தியாவை இழந்தாலும் இழப்போம்; ஆனால் எங்கள் ஷேக்ஸ்பியரை இழக்க ஒரு போதும் ஒருப்பட மாட்டோம்'' (4) எனக் கூறிப், பிற நாட்டார் தம்முடைய நாட்டுக் கவிஞர்களையும், அவர்கள் இயற்றிய நூல்களையும் பெரிதும் மதித்துப் போற்றி வருதலைப் பின்பற்றி, நாமும் கம்பர் போன்ற பெருங் கவிஞர்கள் பலரும் அருளிய நூல்களை ஆராய்ந்து கற்றுப் பயன் அடைந்து, நலம் பெற முற்படுவோமாக!

(4) Consider now, if they asked us, will you give up your Indian Empire or your Shakes-peare, you English ... Really it were a grave question ... Indian Empire, or no Indian Empire, we Cannot do with out Shakespeare. Indian Empire will go, at any rate, some day; but this Shakespeare does not go, he lasts for ever with us; we cannot give up Shakespeare''

—Thomas Carlyle, The Hero as Poet.

★



சென்னை-ஆயிரம் விளக்கு-அருள்மிகு இரத்தின விநாயகர்-துர்க்கையம்மன் கோயிலில் திருக்குடமுழுக்குப் பெருவிழா நிகழ்ந்த பொழுது கலந்து கொண்ட பெருமக்கள் (8-2-73)

# அருட்பெருங் காப்பியம்

சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான்
திரு. சி. அருணைவடிவேல் முதலியார், தருமபுரம்.

காப்பிய இலக்கணங்களுள் முதலாவ தாய் உள்ளது காப்பியங்களின் தொடக்க முறை, வாழ்த்து வணக்கம் வருபொருள் உரைத்தல் என்னும் மூன்றனையுமோ, அல்லது ஒன்றிரண்டையோ கூறித் தொடங்கல் வேண்டும் என்பது.

தமிழ்க் காப்பியங்களுள் முதலாவ தாகிய சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துப் பாடலுடன் தொடங்குகின்றது. அதில் முதற்கண் உள்ள போற்றுதல்கள் வணக் கங் கூறியன. இறுதியில் சோழனை வாழ்த் தும் வாழ்த்துக் கூறப்பட்டது. அரசனை வாழ்த்தவே, அவனி முழுவதையும் வாழ்த் தியதாயிற்று. வருபொருள் உரைத்தல் நூலின் தொடக்கத்திற்கு முன்பே உள்ள பதிகமாகும்.

அனபாயன் விரும்பிக் கேட்ட சிந்தா மணி, வணக்கம் வருபொருள் உரைத்தல் என்ற இரண்டையே முதற்கண் கூறி அமைந்தது. வாழ்த்து அதன்கண் இடம் பெறவில்லை. வருபொருள் உரைத்ததே பதிகம்.

சேக்கிழாரது அருட்பெருங் காப்பியத் துள் வணக்கம், காப்பிய இலக்கணத்திற்கு உட்பட்டோ அல்லது இலக்கிய மரபிற்காக வேண்டியோ கூறப்படாமல், இயல்பிலே கூறவேண்டி அமைந்தமை நோக்கத்தக்கது சேக்கிழார் தாம் செய்ய விரும்பும் பெருங் காப்பியம் பொதுவாகப் புலமைத் திறத் தால் மட்டும் செய்யும் காப்பியமாகாது, அருட்பெருங் காப்பியமாய் இருத்தலால், அதனை அருட்டுணை கொண்டல்லது பாட இயலாது என்னும் கருத்தினால், தில்லைக் கூத்தப் பெருமானை அடைந்து அவனது அருளை வேண்டி நின்றபொழுது அவன், "உலகெலாம்" என்னும் ஒரு பெருமொழி யைத் தனது திருவருட் குறிப்பின் அடையாளமாக அம்பலத்தில் அனைவரும் கேட்க வானிழலாக வழங்கியருளினான். ஆகவே அவ்வருட் செயலுக்கு நன்றி செலுத்தும் கடப்பாடாக அப்பெருமானை முதற்கண் வணங்கியே காப்பியத்தைத் தொடங்க வேண்டுவது சேக்கிழாருக்கு இன்றியமையாக் கடமையாயிற்று. அதனால் "உலகெலாம்" என்ற அச்சொல்லையே முதலாகக் கொண்ட ஒரு பாடலாலும், பின்பு முழுவதும் தம் சொல்லால் அமைந்த மற்றொரு பாடலாலும் அப்பெருமானுக்கு வணக்கம் கூறினார். மூன்றாவது பாடலாக விநாயகவணக்கம் கூறியதே சிவநெறி மரபு பற்றியது. இருப்பினும், திருமுறைகள் யாவும் சிவபெருமானையே முதலாக உடை யனவாதலின் பன்னிரண்டாந் திருமுறை யாகிய சேக்கிழாரது பெருங் காப்பியமும் மாறுபடாமை அறிந்து இன்புறத்தக்கது.

இவ் வணக்கங்கட்குப் பின்னர்ச் சேக் கிழார், திருமுறைப் பேரவையை வாழ்த் தும் முகத்தால் வாழ்த்துக் கூறினார். நாயன் மார் அருளிச்செய்த திருமுறையை ஓதி உணர்ந்து மகிழும் புனிதர்களது பேரவை வாழின், உலகம் வாழ்தல் உறுதி என்பது கருத்து. இவ்வணக்கமும், வாழ்த்தும் சிந்தாமணியின் தொடக்கத்தில் உள்ள 'அருக சரணம், சித்தசரணம்' என்பவற் றோடு ஒத்திருப்பினும், இவை அவற்றைப் போலச் செய்யவேண்டும் எனக் கருதிச் செய்யப்பட்டன ஆகாமை நன்கு விளங்கும்

சேக்கிழாரது அருட்பெருங் காப்பியத் தில் 'வணக்கம், வாழ்த்து' என்பவற்றை

அடுத்துக் காணப்படுவது அவையடக்கம். இது சிந்தாமணியிலும் காணப்படுவதாயினும், தமிழ் இலக்கியங்களின் தொன்று தொட்ட மரபே என்பது,

''அவையடக் கியலே அரில்தப நாடின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென்று
எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே''

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் இனிது விளங்கும். இந் நூற்பா உரையுள் நச்சினார்க்கினியர் சிந்தாமணி அவையடக்கச் செய்யுளையும் உதாரணமாகக் காட்டினார். தொல்காப்பிய நெறியில் அவையடக்கம் ஒரு தனிச் செய்யுள் மரபாகவும் அறியப் படுகின்றது. அதனால், தொடர்நிலைச் செய்யுளிலும் அஃது இடம்பெறுதல் இயல்பே.

இவ் அவையடக்கத்தினையும் மரபு மாத்திரமன்றி, இன்றியமையாது கூற வேண்டிய கடப்பாடு சேக்கிழாரது அருட்பெருங் காப்பியத்திற்கு உளதாயினமை, எண்ணி உணரத்தக்கது.

சேக்கிழார் சொல்ல எடுத்துக்கொண்ட பொருள் உண்மையிலே சொல்லில் அடங்காதது. எவ்வாறெனில், அருள்வழி நின்ற அனுபவங்களே அடியார்களது வரலாறு ஆதலின், அனுபவம் சொல்லால் சொல்லிக் காட்ட இயலாதது. அவ்வனுபவமும் அடியவரது அன்பும், ஆண்டவனது அருளும் இணையும் இயைபினால் விளைவது. அந்த அன்பும், அருளும் தனித்தனி நோக்கும் வழியும் அளவிற் படாதன எனில், இரண்டும் இணைந்த இயைபு எங்ஙனம் அளவிற்படும்! ஆகவே, அடியாரது அனுபவமாகிய பொருள் சொல்லில் அடங்குவதன்று.

தன்மையால் பெரிதாகிய இப்பொருள் அளவினாலும் பெரிது. எவ்வாறெனில், நாயன்மார் ஒருவரல்லர்; இருவரல்லர்; மிகப் பலர். ஒவ்வொருவரது வரலாறும் பெரிது என்றால், அனைவரது வரலாறும் ஒன்று கூடிய நிலையில் அவை அளவில் அடங்குவது எவ்வாறு! இவ்வளவையும் சேக்கிழார் பாடினார் எனில், அவரது செயல் திருத்தொண்டரது செயலினும் அரிதன்றோ. இதனை எண்ணி எண்ணி வியந்த உமாபதிதேவநாயனார், அவ்வருஞ் செயலை இனிது தெரித்துக் காட்டும் பாடல் இது :

''கருங்கடலைக் கைந்நீத்துக்
கொளல்எளிது முந்நீர்க்
கடற்கரையின் நொய்ம்மணலை
எண்ணிஅள விடலாம்;
பெருங்கடல்மேல் வருந்திரையை
ஒன்றிரண்டென் றெண்ணிப்
பிரித்தெழுதிக் கடையிலக்கம்
பிரித்துவிட லாகும்;
தருங்கடலின் மீனைஅள
விடலாகும்; வானத்
தாரகையை அளவிடலாம்;
சங்கரன்தாள் தமது
சிரங்கொள்திருத் தொண்டர்புரா
ணத்தைஅள விடநம்
சேக்கிழார்க் கெளிதலது.
தேவர்க்கும் அரிதே''

''திருத்தொண்டர் புராணத்தை அளவிட நம்சேக்கிழார்க்கு எளிது'' என்று உமாபதி தேவர் கூறியிருப்பினும், சேக்கிழார் அதனை அவ்வாறு தமக்கு எளிது என்றா கருதியிருப்பார்? பிறரைப்போலத் தமக்கும் மிக அரிதே என்றன்றோ கருதியிருப்பார்? அதனால் அதனைப் பாட முற்படாத அறிஞர் அவைமுன் தமது செயல் அஞ்சுவது அஞ்சாத பிள்ளைமைச் செயலாய் முடியும் என்னும் அச்சம் அவருக்குத் தோன்றியிருத்தல் இயல்பே. ஆகவே, அத்தகைய அறிஞர் அவைக்கு அடக்கம் கூறுதலும் இயல்பிலே எழுந்ததன்றி, வெறும் மரபு மாத்திரத்தால் எழுந்ததன்றாம். இவ்வாறு கூறும் அவையடக்கத்திலே அவர் இவ்வுண்மை இனிது விளங்கத் தெரிக்கின்றார்.

நாயன்மார்களில் ஒவ்வொருவரும் அளவற்ற பெருமையை உடையவர்கள்; அத்தகையோரது வரலாறு ஒன்றிரண்டையன்று, பலவற்றைக் கூறுதல் என்பது

இயலாதது ஒன்றே என்பதை அடியேன் அறிவேனாயினும், அவைகளைப் பேசி மகிழ வேண்டும் என்று என் உள்ளத்தில் எழுந்த பெரியதோர் ஆசை என்னைப் பின்னின்று உந்துதலால், இதனைச் சொல்லத் தொடங்கினேனல்லது, அவற்றைச் சொல்லிமுடிக்கும் ஆற்றல் உடையேன் என்னும் துணிவினால் தொடங்கினேனல்லேன். இவ்வாறான எனது பேராசை, நீரை நாவினால் நக்கியே குடிக்கும் இயல்புடையதான நாய் ஒன்று நன்னீர்க் கடலைக் கண்டு அதன்நீரை முற்றக் குடிக்கக் கொண்ட பேராசையோடு ஒப்ப, அறிஞர்கட்குப் பெருநகை விளைப்பதும் இயல்பே. என்றாலும் எனது ஆசை நோக்கி அறிஞர் என் செயலைப் பொறுத்துக்கொள்வர்.

இனி இயன்ற அளவு சொல்லுமிடத்தும் எனது சொற்கள் யான் எடுத்துக் கொண்ட பொருளின் விழுப்பத்திற்குஏற்ற விழுப்பமுடையன ஆகமாட்டா என்பது திண்ணம். ஆயினும், 'பால்' என்றும் 'சோறு' என்றும் இவ்வாறு நன்கு சொல்லத் தக்க பொருள்களை அங்ஙனம் சொல்ல மாட்டாது, 'பாச்சி' என்றும், 'சோச்சி' என்றும் இவ்வாறு குதலையாகச் சொல்லும் குழந்தையின் சொற்களை, அச்சொற்களால் தெரிவிக்கப்பட்ட பொருள்களின் விழுப்பம் பற்றியும், சொல்லிய குழந்தையிடத்து வைக்கும் அன்பு பற்றியும் மூத்தோர் இகழாது விரும்பிக் கொள்ளுதல்போல, நாயன்மார்களது வரலாற்றின் சிறப்புப் பற்றியும், அதனை ஆசையாற் சொல்லத் தொடங்கிய அடியேனிடத்து வைக்கும் இரக்கம் பற்றியும் திருத்தொண்டில் ஆர்வம் மிக்க பெரியோர்கள் எனது புல்லிய சொல்லையும் இகழாது கைக்கொள்வார்கள்.

இக்கூற்றுக்கள் எத்துணை உண்மை உடையனவாய் இலங்குகின்றன.

இனி, அவையடக்கங் கூறுமிடத்து 'வெறும் இரக்கம், அல்லது கண்ணோட்டம் பற்றியே பொருந்தாதன வற்றையும் பொருந்துவனபோல ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்' என அவையோரை வற்புறுத்தலும், நூலை அரங்கேற்றுவோர்க்கு நேர்மை யாதல் இல்லை. ஏனெனில், 'கருமம் சிதையாமல் கண்ணோட வேண்டும்' என்பதும்;

'காதன்மை கந்தா அறிவறியார்த்
தேறுதல் பேதைமை யெல்லாந் தரும்'

என்பதும் அறநெறி யாதலின் தமது நூல் அவையத்தாரால் ஏற்றுக் கொள்ளப் படுதற்குத் தக்கதொரு காரணத்தையும் நூலை ஆக்கும் புலவர்கள் உடன் கூறியே செல்வார்கள். அம்முறையில் சேக்கிழார் கூறியதும் மிகப் பொருத்தமாய் உள்ளது.

எனக்கும், யான் எடுத்துக் கொண்ட பொருட்கும் இடையே உள்ள இழிபு உயர்வுகள் மிகப் பெரியனவாயினும், கூத்தப்பெருமான், "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்தமை வாயிலாக அருள்புரிந்தமையால் அவனது அருட்டுணையால் யான் இதனை ஓரளவு செய்து முடித்தலும் கூடுவதே.

இவற்றிற்கு இடையே மற்றொன்றும் சேக்கிழார் குறிப்பாற் கூறுகின்றார். அஃது, இந்நூலை ஏற்பது அனபாயச் சோழனது அவை. அனபாயன் பேரம்பலம் பொன் வேய்ந்தவன்; ஆகவே, அவன் கூத்தப்பெருமானிடத்துப்பேரன்புடையன் என்பது சொல்லவேண்டா. அதனால் அப்பெருமானது ஆடுகின்ற சேவடிக்கு அன்பு செய்து அதனை அடைந்த அருளாளர்களது வரலாற்றை இவ்வுலகில் என்றும் எவ்வகையாலும் நின்று நிலவச் செய்தல் அவனது அவையத்தார்க்கு இன்றியமையாக் கடனாம் என்பது.

இதுகாறும் கூறிவந்த தொடக்கப் பொருள்களால் பெரியபுராணம் அளவு கடந்த பெருமையை உடைய அருட்பெருங் காப்பியமாதல் ஆசிரியராலே புலப்படுத்தப் பட்டது. அளவாலும், ஒன்பான் சுவை முதலிய பிறவற்றாலும் பெரிதாய் நின்று, 'பிருகத் கதா' என்ற வடசொல்லாலும், 'பெருங்கதை' என்ற தமிழ்ச்சொல்லாலும் பெயர்பெற்று, 'கொங்குவேள் மாக்கதை' என்னும் வழக்கத்தையும் பெற்றது

முதலிய பெருங் காப்பியங்களினும், திருவருள் நிறைவால் பெரிதாவது இது என்னும் கருத்தால், 'எடுக்கும் மாக்கதை' என்றும் இதனைச் சேக்கிழார் குறித்தருளினார்.

''கன்றிய வைரிகள் காதும் காதையும்
வன்னுயர் மதனநோய் வளர்க்கும் மாற்றமும்,
புன்னெழி லினர்வறும் பொழுது போக்கலும்
அன்றரு ளல்லமன் அமல லீலையே''

என்று சிவப்பிரகாச அடிகள் அருட்காப்பியத்தின் சிறப்புப் பற்றி மிக வெளிப்படையாகக் கூறிய கருத்துக்கள் சேக்கிழார் 'மாக்கதை' எனக் கூறிய ஒரு சொல்லில் மிகவும் நுட்பாக அமைந்து மிளிர்கின்றன.

திருத்தொண்டர் புராணத்தின் அளவிலாப் பெருமையை அறிந்து அதனைப் போற்றுவோர்க்கு அஃது அவரது அக இருளைப்போக்கும் ஞாயிறாக விளங்கும் என்பதையும், சேக்கிழார் குறிப்பிடத் தவறவில்லை. பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் கந்தபுராணம் என்னும் மூன்றும் சிவபெருமானது மூன்று கண்கள் போல்வன எனக் கூறுவர். அக்கூற்றிற்கு உறுதுணையாக நிற்கின்றது சேக்கிழார் தமது நூலின் சிறப்பை விளக்கியது.

பத்திச் சுவையை முதலாகக் கொண்டு பிற நலங்களும் கனிந்தொழுகுவதுடன், அரிய பெரிய உண்மைகள் பலநிறைந்து பொய்யிருள் கடியும் மெய்ச்சுடராய் விளங்குகின்ற சேக்கிழாரது அருட்பெருங் காப்பியத்தில் அதன் தொடக்கந்தான் எத்துணை அருமைபெற்று விளங்குகின்றது! அதன் நயங்களை நுகர்ந்து இன்புறுபவர்கள்தாம் அரியர் போலும்.

★



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் திருமுறை வழிபாடு துவக்க விழா நிகழ்ச்சியிற் கலந்து கொண்டு சிறப்பித்த பெருமக்கள். (3-4-73)

# நயஞ்செறிந்த நல்லபெரு நன்றியுரை

(இராமாநுசரும், அனந்தாழ்வானும்)

**முன்னுரை :**

நன்றியுரை என்பது பொதுக் கூட்டங்களில் இறுதியாக நிகழ்த்தப் பெறுகின்ற, வழக்கமான, ஒருவகை யுரை. இது பெரும்பாலும் சுவையற்றதாகவும், சிறப்பில்லாததாகவுமே அமையும். பெரும்பாலும், இதனைத் தொடங்குவதற்கு முன்னரே, கூட்டத்தினின்று எழுந்து மக்கள் கலையத் தொடங்கி விடுவர். இதனைக் கூட்டத்தின் முடிவுக்கு ஓர் அறிகுறியாகவே கருதுவதன்றி இதனை எவரும் மதித்து விரும்பிக் கேட்கமாட்டார்கள். நன்றியுரை நவில்பவரும், பெரும்பாலும் முதன்மையும் தலைமையும் இல்லாத, மிக எளிய ஒருவராகவே இருப்பார். இதுதான் நாம் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது கூட்டங்களில், கண்டும் கேட்டும் வருகின்ற நன்றியுரை நிகழ்ச்சியின் பொது இயல்பாகும்.

இத்தகைய நிலையில் அல்லாமல், மிகச் சிறப்பான முறையில் அமைந்த, நயம் செறிந்த நல்ல நன்றியுரை நிகழ்ச்சி பற்றிய வரலாற்றுச் செய்தி ஒன்று, நாம் அறிந்து மகிழ்தற்குரியதாகத் திகழ்கின்றது. அவ்வரலாற்றுச் செய்தி பற்றி இங்கு ஒரு சிறிது அறிந்து இன்புறுவோம்.

**இராமாநுசர் :**

ஒரு சமயம், அதாவது சுமார் 850 ஆண்டுகளுக்கு முன்னர், இராமாநுசர் (கி. பி. 1017-1137), திருவரங்கத்தினின்று பெரிய பெருமாளிடத்தில் விடைபெற்று, அங்கங்கே வழியில் உள்ள பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு, காஞ்சிபுரம் சென்று சேர்ந்தார், அங்குப் பெருந்தேவித் தாயாருடன் உறைகின்ற தேவப்பெருமாள் கோயிலை வழிபட்டு மகிழ்ந்தார். பின்னர்த் திருவேங்கட மலையை வணங்க விரும்பி வழிக்கொண்டு, அங்குச் சென்று சேர்ந்தார். அங்கிருந்த அன்பர்கள் பலரும் பெருந்திரளாகக்கூடி, அவரை எதிர்கொண்டு வரவேற்றுச் சிறப்பித்துப் பணிந்து இறைஞ்சி மகிழ்ந்தனர். அப்போது அவ்வன்பர்கள் அனைவரும் இராமாநுசரைப் பெரிதும் பணிந்து வணங்கி நின்று, தாங்கள் எல்லாம் ஈடேறும்படி, உபதேச முறையில் தமக்கு ஏதேனும் ஒரு பொருள் குறித்து விளக்கிச் சொற்பொழிவு ஆற்றியருளுமாறு, பெரிதும் விண்ணப்பித்துக் கொண்டனர். எம்பெருமானார் என்னும் இராமாநுசர், அங்ஙனமே அவர் தம் விண்ணப்பத்திற்கு மனமிரங்கி இசைந்தருளினார்.

"அகல கில்லேன் இறையும் என்று
அலர்மேல் மங்கை யுறைமார்பா!
நிகரில் புகழாய்! உலகம் மூன்று
உடையாய்! என்னை ஆள்வானே!
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகல்ஒன் றில்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே''

எனவரும் நம்மாழ்வார் திருவாய்மொழிப் பாசுரத்தை எடுத்துக்கொண்டு, இராமாநுசர் அதன் பொருளை விளக்கி வருங்கால், அதனோடு துவயம் என்னும் மந்திரத்தின் பொருளை இணைத்து, விரிவாக

விளக்கிச் சிறந்ததொரு சொற்பொழிவு நிகழ்த்தியருளினர். அதன்கண், திருவெட்டெழுத்து மந்திரம், சரமசுலோகம் ஆகியவற்றையும்கூட, இடையிடையே இயைத்து விளக்கியருளினர். இராமாநுசரின் அவ்வுபதேசச் சொற்பொழிவு, "உடல் குளிர, உயிர் தழைக்க, உணர்ச்சி ஓங்க, உளம் கனிய, மெய்யன்பர் உள்ளமெல்லாம் கடலனைய பேரின்பம் துளும்பச் செய்து" எல்லையற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

## அனந்தாழ்வான் :

அப்போது அந்தப் பெருங்குழுவில், அனந்தாழ்வான் என்னும் சிறந்த அன்பர் ஒருவர் இருந்தார். அவர் அடைந்த மகிழ்ச்சிக்கும் நன்றிப் பெருக்கிற்கும் எல்லையே இல்லை. அங்குத் திரண்டிருந்த பல்லாயிரக் கணக்கான அன்பர்களின் சார்பில், அவர்களின் உள்ளத்துணர்ச்சிகளை எல்லாம் திறம்பட எடுத்துப் புலப்படுத்தும் முறையில், அனந்தாழ்வான் நன்றியுரை நவிலத் தலைப்பட்டார். அந் நன்றியுரை, நாம் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ள நன்றியுரைகளைப் போல அல்லாமல், ஈடும் எடுப்புமற்று, சமய இலக்கிய வரலாறுகளிலேயே தலைசிறந்த தொன்றாக, என்றும் நிலைபெறும் வகையில், தனிப்பெருஞ் சிறப்புடையதாக அமைந்து விளங்கியது. இராமாநுசரின் அரிய அருளுபதேசச் சொற்பொழிவுக்கு நன்றியுரை நவில எழுந்த அனந்தாழ்வான்,

> "பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
> இருகணிள மூங்கில் வாங்கி – அருகிருந்த
> தேன்கலந்து நீட்டும் திருவேங்கடங் கண்டீர்
> வான்கலந்த வண்ணன் வரை"

என்னும் பூதத்தாழ்வார் பாசுரத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு, தமது நன்றியுரையினை நவிலத் தொடங்கினர்.

பூதத்தாழ்வார் திருவேங்கடமலையின் சிறப்பினை வருணித்து, அருளிச் செய்தது அப்பாசுரம். "மதநீர் பெருகப்பெற்ற ஓர் ஆண் யானையானது, தனது துணையாகிய ஒரு பெண் யானைக்கு இனிய உணவு கொடுத்து, அதனை மகிழ்ச்சியுறச் செய்ய விரும்பி, மூங்கிற் குருத்தைத் தரித்துத் தேனிலே தோய்த்து, அப் பெண் யானையின் வாயின்கண் பிழிந்து ஊட்டுகின்ற திருவேங்கடமலையே, நீலமேக நிறத்தனை திருமால் எழுந்தருளியிருக்கும் மலையாகும்" என்பது இப்பாசுரத்தின் பொருள்.

## உள்ளுறைப் பொருள்நலம் :

பூதத்தாழ்வார் அருளிய இப்பாசுரத்திற்கு, அனந்தாழ்வான் தம்முடைய நுண்மா நுழைபுலத் திறனல், சமயோசிதமாகச் சிறந்த முறையிலும், பொருந்தும் வகையிலும் பின் வருமாறு நயஞ்செறிந்த உள்ளுறை நலம் அமையும்படி, பொருள் விளக்கம் செய்தருளினர்.

"நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியாகிய பசுந்தமிழின், ஆனந்தம் மதநீராய்ப் பெருகப்பெற்ற இராமாநுசராகிய யானையானது. தன் அன்பர்களாகிய பிடி யானைகளுக்கு முன்னே நின்று, முற்றொடரும் பிற்றொடரும் ஆக அமைந்துள்ள துவயம் என்னும் மந்திரமாகிய இருகண் மூங்கிலை வளைத்து, அதன் அருகில் உள்ள எட்டெழுத்துத் திருமந்திரம் — சரம சுலோகம் என்ற இரு தேன்களையும் கலந்து விரித்துரைத்து விளக்கி ஊட்டி அருளிய திருவேங்கடமலையே, திருமாலின் திருமலையாகும்" என்பது, அனந்தாழ்வான் அழகுறக்கூறியருளிய நுண்பொருள். இதன் பொருத்தமும் சிறப்பும் நுண்ணிதின் எண்ணி எண்ணி இன்புறற்பாலது.

## பொருத்தமும் சிறப்பும் :

(1) அவரது கருத்தின்படி, இப்பாசுரத்தில் "பெருகுமத வேழம்" என்பது இராமாநுசரைக் குறிப்பதாகும் திருவரங்கத்து அமுதனர், "பண் தருமாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய் மதமாய் நின்றிட எங்கள் இராமாநுச முனிவேழம்" (64) என இராமாநுசரை மத யானையாக உருவகம் செய்திருத்தல் காணலாம்.

(2) "பிடி" என்பது பெண் யானைக்குப் பெயர். அஃது இங்கு இராமாநுசரின்

உவப்புக்குரிய அன்பர்களையும் அடியார்களையும் உணர்த்தும்.

(3) ''இருகண் இளமூங்கில்'' என்பது இரண்டு பகுதிகளாய் உள்ள 'துவயம்' என்னும் மந்திரத்தைச் சுட்டும்; மூங்கிலானது முத்துக்கள் தோன்றுதற்கு இடமாக இருக்கும். அதுபோல, அருட்பொருள்கள் பலவற்றை உள்ளடக்கி உணர்த்திக்கொண்டிருக்கும்சிறப்புடைமை பற்றித் 'துவயம்' என்னும் மந்திரம், மூங்கிலாக உருவகிக்கப் பெற்றது. முற்றொடர் என்றும், பிற்றொடர் என்றும், இரண்டு கூறுகளாக விளங்குதலால், 'துவயம்' என்னும் மந்திரம் 'இருகண் இளமூங்கில்' எனப்பெற்றது.

(4) ''அருகிருந்த தேன் கலந்து'' என்பதில், திருவெட்டெழுத்து ஆகிய மந்திரம் ஒரு தேனாகவும், கீதையின் உள்ளீடான 'சரம சுலோகம்' ஒரு தேனாகவும் குறிப்பிடப்பெற்றன. திருவெட்டெழுத்தும், சரம சுலோகமும் துவயத்தின் இருபுறத்தும் அருகில் உள்ளவையாதலின் 'அருகிருந்த தேன்' எனச் சிறப்பிக்கப் பெற்றன.

(5) இங்ஙனம், ''இராமாநுசர் ஆகிய மதயானை, தனது அன்பர்களாகிய பிடியானைகளுக்கு, துவயம் என்னும் மூங்கிலை வளைத்து, திருமந்திரமும் சரமசுலோகமும் ஆகிய இருதேனையும் கலந்து ஊட்டினாற் போன்று, உபதேசச் சொற்பொழிவு நிகழ்த்தியருளிய இடம் திருவேங்கடமலை ஆதலின், அது முன்னையிலும் பன்மடங்கு தெய்விகச் சிறப்போங்கித் திருமாலுக்குரிய திருமலையாகும் பேறு பெற்றது என்பது, இப்பாடலின் முடிந்த முடிபான திரண்ட கருத்தாகும்.

முடிவுரை :

இராமாநுசரின் இணையற்ற அருட்பெருஞ் சொற்பொழிவோ, அனந்தாழ்வானின் நயஞ்செறிந்த நல்லபெரு நன்றியுரையோ, இவற்றுள் எது சிறந்தது என்று நம்மனோர் இயம்புதல் இயலுமோ? இரண்டிற்குமே இணையில்லை என்பது தேற்றம்.

—ஆசிரியர்.



ஈரோடு வட்டம், கொடுமுடி அருள்மிகு மகுடேசுவரர் வீரநாராயணப் பெருமாள் கோயில் திருப்பணியை அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் துவக்கி வைத்தல். (10-3-73)

# சமய தீபம்

ரசிகமணி திரு. டி. கே சிதம்பரநாத முதலியார் அவர்கள், B.A., P.L.,

ஒதுங்கலான ஒரு ஊரில் யூனியன் பஞ்சாயத்துப் புதிதாய் ஏற்பட்டது. முதலாக வந்த பஞ்சாயத்துத் தலைவர் பொது நலப் பிரியர். ஊரை எல்லா விதத்திலும் திருத்தமுறச் செய்யவேண்டும் என்று ஆத்திரங் கொண்டார். தெருக்களில் எப்படியாவது விளக்குப் போட்டுவிட வேண்டும் என்று கருதி, லாந்தல்க் கல்லுகளும், கல்லுகளின் உச்சியில் கனத்த இருபபினுல் செய்த லாந்தல் சட்டமும், லாந்தல் உள் விளக்கு, சிமினி எல்லாம் தயார் செய்து விளக்குப் போட்டு விட்டார். வெளிச்சம் ஏற்பட்ட காரணத்தினல் பெண்டுகளும் பிள்ளைகளும் இரவில் ஊருக்குள் சௌகரியாக நடமாட ஆரம்பித்தார்கள். கள்ளர் பயம் இல்லை.

இப்படியாக ஐந்து வருஷம் கழிந்தது. பஞ்சாயத்துத் தலைவர் வேறொருவர் புதிதாக வந்தார். அவருடைய நிர்வாகம் ஒரு வருஷம் நடந்தது. அந்த நிர்வாகத்தில் விளக்குப் போடக் கணக்கில் வகையில்லை என்று ஆய்விட்டது. மேலதிகாரிகள் வந்து லாந்தல், விளக்கு, சிமினி ஆகிய உறுப்புக்களை ஜில்லாத்தலைநகருக்குக் கொண்டுபோய் விட்டார்கள். ஆகவே, ஊருக்கு மிச்சம் லாந்தல் கல்லு, லாந்தல் சட்டம், இருட்டு இந்த மூன்றுந்தான் என்று ஏற்பட்டு விட்டது.

இப்படியாக இருபதுவருஷம் கழிந்தது. லாந்தல் கல்லும் சட்டமும் மாத்திரம் நின்று வந்தன. அயலூர் ஒன்றுக்கும் போய் அறியாத பள்ளிப்பையன்கள் தெருக்களில் கல்லுகள் எதற்காக நிற்கின்றன என்பதைப் பற்றி ஆராய ஆரம்பித்தார்கள். மாடுகளைக் கட்ட என்று சிலர் சொன்னர்கள். 'அப்படியானல், ஒவ்வொரு வீட்டுக்குமுன் கல் நட்டிருக்க வேண்டுமே? ''அப்படி இல்லாததால், கல் நட்டது மாடு கட்டுவதற்கு அல்ல. மேலும், தெருக் கோடியில் கொண்டுபோய் யாராவது மாட்டைக் கட்டி வைப்பார்களா?'' என்றும் சொன்னர்கள் இப்படியெல்லாம் தர்க்கித்துக்கொண்டு இருக்கும் போது, பெரிய பையன், அதாவது, பன்னிரண்டு வயசுப் பையன் ஒருவன் வந்தான். அவன் சின்னப் பையன்களின் சந்தேகத்தை யெல்லாம் தீர்த்து வைத்தான்: எப்படி.

''ஒரு தடவை நம்முடைய ஊருக்கு விறகுவண்டி ஒன்று வந்தது, வண்டிக்காரன் மாட்டைக் கல்லில் கட்டிவிட்டு கடைமுளை, கடையாணி, கொண்டுவந்த சாப்பாடு எல்லாவற்றையும் சாக்கில் சுற்றிக் கல்லின் மேலுள்ள இரும்புச் சட்டத்தில் வைத்து விட்டான். இந்த மாதிரி அயலூரிலிருந்து வண்டி வந்தால் மாட்டைக்கட்டவும் சாமான்களைப் பிள்ளைகளுக்கு எட்டாத உயரத்தில் வைத்துக் கொள்ளுவதற்காகவும் நாட்டியது கல். சுமைதாங்கிக் கல் இருக்கிறதல்லவா, அதுபோல இதுவும் ஒரு தர்மம்'' என்று சொல்லித் தீர்த்தான். மற்றப் பையன்களும் ஒப்புக்கொண்டு விட்டார்கள். கண்டுபிடிக்க முடியாத ஒரு உண்மையைக் கண்டு விட்டதாக எல்லோருக்கும் ரொம்ப எக்களிப்பு.

ஒரு பையனுக்காவது கல்லுக்கும் விளக்குக்கும் சம்பந்தம் உண்டென்று எண்ணத் தோன்றவில்லை. லாந்தல் கல்லு பட்ட பாடுதான் நமது முன்னோர்கள் கண்டு வைத்துப் போன பெரிய உண்மைகள் பாடும்.

''ஒன்ருகக் காண்பதே காட்சி''

என்ருர் ஒரு பெரியார்;

'ஒழிவற நிறைந்த
ஒருவ! போற்றி''

என்ருர் மற்ருெரு பெரியார். உலகத்தி

---

அருட்டிரு ஞானியார் அடிகளின் நூற்ருண்டு விழாவினை ஒட்டி, இக்கட்டுரை 'இதய ஒலி' என்னும் நூலினின்று எடுத்து வெளியிடப் பெறுகின்றது.

—ஆசிரியர்.

லுள்ள பொருள்களை எல்லாம் ஏதோ ஒரு விதத்தில் ஆராய்ந்து, பொருள்கள் தோற்றத்தில் எவ்வளவு வேறுபட்டனவாய் இருந்தாலும், உண்மையில் ஒரு பொருள்தான், பேதமில்லாத பொருள்தான் என்று கண்டு விட்டார்கள் மேலும், அந்தப் பொருள் எங்கும் வியாபித்துள்ளது; வானவெளியில் எவ்வளவு தூரம் எட்டிப்போனாலும் வெற்றிடம் என்பது இல்லாதபடி நிறைந்துள்ளது; நுணுகி நுணுகிப் போனாலும், அணுவென்றும், அணுவுக்குள் அணுவென்றும், இறுதியில்லாதபடி செறிந்து கொண்டே போகும் தன்மையது அந்தப் பொருள் என்றும் கண்டார்கள். ஒழிவு - அதாவது வெற்றிடம், அற - இல்லாதபடி, எங்கும் நிறைந்துள்ள வஸ்து கடவுள் தத்துவம் என்றார்கள்.

''ஒழிவற நிறைந்த
ஒருவ போற்றி''.

எவ்வளவு எளிமையோடும் தெளிவோடும் விஷயத்தை விளக்குகிறது வாக்கியம்!

மேல் நாட்டுக் கலை வல்லாரும் பல கருவிகள் கொண்டு ஆராய்ந்து இதே முடிபுக்கு இப்போது வந்திருக்கிறார்கள். நம்மவர்களோ அந்தக் கருவிகளின் துணையில்லாமலே ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னமேயே இந்த உண்மையைக் கண்டு சந்தேகத்துக்கு இடமில்லாமல் கல்லில் எழுதி வைத்த மாதிரி சொல்லி விட்டார்கள். உண்மைகளைக் கண்டதும் எழுதி வைத்ததும் வியக்கத்தக்க காரியந்தான். அதை விட வியக்கத்தக்கது, அந்த உண்மைகளைப் பல நூற்றாண்டுகளாகப் போற்றி வந்தது தான்.

உண்மைகள் கண்ணால் காணக் கூடியவையல்ல; கையால் பற்றி எடுக்கக் கூடியவையல்ல; உள்ளத்தில் நிற்பன. ஆகவே, அவைகள் மறைந்து போய் விடுவதற்கும் காரணம் உண்டு: மறைந்தும் போய் விட்டன. பெரியார்கள் சொல்லிவைத்த விஷயங்களைப் புறக்கணித்துவிட்டு, வெறும் வார்த்தைகளையே சொல்லி வந்தார்கள் பிற்காலத்தவர். பெரியோர்கள் பாடிய பாடல்களை அப்படியே பாடிக் கொண்டிருந்தால் போதும் என்று ஏற்பட்டு விட்டது. திருவாசகத்துக்கு உரை சொல்லக் கூடாது என்று சொல்லுவார்கள். பாராயணம் போதும், பொருள் தெரிய வேண்டியதில்லை என்று ஏற்பட்டு விட்டது. தெய்வப் பாடல் என்று சொல்லும் பாடல்களுக்குப் பின்னால், உண்மையனுபவமும் உணர்ச்சியும் இருக்கின்றன என்ற கொள்கை போய்விட்டது. உள்ளேயிருந்து என்றும் மங்காத பேரொளி வீசிக்கொண்டிருக்கிறது என்பதெல்லாம் கதையாய் முடிந்தது. விளக்கில்லை, வெளிச்சம் இல்லை. லாந்தல் கல்லும் சட்டமும் நிற்கிறது என்று ஆய்விட்டது.

இந்த மருட்சியை ஓரளவு பூர்த்தி பண்ண ஆங்கிலக் கல்வியும் தமிழ் நாட்டுக்குள் புகுந்து விட்டது. சமய நூல்களில் ஒன்றுமேயில்லை. வார்த்தைகளை இப்படியும் அப்படியுமாக அளக்கிற காரியந்தான் வைதிகர்கள் பேசுகிற காரியமெல்லாம், என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள் ஆங்கிலம் கற்றவர்கள். அவர்கள் பண்டிதர்களைக் கேள்வி கேட்டால் பதில் வருவது காரணகாரிய விளக்கம் அல்ல; வசை நாமாவளிதான்.

ஆங்கிலம கற்றவர்களைக் குற்றம் சொல்ல இடமில்லை. அவர்களுக்கு உண்மைகளை எடுதது விளக்குபவர்கள் பள்ளிக்கூடங்களிலும் இல்லை. வைதிகக் குழாங்களிலும் இல்லை. எல்லோருமாக, அயலூர் வண்டி மாடு கட்டவும், கடையாணியைச் சாக்கில் சுற்றி வைக்கவுந்தான் ஏற்படுத்தியது கல்லும் சட்டமும், என்று தானம் வைத்து விட்டார்கள். நம்பிக்கை பிறக்கமாட்டேன் என்று விட்டது கேட்டவர்களுக்கு. தமிழுலகம் பொதுவாக இந்த நிலையில் இருந்தது. இருபது வருஷத்துக்கு முன். அப்படித்தான் இருந்தது திருநெல்வேலியும்.

சில நண்பர்கள் திருச்செந்தூருக்குப் போய் விட்டுத் திருநெல்வேலிக்குத் திரும்பி வந்தார்கள். வந்தவர்கள் வடக்கே இருந்து வந்த ஒரு சுவாமிகள் சமய சம்பந்தமாக மிக அருமையாயும் தெளிவாயும் பிரசங்கங்கள் செய்ததாகவும், தாங்கள் நிரம்ப அனுபவித்ததாகவும் சொன்னார்கள். சுவாமிகளுக்கு ஊர் திருப்பாதிரிப்புலியூர் என்றும் அவர்கள் ஒரு மடாலயத்துக்கு அதிபர் என்றும் சொன்னார்கள்.

சில நாள் கழித்து, திருநெல்வேலி ரயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்துள்ள தரும புரம் மடத்தில் திருப்பாதிரிப்புலியூர் ஞானி யார் சுவாமிகள் பரிவாரத்தோடு பல்லக்கில் வந்து இறங்கியிருக்கிருர்கள் என்று செய்தி வந்தது. மறுநாள் சாயங்காலம் நெல்லை யப்பர் கோவில் வசந்த மண்டபத்தில் சுவாமி கள் பிரசங்கம் என்று துண்டுப் பத்திரிகை யின் மூலம் விளம்பரமாயிற்று. சுவாமிகளைக் கேட்க நானூறு ஐந்நூறு பேர் கூடியிருந் தார்கள். சுவாமிகள் ஆசனத்தில் அமர்ந் திருந்தது தனியான காட்சியாய் இருந்தது. உருத்திராக்கமாலையும், ஸ்வர்ண லிங்கம் தாங்கிய வடமும், திருநீற்றுப் பொலிவும், கண்ணுக்கும் மனசுக்கும் விருந்தளித்தன.

பிரசங்கம் ஆரம்பித்தது. வார்த்தையும் அக்ஷரமும் ஒவ்வொன்ருய் நின்று நின்று வெளி வந்து ஒலித்தன. வார்த்தைகள், வார்த்தைகளின் கதி, ஆழ்ந்த குரல் எல் லாம் சேர்ந்து, இதயமே பேசுகிறது என் பதைத் தெரிவித்தன. கேட்டவர்கள் செவி கொடுத்து இதயத்தையே கேட்டார்கள். ஆகவே, பொருளும் உணர்ச்சியும், கேட்ட வர்கள் இதயத்துக்குள்ளே சென்று பதிந்து விட்டன.

நேரம் ஆக ஆக, உணர்ச்சியோடு கலந்து வேகம் கொண்டது விஷயம். ஆசிரி யருக்கும் கேட்பவர்களுக்கும் தெரியாதபடி வார்த்தைகளும் அதிவேகமாகவே ஓடின. ஆனல், அழுத்தமாவது தெளிவாவது எவ் விதத்திலும் குறையவில்லை. தமிழோ சாதா ரணமான பேச்சில் வழங்குகிற பசுந்தமிழ். அந்தத் தமிழுக்குச் சக்தி இன்னது என்று தெரியவந்தது; இதயத்தில் எழும் உணர்ச்சி களை அப்படி அப்படியே பளிங்கில் வைத்துக் காட்டிய மாதிரி விளக்கிக் காட்டியது. சபை யிலுள்ள ஒவ்வொருவருக்கும் தம்மோடு தான் நேர் நேராக சுவாமிகள் பேசின தாகத் தோன்றியது; பாஷை எல்லோ ரோடும் அவ்வளவு ஒட்டிய பாஷை.

விஷயம் கடவுள் தத்துவம். ஆனலும் எத்தனையோ விஷயங்கள் வந்து வட்டமிட் டுச் சுழித்துப் போயின. நம்மவர் வாழ்க்கை யில் உள்ள எத்தனையோ அம்சங்கள் வந்து வந்து தெளிவுபட்டு ஓடின. ஒவ்வொன்றும் உணர்ச்சி ததும்பியதாய் இருந்தது; வாழ்க் கையோடு ஒட்டிய உண்மையாகவே இருந் தது. நம்முடைய மனசு அங்கங்கே திளைத்து நிற்கும்; அந்த விஷயம் முடிந்ததும், பெருக் கெடுத்துப்போகும் பெரிய விஷயத்தோடு இலகுவாகக் கலந்து கொள்ளும். கடவு ளுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தத்தை எடுத் துச் சொல்லும்போது, சுவாமிகள்,

''விறகில் தீயினன்;
பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன்
மாமணிச் சோதியான்;
உறவு கோல்நட்(டு)
உணர்வு கயிற்றினுல்
முறுக வாங்கிக்
கடையமுன் நிற்குமே''

என்ற தனிக்குறுந்தொகைச் செய்யுளை எடுத்தாள நேர்ந்தது. பலர் இந்தச் செய் யுளை உணர்ச்சி யாதொன்றும் இல்லாமல் கையாண்ட காரணத்தால், சாமானிய மாகவும் இளைத்ததாகவும் தோன்றியது செய்யுள். ஆனல் சுவாமிகள் அதன் உண் மையில் திளைத்து ஆர்வத்தோடு விளக்கிக் காட்டின மாத்திரத்தில், முன் காணுத உண் மைகளும் உணர்ச்சியும் பாடலில் பொதிந்து கிடப்பதாகப் புலப்பட்டது. நமக்கும் கடவு ளுக்கும் உறவாவது, கடவுளுடனேயே ஒன்றியிருக்கிருேம் நாம். வேருகத் தனித்து நிற்கவில்லை என்ற உண்மைதான். இந்த உண்மையைச் சதாமனசில் வைத்து ஆர்வத் தோடும் ஆனந்தத்தோடும் சிந்திப்போ மானல், மறைந்து நின்றுள்ள மாமணிச் சோதியான் முன்னின்றுவிடும் என்று விஷ யத்தைக் கூட்டி முடித்தபோது, சபை யோருக்கு அந்த அற்புத தரிசனமே கிடைத்த மாதிரியான ஒரு உணர்ச்சி உண் டாயிற்று. எல்லோரும் ஒரே ஆனந்த பர வசத்தில் மூழ்கினர்கள். 'ஆகா. இதை யெல்லாம் கேட்டு அனுபவிக்கக் கொடுத்து வைக்க வில்லையே' என்று சபைக்கு வராத

வர்களை எண்ணிப் பரிதவிக்க வேண்டியதாய் இருந்தது.

அதோடு, தமிழை ஆர்வத்தோடு கற்று வந்தவர்களுக்கு ஒரு வகையில் அவமான மும் வருத்தமும் ஏற்பட்டது என்று சொல்ல வேண்டும். ஏதோ தமிழறிஞர்களை யெல்லாம் தமிழுலகம் அறிந்திருக்கிறது. மதித்திருக்கிறது என்று எண்ணிக் கொண்டிருந்தோமே, சுவாமிகளை இதுவரை அறிந்திராதது போகட்டும்; அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டது கூடக் கிடையாதே என்ற அவமானந்தான், வருத்தந்தான்.

ஆம், தமிழனுடைய ஜாதகமே அப்படி. நம்மிடம் உயர்ந்த பொருள்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றையெல்லாம் மதிக்கத் தெரியாமல் ஒன்று மில்லாத படாடோபத்தை, முக்கியமாக, தனக்கு விளங்காத காரியத்தைக் கண்டு மோகித்த வண்ணமா யிருக்கிறனே என்றெல்லாம் நொந்து கொள்ள நேர்ந்தது. ஆனாலும், கருவூலத்தைக் கண்டு விட்டோம் என்ற ஆனந்தத்துக்குக் குறைவில்லை. திருநெல்வேலிப் பிரசங்கம் நல்ல முகூர்த்தத்தில் நடந்தது என்று சொல்லவேண்டும்.

தொடர்ந்து பத்துநாளுக்கு மேலாகவே திருநெல்வேலியில் பிரசங்கம் நடந்தது. கேட்க வந்தவர்களின் தொகை அதிகரித்ததால், வசந்த மண்டபத்தை விட்டு மேலப் பிராகாரத்தில் பிரசங்கத்தை நடத்த நேர்ந்தது. பிறகு நாகர்கோயில், அம்பாசமுத்திரம், தென்காசி, சங்கரன் கோயில், முதலான இடங்களுக்குப் போய், பிரசங்கங்கள் செய்தார்கள். அதன்பின், தமிழ் நாடெங்குமே பிரயாணம் செய்து, தமிழ் நாகரிகம், தமிழ்ப் பண்பாடு இன்னதென்று விளக்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

சமய நூலைக் கற்று வந்தவர்களுக்கு, அதன் உள்ளான தத்துவம் இன்னதென்று தெரியவும் அதில் ஆர்வம் கொள்ளவும் ஏற்பட்டது. லாந்தல் கல்லுகளை வெறும் மாடு கட்டுங் கல் என்று எண்ணும் மனப்பாங்கு போய், உண்மை ஒளியைத் தரக்கூடிய மிகவும் உபயோகமான தீபஸ் தம்பம் என்று மதிக்கிற காலம் வந்து விட்டது. இதெல்லாம் நேர் நேரான உண்மையென்று தெரியவரும், திருப்பாதிரிப்புலியூர் மடத்துக்குப் போய்ப் பார்த்தால்; காலையிலிருந்து இரவு பத்து மணி நேரம் வரை வந்து பாடங்கேட்கும் மாணவர்களைப் பார்த்தால் தெரியவரும். உத்தியோகஸ்தர்கள், சஷ்டியப்த பூர்த்தியாகிச் சதாஷேபிகத்துக்கு அடி போட்டுக் கொண்டிருக்கும் கிழவர்கள் ஆகிய பலர் வந்து சமய சம்பந்தமாகவும் தமிழ் இலக்கிய சம்பந்தமாகவும் பாடங் கேட்டுக் கொண்டிருப்பார்கள். உண்மையான உணர்ச்சியோடு, சுவாமிகள் விஷயங்களையும் நூல்களையும் விளக்கிக் காட்டுவதால்தான் மேலே சொன்ன மாணக்கர்கள். இல்லா விட்டால் பரீட்சைக்குப் போகும் மாணக்கர்கள் வருவார்கள்; (தமிழ் அனுபவிக்கக் கூடியது, அனுபவிப்பதற்காகவே ஏற்பட்டது என்பது அவர்களுக்குத் தெரியாது) மடத்துக்கு வரும் மாணக்கர்களோ, ஆனந்த அனுபவம் தூண்டியே வருவார்கள்.

எல்லாம் ரூபாய் அணா பைசாக் காரியமாய்ப் போய்க், கூடுகிற கூட்ட மெல்லாம் பொறாமைப் பேயும் பகைமைப் பேயும் ஆட்டி வைக்கும் கூட்டமாயிருக்க, தமிழ்ப் பண்பாட்டில் உண்மையான ஆர்வங்கொண்டு தமிழர்கள் கூடித் தமிழை ஆராய்கிறார்கள், அனுபவிக்கிறார்கள் என்றால், எவ்வளவு பெரிய விஷயம்! தமிழ் வளர்ச்சிக்கு, ஞானியார் சுவாமிகள் மடாலயம் பண்பட்ட நாற்றங்கால்.

தமிழ்நாடு புத்துயிர் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு, தமிழ்மகள், சுவாமிக்கு அரிய உருவத்தையும் உடல் நலத்தையும், கணீர் என்று ஒலிக்கும் வெண்கல நாதத்தோடு கூடிய குரலையும் அளித்தாள். எவ்வளவு விரிவாகவும் சிக்கலாகவும் இருந்த போதிலும், விஷயங்களின் ஒவ்வொரு உறுப்பையும் அதற்கு இயைந்த இடம் அமைத்து முறைப்படுத்தி நிர்மாணம் செய்யக் கூடிய அபூர்வமான அறிவு விளக்கத்

தையும் கொடுத்தாள். எல்லாவற்றிலும் சிறப்பாக, பொறுமை, அடக்கம், அன்பு, பக்தி ஆகிய உயர்ந்த இதய தத்துவங்களை யும் அளித்தாள்.

"சித்திரமும் கைப்பழக்கம்
செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி
மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம்
நட்பும் தயையும்
கொடையும் பிறவிக்
குணம்."

ஆம். பிறவிக் குணந்தான் என்று சுவாமிகளுடன் பழகிய பின் தெரியவரும். இத்தனை அரிய பேறு தமிழகத்துக்குக் கிடைத்திருக்கிறது. சுவாமிகளுக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் அவர்களுடைய இதயகமலத்திலே சதா குடி கொண்டிருக்கும் முருகப்பெருமான் அருள் வாராக!

"வீரவேல் தாரைவேல்
விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள்
திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல்
சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே
துணை."

★



கும்பகோணம் வட்டம், இன்னம்பர் அருள்மிகு ஸ்ரீநிவாசப் பெருமாள் வேங்கடாசலபதி கோயிலில் நிகழ்ந்த ஆலயத் தூய்மைப் பரிசளிப்பு விழாவில் அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L. I.A.S. அவர்கள் கழற்கோப்பை வழங்குதல்.

# மாணிக்க வாசகர் மாட்சி

திரு. கே. எஸ். நரசிம்மன் அவர்கள், B.A., B.L., I.A.S.
ஆணையர், அறநிலையத்துறை.

மணிவாசகர் தமிழ்நாட்டில் தோன்றியருளிய தலைசிறந்த ஞானிகளுள் ஒருவர். திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள்போல மணிவாசகர் இயற்றிய திருவாசகமும் அனைத்துலகப் புகழ்பெற்றுத் திகழ்கின்றது. உலகியலுக்குத் திருக்குறளும், அருளியலுக்குத் திருவாசகமும், நமக்குச் சிறந்த வழிகாட்டிகளாக விளங்குகின்றன. திருக்குறள், திருவாசகம் என்னும் இவ்விரு பெரு நூல்களையுமே, பேரறிஞர் திரு. ஜி. யூ. போப் துரை அவர்கள், தமது ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து வியந்து புகழ்ந்து போற்றியிருக்கின்றார்.

திருவாசகத்தின் பெருமை எல்லையற்றது. 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்பது தமிழ் நாட்டுப் பழமொழி. "திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின், கருங்கல் மனமும் கரைந்து நெகிழ்ந்து உருகும்" எனத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் போற்றியுரைத்துப் புகழ்கின்றார். "திருவாசகப் பாடல்களைக் கேட்டபொழுதே, கீழான பறவைகளும் பொல்லாத விலங்குகளும்கூட, மெய்ஞ்ஞான நாட்டமுறும்" என இராமலிங்க அடிகளார், திருவாசகத்தின் சிறப்பினை மிகவும் விதந்தெடுத்துப் பேசுகின்றார். "தோத்திரத்திற் சிறந்தது திருவாசகம்; சாத்திரத்திற் சிறந்தது திருமந்திரம்" என்பது வடலூர் இராமலிங்க அடிகளார் வற்புறுத்தியுணர்த்திய நற்பெருங் கருத்தாகும்.

திருவாசகம் தன்னை ஓதுபவரின் உள்ளங்களை உருக்கி உயர்த்தி உய்விக்கும் திறத்தில் தனிப்பெரும் சிறப்புடையதாகும். சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் மாண்பு மிக வாய்ந்தது, மணிவாசகர் அருளிய திருவாசகம் என்பது, வாழையடி வாழையாக வந்த நம் சமயஞானச் செல்வர்கள் அனைவரும், நன்கினிது கண்டுணர்ந்த உண்மை அனுபவமாகும்.

திருவாசகத்தின் சிறப்பினைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், பின்வருமாறு உருவகம் செய்து கூறுகின்றார். சிவபெருமான் ஒரு பெரும் கருணைக் கடல். கடலில் நதி சென்று சேருவது இயல்பு. சிவபெருமானாகிய கருணைக் கடலின் தலையில் கங்கைநதி சேர்ந்திருக்கிறது. கடலில் மேகங்கள் நீரை முகக்கும். அதுபோல மாணிக்கவாசகராகிய மேகம், சிவபெருமானாகிய கருணைக்கடலில் முகந்து, அருள் என்ற மழையைப் பொழிந்தது. அது திருவாசகம் என்னும் வெள்ளமாகப் பெருகியது. அத்திருவாசகமாகிய அருள் வெள்ளம் ஓதுபவர்களின் உள்ளமாகிய குளத்தில் புகுந்து, நாக்கு என்னும் மதகில் நடந்து, கேட்பவர்களின் செவியாகிய மடையில் பாய்ந்து, உணர்வு என்னும் வயலில், அன்பாகிய விதையினின்று, சிவம் என்னும் மென் முளையைத் தோற்றுவிக்கும். பின்னர் அதனில் இருந்து கருணை மலரவும், முத்தி அல்லது வீடு பேருகிய சிறந்த பயன் விளையவும் செய்யும்".

"வலமமூ உயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்துஉல குவப்ப உகந்த மாணிக்க
வாசகன் எனும்ஒரு மாமழை பொழிந்த
திருவா சகம்எனும் பெருநீர் ஒழுகி
ஓதுவார் மனம்எனும் ஒண் குளம் புகுந்து
நாஎனும் மதகில் நடந்து கேட்போர்
செவிஎனும் மடையிற் செவ்விதிற் செல்லா,
உளம்எனும் நிலம்புக ஊன்றிய அன்பாம்
வித்தில் சிவம்எனும் மென்முளை தோன்றி
வளர்ந்து, கருணை மலர்ந்து,
விளங்குறும் முத்தி மெய்ப்பயன் தருமே"

என்பது நால்வர் நான்மணிமாலைச் செய்யுள். இதனால் திருவாசகம் தன்னை ஓதுபவர்களுக்கு இம்மை மறுமை ஆகிய எல்லா நலங்களையும் விளைவிக்கும் சிறப்புடையதாதலையுணரலாம்.

மணிவாசகர் திருவாசகம் மட்டுமேயன்றித் திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் வேறொரு சிறந்த நூலையும் இயற்றியுள்ளார். திருவாசகம் அன்பு நூல். திருக்கோவையார் புலமை நூல். திருக்கோவையார் செந்தமிழ் நலத்திற் சிறந்தது திருவாசகம் சிவநெறி மாட்சிமிக்கது. தமக்கும் சிவபெருமானுக்கும் இடையே நிலவிய

தொடர்புகளை, மணிவாசகர் திருவாசகத்தில் விளக்குகின்றார். தாம் பெற்ற இறையருட் பேரின்ப அனுபவச் செய்திகளை, நம் பொருட்டு உலகியற் சிற்றின்பத்துறைகளில் வைத்து, மணிவாசகர் அழகுற விளக்கிப் பாடியருளிய அரும்பெறல் நூலே, திருச் சிற்றம்பலக் கோவையார்! திருவாசகம், திருக்கோவையார் என்னும் இவ்விரு பெரு நூல்களும், செந்தமிழ்ச் சிவநெறி அன்பர் களுக்கு இரு கண்கள் போல்வனவாகும்.

திருவாசகம் திருக்கோவையார்என்னும் இருபெரு நூல்களும், நம் தமிழ் மொழிக்கண் உள்ள அரும்பெறல் நூல்களுள் சிறப்பிடம் பெறுதற்குரியனவாய்ப் பெரும் புகழ் வாய்ந்து திகழ்வனவாகும். திருவாசகம் மாணிக்கவாசகரது அயரா அன்பின் திறனை விளக்குகின்றது; திருக்கோவையார் அவர் தம் அரிய புலமையறிவின் பெற்றியினைத் திறம்படப் புலப்படுத்துகின்றது. சிவபெரு மானின் அருள் நலங்களைப் புகழ்ந்து பாடிப் போற்றுகின்றது திருவாசகம். நமதருமைச் செந்தமிழ் மொழியின் சீரிய அகப்பொருள் இலக்கணங்களைத் திறம்படத் தெளிவித் துணர்த்தித் தேற்றுகின்றது திருக்கோவை யார். மாணிக்கவாசகப் பெருமானின் சிவானுபவ நலன்களைத் திருவாசகத்தால் உணரலாம்; அவர் தம் அளப்பரிய செந் தமிழ்ப் புலமை நலத்தின் சிறப்பினைத் திருக்கோவையார் நமக்குத் தெள்ளிதிற் புலப்படுத்தும். திருவாசகம் சிவநெறித் திருநூல்: திருக்கோவையார் செந்தமிழ் மொழிப் பெருநூல்; திருவாசகம் தெவிட் டாத தேனையனைய சிறப்பினதெனின், திருக் கோவையார் அத்தேனிடை யூறிய தெய்வ நலம் சிறந்த செந்தமிழ் அமிழ்தம் போல்வ தாகும்.


'அறிவால் சிவமேயாவர்' என்றும், 'திருவாதவூர் மகிழ் செழுமறை முனிவர் ஐம்பொறி கையிகந்து அறிவாய் அறியாச் செம்புலச் செல்வர் ஆயினர்' என்றும், பல வகையாகச் சான்றோர்கள் புகழ்ந்து துதிக் கும் மாணிக்கவாசகரின் மாட்சி கடலினும் பெரிது. அவர் நம் பொருட்டு அருளிச் செய்த ஞானப் பனுவல்களாகிய திருவாச கம் திருக்கோவையார் என்னும் இருபெரும் அருள் நூல்களையும் அன்புடன் ஓதி, இறை வனை வழிபட்டு உய்ய நாம் அனைவரும் முயல்வோமாக! ★

---

# பொறுத்தருள்க!

நமது "திருக்கோயில்" திங்கள் இதழ் அச்சிடுவதற்குப் பழைய ஒப்பந்தம் முடிவடைந்ததனால், முறைப்படி புதிய ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று அரசின் எழுது பொருள் அச்சுத்துறை இயக்குநர் அவர்கள் ஆய்வு செய்து தேர்ந்தெடுத்து அனுமதித்த பின்னர், வேறு ஒரு புதிய அச்சகத்தினிடம் இதழின் பதிப்பு வேலையை ஒப்படைக்க நேர்ந்ததன் காரணமாக, மே மாத இதழ் வெளிவரச் சிறிது காலம் தாழ்த்து விட்டது. தவிர்க்க முடியாமல் நேர்ந்த இக் காலதாமதம் குறித்துப் பொறுத்தருளுமாறு, அன்பர்கள் வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

—ஆசிரியர்



# திருப்பணி செய்வதன் சிறப்பு

மாண்புமிகு.

திரு. மு. கண்ணப்பர் அவர்கள்,

அறநிலைய அமைச்சர்

## அறப்புறங் காவல் :

தமிழ்நாடு கோயில்கள் நிறைந்த சிறந்த தெய்விக நாடு. வேறு எந்த நாட்டிலும், தமிழ் நாட்டிற் போலச் சுமார் 1500 ஆண்டுகட்கும் மிக முற்பட்ட, பற்பல பெருங் கோயில்கள் நூற்றுக்கணக்காக இருப்பதாகத் தெரியவில்லை. சுமார் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்ற, தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம் என்னும் தமிழ்ப் பெரும் இலக்கண நூலில், 'கோயில்' என்னும் சொல்லுக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அக்கோயில்களில் படிமைகள் வைத்து வணங்கப்பெற்றமை பற்றிய குறிப்பும் காணப்படுகின்றது. தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வதற் குரிய காரணங்களுள் ஒன்ருக, அறப்புறங்காவல் அதாவது அறங்களையும் அறநிலையங்களையும் சரியாக நடைபெறுகின்றனவா என்று பார்த்துப் பாதுகாப்பதற்காக நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று வருதல், ஒரு காரணமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

இக் குறிப்புகளினுல், 5000 ஆண்டுகளுக்கு முன்னரேயே, தமிழ் நாட்டில் கோயில்களும், அவற்றில் இறைவனின் திருவுருவப் படிமைகளும், அவற்றிற்காகச் செய்யப்படும் வழிபாடுகளும், அவ்வழிபாட்டை யொட்டிச் செய்யப்படும் பலவகை அறங்களும் இருந்துவந்தன என்று, நாம் ஓரளவு ஊகித்து அறிந்து கொள்ள முடிகின்றது.

## சிறப்பொடு பூசை :

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளிலேயே, கோயில்களில் நாடோறும் நித்திய பூசைகளும், பருவம் மாதம் ஆண்டு முதலிய காலங்களில் பெரிய அளவில் நடைபெறும் நைமித்திகங்கள் என்னும் சிறப்பு விழாக்களும் செய்யப்பெற்று வந்தன என்பது, ''சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு'' என்னும் திருக்குறளால் ஊகித்து உணரக் கிடக்கின்றது.

**கோயில்கள் :**

சுமார் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிலப்பதிகாரத்தில், புகார்க் காண்டத்தில், புகார் நகரில், அமரர்தருக் கோட்டம்- வெள் யானைக் கோட்டம்- புகர்வெள்ளை நாகர்தம் கோட்டம்-பகல்வாயில் உச்சிக்கிழான் கோட்டம்-ஊர்க்கோட்டம்-வேற்கோட்டம்-வச்சிரக் கோட்டம்-புறம்பணையான் வாழ்கோட்டம்-நிக்கந்தக்கோட்டம்-நிலாக்கோட்டம்—என்று எத்தனையோ பற்பல கோயில்கள் இருந்தன என்று, இளங்கோவடிகள் கூறுகின்றார்.

பண்டைக் காலத்தில் பல்லவப் பேரரசர்களும், அவர்களுக்குப் பின்வந்த தமிழகத்தின் முடியுடை மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்களும், எண்ணில்லாத பல எழில்மிக்க கோயில்களை எடுப்பித்துள்ளனர். சுமார் 1300 ஆண்டுகளுக்கு முற்பட்ட கோச் செங்கட்சோழன் என்னும் அரசன் ஒருவன் மட்டும், தன் வாழ்நாளில் சிவபெருமானுக்கு 70 மாடக் கோயில்களை எழுப்புவித்தான் என்று திருமங்கை யாழ்வார், தமது திருப் பதிகத்தில்,

''இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோளீசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலகம் ஆண்ட,
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே''

என்று புகழ்ந்து பாடிப் போற்றியுள்ளார்.

கோச்செங்கட் சோழனைப் போலவே, தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய இராசராச சோழன் (கி. பி. 985-1014), கங்கை கொண்ட சோழபுரம் கோயிலைக் கட்டிய இராசேந்திர சோழன் (கி. பி. 1052-1064), மன்னார்குடி இராசகோபாலசுவாமிகோயிலைக் கட்டிய முதற் குலோத்துங்கச் சோழன் (கி. பி. 1070-1120), திரிபுவனம் கம்பகரேசுவரர் கோயிலைக் கட்டிய மூன்றாம் குலோத்துங்கச் சோழன் (கி.பி.1178-1223), முதலிய அரசர்கள் பலரும்கட்டுவித்த கோயில்களின் சிறப்பும் பெருமையும் அளவற்றனவாகும். இவ்வாறே பிற் காலத்தில் விசயநகர அரசர்கள், மதுரைநாயக்கமன்னர்கள் முதலியவர்கள் கட்டுவித்த கோயில்களும் மிகப் பலவாகும்.

**கலைகளின் உறைவிடம் :**

இக்கோயில்களெல்லாம் தமிழ்நாட்டிற்குப் பல்லாற்றானும் பெருஞ் சிறப்பை அளித்து வருகின்றன. இவற்றின் அருமையும் பெருமையும் அழகும் கண்டு, வெளி நாட்டவரும் வியந்து புகழ்ந்து பாராட்டுகின்றனர். தமிழ் மக்களின் நாகரிகம் பண்பாடு ஆகியவற்றிற்கு இக்கோயில்கள் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து வருகின்றன.

சிற்பம் ஓவியம் இசை நடனம் நாடகம் முதலிய எல்லாக் கலைகளுக்கும் கோயில்களே நிலைக்களமாகவும் உறைவிடமாகவும் விளங்கிவருகின்றன. கோயில்களை மையமாகக் கொண்டே தமிழ் மக்களின் சமுதாய வாழ்க்கை பல்லாற்றானும் பின்னிப் பிணைந்து நிலைபெற்றுச் சிறந்து விளங்கி வருகின்றது.

பழமையும் பெருமையும் மிக்க இத்தகைய சிறந்த கலைஞான ஆன்மீகச் செல்வங்கள் ஆகிய கோயில்கள், காலப்போக்கில் நாளடைவில் சிதைந்து போகாமல் என்றும் நின்று நிலவி நிலைபெற்று விளங்கும்படி செய்ய வேண்டுவது, தமிழ் மக்களாகிய நம் எல்லோருடைய கடமையுமாகும். இக் கடமையை அவ்வப்போது நாம் கண்ணும் கருத்துமாக இருந்து செய்து வருதல் வேண்டும் என்னும் கருத்தினாலேயே, நம்பண்டைப் பெரியோர்கள் திருப்பணி செய்தலையும், திருக் குடநீராட்டு விழாப் புரிதலையும் பெரிதும் வற்புறுத்தி வந்துள்ளனர்.

நம் முன்னோர்கள் நம்பொருட்டு எவ்வளவு அரும்பாடுபட்டு நம் தமிழகத்திலுள்ள எண்ணில்லாத பல கோயில்களை எடுப்பித்துள்ளனர் என்று நாம் கருதியுணர் வோமாயின், கோயில்களுக்குத் திருப்பணி செய்வதன் சிறப்பும் இன்றியமையாமையும் பிறவும் தெள்ளிதிற் புலனாகும்.

**செய்யுள்போற் செய்த திருக்கோயில் :**

திருவெங்கைத் தலத்தில் அண்ணாமலை ரெட்டியார் என்னும் வள்ளல் ஒருவர் அரிதின் முயன்று கட்டுவித்த திருக்கோயிலின் சிறப்பை விளக்க முற்படும் துறைமங்கலம் சிவப்பிரகாசர், அத்திருக்கோயிலுக்கு நல்லிசைப் புலவர் ஒருவர் நயமுற இயற்றிய செய்யுளை உவமைகூறி மகிழ்கின்றார். திருக் கோயிலின் அமைப்பும் சிறப்பும் கவிஞருக்கு வேறு எதனை நினைவூட்டும்? செய்யுட்கள் பாடிப்பாடிக் கைவந்து தேர்ந்த கவிஞருக்

குச் செய்யுளைப் பற்றிய நினைவே மிக்கு எழும் என்று சொல்லுதலும் வேண்டுமோ? திருக்கோயில் கட்டுவோர் இடைவெளி ஏற்படாதவாறு கற்களை வைத்துச் சந்தி பொருத்துவர்; சீர்கெடாமல் அடுக்கி ஒழுங்குபடுத்துவர்; அற்புதமும் அழகும் மிக்க அரிய பல சிற்ப வேலைப்பாடுகளைச் செய்வர். அவ்வாறே செய்யுள் இயற்றும் கவிஞர்களும் சொற்களைச் சந்தி பிழையாது பொருத்தமுற அமைப்பர்; செய்யுளியலுக்கு ஏற்பச் சீர்கள் கெடாது அடுக்குவர்; அச் செய்யுட்களில் தமது கற்பனைத் திறனுற் புலவர்கள் புகழ்ந்து போற்றும் வண்ணம் உவமை உருவகம் முதலிய அற்புத அணிகள் பலவற்றைப் பொருந்தச் செய்வர். இன்னோரனைய ஒப்புமைத் தன்மைகள் பலவற்றையும் எண்ணித் துறைமங்கலம் சிவப்பிரகாசர் அருளிச் செய்த,

''சந்தி பொருத்தித் தளைஞ்சீர் கெடாதடுக்கிப்
புந்தி மகிழ் அற்புத அணித்தாய்-மந்தையோர்
செய்யுள்போற் செய்த திருக்கோயில்''

எனவரும் திருவெங்கையுலா வரிகள், எத்துணைக் கற்பனை நயம்மிக்குச் சிறப்பும் பொருத்தமும் வாய்ந்து திகழ்கின்றன.

இவ்வாற்ருல் நம் முன்னோர்கள் எவ்வளவு அருமபாடுபட்டு அழகிய பற்பல கோயில்களை அமைத்துள்ளனர் என்பதையும், அவற்றை அழிய விடாமல் திருப்பணி செய்து போற்றிக் காப்பாற்ற வேண்டுவது நம்முடைய தலையாய கடமை என்பதையும், நாம நன்கினிது உணரலாம்.

பராக்கிரம பாண்டியன் :

திருப்பணி செய்வதன் சிறப்பையும், கடமையையும் விளக்கும் முறையில், தென்காசிக் கோயிலைக் கட்டுவித்த அரிகேசரி பராக்கிரம பாண்டியன் என்பவன் (கி. பி. 1411-1463), தான் 17 ஆண்டுகள் அரிதின் முயன்று சிற்பக்கலை நலம் பெரிதும் சிறக்கக் கட்டிய கோயிலைப்பற்றி, தனது மரணப் படுக்கையில் இருந்து பாடியுள்ள பாடல்கள், கருங்கல் மனத்தையும் கரைக்க வல்லனவாகும்.

(1) ''காசி விசுவநாதப் பெருமானின் அருளின்படி, மனத்தால் நினைக்கவும் எட்டாத நிலையில், இக்கோயில் ஒருவாறு கட்டப் பெற்றது. இதனை எமக்குப் பின்னர் ஆதரித்துக் காப்பாற்ற இருக்கின்ற அரசர்களின் திருவடிகளை வணங்கி, அவற்றை யான் என் தலைமேல் தரித்துக் கொள்ளுகிறேன்''.

(2) ''இந்தத் தென்காசியில் அமைக்கப் பெற்ற பொன்மயமான இக்கோயிலில், வரக்கூடாத குற்றம் ஏதேனும் வருமானல், அதனை நீக்கி, இக்கோயிலைப் போற்றிப் பாதுகாப்பவர்களைப் பராக்கிரம பாண்டியனுகிய யான், உலகத்தில் உள்ளவர்களெல்லாரும் அறியும்படி பணிந்து வணங்குகின்றேன்.''

(3) ''அரிகேசரி பராக்கிரம பாண்டியனுகிய யான், சிவபெருமானின் திருவருளால், இந்தத் தென்காசிக் கோயிலைக்கட்டி இது நன்கு நிலைபெறுவதற்காக வேண்டிய எல்லா அறங்களையும் செல்வங்களையும் ஏற்பாடு செய்துள்ளேன். இதனை அன்பு கொண்டு திரிசேர்ந்த தீபம்போலக் கண்ணும் கருத்துமாகப் போற்றிக் காப்பாற்றி வருபவர்களுடைய பொற்பாத கமலங்களை யான் என் தலைமேல் சூடிக் கொள்ளுகின்ருேம்''.

(4) ''சாத்திரங்களை ஆராய்ந்து, அவற்றின்படி யான் ஏற்பாடு செய்துள்ள பூசைகளை நடைபெறும்படி செய்து, இந்தக் கோயிலைப் பாதுகாக்கும்படி, எனக்குப் பின்னுல் என்னுடைய குடும்பத்தில் வருகின்ற அரசர்களிடம், பராக்கிரம பாண்டியனுகிய யான் அடைக்கலமாக ஒப்படைக்கின்றேன்''.

என்று கருங்கல்மனமும் கரைந்து உருகும்படி தன் மரணப்படுக்கையிலிருந்து பராக்கிரம பாண்டியன் எழுதியுள்ள இப்பாடல்களின் கருத்தை நினைக்குந்தோறும், கோயில்களுக்குத் திருப்பணிகள செய்ய வேண்டுவதின் சிறந்த கடமை, நமக்கு நன்கு புலனுகும். அப்பாடல்கள் பின்வருவன ஆகும்.

''மனத்தால் வகுக்கவும எட்டாத
கோயில் வகுக்க முன்னின்று
எனைத்தான் பணிகொண்ட நாதன்
தென்காசியை என்றும்மண்மேல்
நினைத்தாதரஞ் செய்து தங்காவல்
பூண்ட நிருபர் பதந்
தனைத்தாழ்ந் திறைஞ்சித் தலைமீதில்
யானும் தரித்தனனே''

''ஆராயினும் இந்தத் தென்காசி மேவும்
பொன் ஆலயத்து
வாராததோர் குற்றம் வந்தால்
அப்போது அங்கு வந்ததனை
நேராகவே யொழித்துப் புரப்
பார்களை நீதியுடன்
பாரார் அறியப் பணிந்தேன்
பராக்கிரம பாண்டியனே''

''அரிகேசரிமன் பராக்கிரம
மாறன் அரனருளால்
வரிசேர் பொழிலணி தென்காசிக்
கோயில் வகுத்துவலம்
புரிசேர் கடற்புவி போற்றவைத் தேன்:
அன்பு பூண்டிதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பார்
பொற்பாதம் என் சென்னியதே''

''சாத்திரம் பார்த்திங்கு யான் கண்ட
பூசைகள் தாம் நடாத்தி
ஏத்தி அன்பால் விசுவநாதன் பொற்கோயில்
என்றும் புரக்கப்
பார்த்திபன் கொற்கைப் பராக்கிரம
மாறன் பரிவுடன் நம்
கோத்திரந் தன்னிலுள் ளார்க்கும்
அடைக்கலங் கூறினனே''

முடிவுரை :

இப்பாண்டிய மன்னன் போலவே, கோயில் கட்டிய மற்றைய எல்லா அரசர்களும், பெரியோர்களும்கூட நினைத்திருப்பர். அம் முன்னோர்களுடைய விருப்பத்தையும் உருக்கத்தையும் உணர்ந்து, நாம் தமிழகத்திலுள்ள எல்லாக் கோயில்களுக்கும் சிறப்பாகத் திருப்பணிபுரியக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இது நமது தலையாய கடமை. இம்மைக்கும் மறுமைக்கும் பயன் விளைவிக்கக் கூடிய சிறந்த செயல். நாட்டுக்கும் உலகுக்கும் நலம் விளைவிக்கக் கூடிய அருந்தொண்டு. திருப்பணி புரிவதன் மூலமாக, நாம் அடையும் நலன்களுக்கு அளவேயில்லை. ★



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில், திருமுறை வழிபாட்டுத் துவக்க விழா நிகழ்ச்சியிற் கலந்து கொண்டு சிறப்பித்த பெருமக்கள் (3-4-73)

# சிவத்திரு ஞானியாரடிகள்

''தமிழ்த் தென்றல்''

(திரு. வி. கலியாணசுந்தரனார்)

ஞானியார் சுவாமிகளின் முழுப்பெயர் சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் என்பது. சுவாமிகள் திருக்கோவலூர் ஆதீனம் ஞானியார் மடத்தின் தலைவராயிருந்தவர். அம்மடத்தின் கிளையுள்ள திருப்பாதிரிப்புலியூர் அறப்பள்ளியே சுவாமிகளின் உறைவிடமாயிருந்தது.

தமிழ்நாட்டில் எத்துணையோ மடங்கள் உள்ளன. அவைகள் என்னை ஈர்த்தனவா? இல்லை. அம்மடங்களுள் ஒன்றாகிய ஞானியார் மடம் மட்டும் என்னை ஈர்க்குமோ? பின்னை என்னை ஈர்த்தது எது? ஞானியார் சுவாமிகளின் பரந்த கலையொளி. ஞானியார் சுவாமிகள் தென்மொழியில் பெரும்புலமை வாய்ந்தவர்; வடமொழியில் புலமையுடையவர். சுவாமிகட்கு ஆங்கிலமுந்தெரியும். இவை எல்லாவற்றிற்கும் மேலாகச் சுவாமிகளிடத்தில் இயற்கைப் புலமை அமைந்திருந்தது.

சுவாமிகளை யான் முதன்முதல் 1913-ஆம் ஆண்டிலே வேலூரிலே சைவ சித்தாந்த மகாசமாச ஆண்டுவிழா மேடையிலே கண்டேன். அந்நாள் நன்னாள். ஆறுமுக நாவலரை யான் கண்டதில்லை அவரது நாவன்மையைப் பிறர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இளமையில் யான் கண்ட நாவலர் கதிரைவேற்பிள்ளையே. ஞானியார் சுவாமிகள் பேச்சைக் கேட்ட பின்னைத் தமிழ்நாட்டில் மற்றுமொரு நாவலர் இருத்தலைக் கண்டேன். தமிழ் நாட்டிலும் கிளாட்ஸ்டன்கள் சுரேந்திரர்கள் இருக்கிறார்கள் என்று என் நெஞ்சம் எண்ணியது.

ஞானியார் சுவாமிகள் அறப்பள்ளித் தலைமையேற்று அரைநூற்றாண்டு ஆய போது, அப்பள்ளிச் சார்பில் பொன்விழா (1939) கொண்டாடப்பட்டது. அவ்விழா மலரில் என் சிறு மொழியும் இடம் பெற்றது. அம்மொழியில் இரண்டொரு பகுதியை அகழ்ந்து ஈண்டுத் தருகின்றேன். அஃது ஈண்டைக்குப் பொருத்தமாகும்.

''......முருகன் சேவடி வருடி யுருகும் ஈரநெஞ்சும், அவன் புகழ் பேசி இனிக்கும் நன்னாவும், தண்மை பொழியும் செவ்விய நோக்கும், வெண்ணீறுதுதையும் நெற்றியும், மாணிக்கக் குழை பிறங்குஞ் செவியும், பொன்னொளிரும் மணிமார்பும், கருமைக் கதிர் விரிக்குந் திருமேனியும், 'சண்முகா—சண்முகா' என்று நீறளிக்கும் நீண்ட கையுங் கொண்ட அடிகளின், திருவோலக்கப் பொலிவு, என்னுள்ளத்தில் ஓவியமெனப் படிந்து நிற்கிறது. அஃது எவர் உள்ளத்தையுங் கவரும்; எவர்க்கும் எளிதில் இன் பூட்டும்......''

''......ஞானியார் சுவாமிகள் மாணாக்கருக்குப் பாடஞ்சொல்லும் போதும், சொற்பொழிவு நிகழ்த்தும்போதும் தொல்காப்பியனாராகவும், நக்கீரராகவும், திருவள்ளுவராகவும், இளங்கோ அடிகளாகவும், கச்சியப்பராகவும், கம்பராகவும், சேக்கிழாராகவும், வியாசராகவும், நீலகண்டராகவும், சிவஞான முனிவராகவும், பிறராகவும் முறை முறையே விளங்கி விளங்கி இலக்கிய இலக்கணச் சாத்திர நுட்பங்களை வெளியிடுவதைக் கேட்டுக் கேட்டுப் புலவரானவர் பலர். பழம் புலவர் பலரும் ஞானியார் ஒருவரிடம் விளங்குதல் வியப்பன்றோ?......''

''......சுவாமிகளின் பேச்சுத் திறனை எதற்கு ஒப்பிடுவது? கடல்மடைத் திறப்

திருப்பாதிரிப்புலியூர்ச் சிவத்திரு. ஞானியார் அடிகளின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியை முன்னிட்டு. இக்கட்டுரை ''திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்'' என்னும் நூலினின்று எடுத்து வெளியிடப் பெறுகின்றது.

— ஆசிரியர்.

புக்கா-வெண்கலக் கோட்டையில் அரசுவா புகுதலுக்கா - பெரும் புயலுக்கா—ஓயா மழைக்கா? எதற்கு—எதற்கு ஒப்பிடுவது? பலர் பலவாறு கூறுப.''

''திருப்பாதிரிப்புலியூரில் வீற்றிருந்து அடியவர்களுக்கு அருள் புரியும் கோவலடிகள் கருமை பூத்த ஒரு பொறுமை மலை. அம்மலையினுச்சியில், மூளையில்-கலைமேகங்கள் பொழிந்த அறிவு மழைநீர், தேங்கித்தேங்கிப் புரண்டு திரண்டு பன்முகங் கொண்டெழுந்து முட்டி முடுகி, வாயின் வழியே முழங்கி விரைந்து இடையீடில்லாச் சொற்றொடர் அருவியாக இழிந்து பலதிறச்சுவை நுட்பப்பொருள்கள் மிதந்து சுழல, அன்பு வெள்ளப்பெருக்காய்ப் பரவிப் பரந்து, அருள் அலைகொழித்துக் கொழித்து ஓடும். நீர் பருகப்போந்த புலி, கரடி, யானை, மான், பசு முதலியன அருவி முழக்கிலெழும் இன்னொலி கேட்டு அதில் ஈடுபட்டுத் தன்தன் பகைமை மறந்து மயங்கி நிற்கும். கரை நீராடுவோர் வெள்ளத்திலுறும் மின்விசையால் பிணி நீங்கப் பெறுவர். ஞானியார் சுவாமிகள் பேச்சால் விளைந்த நலன் அளப்பரிது......''

சுவாமிகள் முதன் முறை தென்னாடு நோக்கியபோதும், சென்னை போந்த போதும் என் பத்திரிகைகள் முன்னணி வேலைகள் செய்தன. அடிகள் தென்னாடு சென்றபோது 'தேசபக்தன்' தொண்டாற்றினான்; சென்னை சேர்ந்தபோது 'நவசக்தி' பணி செய்தாள். தமிழ் நாட்டிலே பலவிடங்களிலே பலதிற விழாக்கள் ஞானியார் தலைமையிலே நடைபெறும். அவ்விழாக்களில் என் ஒலி பெருதன மிகச் சிலவாயிருக்கும். சுவாமிகள் தலைமையில் யான் பேசிய பொருள் வகைகள் பலதிறம். அவைகளையெல்லாம் சுவாமிகளின் முடிவுரை அணி செய்யும்.

ஞானியார் இலௌகிகத்தில் வல்லவராம். ஆனால் சுவாமிகள் என்னிடம் இலௌகிகம் பேசியதே இல்லை. பெரிதும் பொதுக்காரியங்களைப் பற்றியே பேசுவர். சென்னை இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்த ஜன சபைக்கு இரண்டாம் முறை சுவாமிகள் எழுந்தருளியபோது சுவாமிகளும் யானும் ஓய்வாக உரையாடிக் கொண்டிருந்தோம். அப்பொழுது சுவாமிகள் 'நீங்கள் ஏன் செல்வரை அருவருக்கிறீர்' என்று கேட்டார். 'யான் செல்வரை அருவருப்பதில்லை; ஒரேயிடம் செல்வம் திரள்வதை அருவருக்கிறேன்; செல்வரிடம் பொருளுக்குச் செல்வதில் எனக்கு அருவருப்புண்டு' என்றேன்.


யான் இளமைதொட்டு ஞானியார் சுவாமிகளை வணங்கி வந்தேன். ஒருவரையும் வணங்குதல் கூடாதென்று சிலர் பேசுவர். அவருள் ஒருவர் 'நீங்கள் ஏன் ஞானியாரை மட்டும் வணங்குகிறீர்' என்று கேட்டார். அதற்கு 'ஞானியாரை வணங்கும் பழக்கம் எனக்கு இன்று நேற்று ஏற்பட்டதன்று. அஃது ஏற்பட்டு நீண்ட காலமாயிற்று. அதை வலிந்து நிறுத்தப் புகுவது ஆணவமாகும்' என்று பதிலிறுத்தேன்.

ஞானியார் சுவாமிகள், முதல் ஆண்டு விழா, கடந்த (1942) தைப்பூசத்தில் இரண்டு நாள் நடைபெற்றது. முதல்நாள் சுவாமிகளின் படத்திறப்பு என்னால் நிகழ்த்தப்பட்டது. இரண்டாம் நாளும் யான் பேசுதல் நேர்ந்தது. அப்பொழுது ஓரிடத்தில், 'யான் ஒருவரை வணங்கி வந்தேன். அவரும் மறைந்தார்...' என்று குறிப்பிட்டேன்.

ஞானியாரின் மடத்துத் தலைமையும், சிவிகை ஊர்தலும், இன்ன பிறவும் சுவாமிகளை வெளியூர் செல்லாதவாறு தகைந்து வந்தன. அவைகள் சுவாமிகளைச் சிறைப்படுத்தின என்றே சொல்வேன். இலங்கை, மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகள் சுவாமிகளின் தமிழைப் பருக எவ்வளவு விழைந்தன என்பதை யான் அறிவேன்.

1941-ஆம் ஆண்டு அன்பர் இராமசாமி நாயுடுஎன்பவர்தென்னாப்பிரிக்காவினின்றுஞ் சென்னை போந்தனர். அவர் சுவாமிகளையும் என்னையும் தென்னாப்பிரிக்காவுக்கு அழைத்துச் செல்ல விரும்பினர். சுவாமிகளைக் காண நாயுடுவும் யானும் காஞ்சி சென்றோம்; சுவாமிகளைக் கண்டோம். நாயுடு சுவாமிகளிடம் தமது கருத்தைத் தெரிவித்தனர். 'எனக்குள்ள தடைகளை முதலியார் சொல்வார்' என்ற பதில் சுவாமிகளிடத்திருந்து நகைப்புடன் பிறந்தது. காஞ்சியில் கண்ட அந்நகை முகக் காட்சியே இறுதியதாயிற்று.

★



திருப்பாதிரிப் புலியூர்

# அருள்மிகு ஞானியார் அடிகள்

தொகையாலும் வகையாலும் சொலமேற்கொள்
பொருள்விரித்துத், துலங்கு தற்கா
நகையுணர்வு, பொருள்செறிந்த நல்லுவமை,
நன்மேற்கோள், நயமும் காட்டித்
தகையாய வழக்கோடு சாத்திரத்தின்
நுணுக்கங்கள் தகவிற் சாற்றித்
திசையாவும் அருள்பரப்பும் திருப்புலிசை
ஞானியர்தாள் சிந்தித் துய்வாம் !

— ந. ரா. மு.

## சிறப்பு நலங்கள் :

சிவத்திரு ஞானியார் அடிகள், நம் தமிழ்நாடு செய்த தவப்பயனாக வந்துதித் தவர்கள். அவர்களை நினைக்குங்காலெல்லாம் ''ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை'' எனப் போதரும் சேக் கிழார் பெருமானின் திருப்பாடல், நினைவிற் போந்து இன்புறுத்துகின்றது. சிவப்பிர காசர், குமரகுருபரர், சிவஞான முனிவரர் ஆகிய பலரும் ஒருருவாய்த் திரண்டபேரு ருவே, ஞானியார் சுவாமிகளின் திருவுருவம் எனக் கூறி, இறும்பூது எய்தலாம்படி அவர் களின் பெருமாட்சிமை இணையற்றுப் பிறங் கியது.

சிவிகை இவர்ந்து தென்னாடெங்கணும் திருவுலா எழுந்தருளிச் செந்தமிழ் பரப்பிய செயலால், சுவாமிகள் திருஞான சம்பந்தப் பெருமான் எனும்படி திகழ்ந்தனர். சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும் கொண்டு, ''மொய்த்துவளர் பேரழகு மூத்த வடிவேயோ? அத்தகைய மூப்பெனும் அதன் படிவமேயோ?'' என வியக்கும் வண்ணம், சிவவேடப் பொலிவழகு சிறந்து சிவநெறி வளர்த்த செயலால் திருநாவுக்கரசர் போன்று விளங்கினர். உலகியலுணர்வின் உயர்வாற் சுந்தர மூர்த்திகள் போலவும், கனிவும் கசிவும் மிக்க மனநிலையின் மாட்சிமையால் மாணிக்கவா சகர் போலவும், மக்களிடையிற் பக்திச் சுவையும் நெறியும் பரப்பிய பான்மையாற் சேக்கிழார் போலவும், ஞானியார் சுவாமிகள் நலமுறப் பொலிந்தனர் எனலாம்.

கல்விக் கடலாய், குணமலையாய், செந் தமிழ்த் திங்களாய், சிவநெறிச் செஞ்ஞா யிருய், இன்சொல் மணக்கும் தென்றலாய், அறிவுநலங் கொழிக்கும் பேரருவியாய், நகை முகிழ்த்து அருட்டேன் சொரியும் நறுமலராய் சார்ந்தார்க்கு நலம்புரியும் தண்பொழிலாய் வாழ்ந்து வயங்கி யொளிர்ந்த சுவாமிகளின் அருமை பெருமைகளை, எம் ஒரு நாவாற் கூறல் ஒல்லுமோ? அவை விரிப்பின் அகன் றும் தொகுப்பின் எஞ்சியும் செல்லும் சிறப் பினவாகும்.

**தொண்டின் திறன் :**

சிவத்திரு ஞானியார் அடிகள், ஆசிரியர் திருமூலர் "ஞானம் உண்டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே" என அருளிச் செய்ததன் நுட்பம்தேர்ந்து, நாட்டின் நலம் வளர, மக்களிடையே அறிவொளியைப் பரப்பி, அறியாமை இருளை நீக்குதல் வேண்டும் எனத் தெளிந்து, தமது ஒப்புயர்வற்ற அரும்பெருஞ் சொற்பொழிவுகளால், ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்குமேல் "நாளும் தமிழ் பரப்பும்" நற்பெருந்தொண்டு புரிந்தருளிய பெருந்தகையார் ஆவர்! சுவாமிகளின்சொற்பொழிவுகள் நான்கு ஐந்து மணி நேர அளவும் கூடநிகழும். சுவாமிகளின் சொற்பொழிவுகளிற் பொதுளி நிறைந்து விளங்கும் சிறந்த கருத்துக்களின் செறிவும், ஆழ்ந்த பேருணர்வும், பரந்து விரிந்த அறிவு நலனும், சீரிய நோக்கங்களில் தூய ஈடுபாடும் பிறவும் எவருள்ளத்தையும் கவர்ந்து கொள்ளை கொண்டு விடும்.

ஞானியார் சுவாமிகளின் சொற்பொழிவுகளிற் பேசுபவரும் கேட்பவரும், தம்மையும் உலகையும் மறந்து, சொற்பொழிவின்கண் ஈடுபட்டு ஒன்றித் திளைத்து இன்புறுவர். எத்துணைநேரம் சொற்பொழிவு நீட்டிப்பினும் "ஆ! இத்துணை விரைவிலா சொற்பொழிவு முடிந்துவிட்டது?" என்றே யாவரும் இரங்கி நிற்பர். கற்றாரும் கல்லாரும், இளைஞரும் முதிஞரும், ஆண்களும் பெண்களும் ஆகிய பலதிற நிலையினரும் பெருந்திரளாக ஒருங்கு கூடியிருந்து சுவாமிகளின் சொற்பொழிவைச் 'சித்திரப் பாவையின் அத்தக அடங்கியிருந்து செவி வாயாகவும், நெஞ்சு களனாகவும் அமையக் கேட்பர். ஒலி பெருக்கிகள் முதலியன வழக்கத்திற்கு வாராத அந்த நாளில், ஆயிரக்கணக்கான மக்கள் ஒருங்கு திரண்டு ஊசிவிழும் ஒலி கேட்கும்' வகையில், மிகவும் அமைதியாக இருந்து, ஆர்வத்துடனும் பக்தியுடனும் அடிகளின் சொற்பொழிவைச் செவியாற்பருகி அறிவுவேட்கை தணியப் பெறுவர்.

"மருவியகால் விசைத்தசையா
மரங்கள்மலர்ச் சினைசலியா
கருவரைவீழ் அருவிகளும்
கான்யாறும் கலித்தோடா
பெருமுகிலின் குலங்கள்புடை
பெயர்வொழியப் புனல்சோரா
இருவிசும்பின் இடைமுழங்கா
எழுகடலும் இடைதுளும்பா"

எனத்தக்க நிலையில், ஆனுயரின் குழலோசை கேட்டு, நிற்பனவும் சரிப்பனவுமாம் அனைத்துயிரும் இசை மயமாய்ச்செயலற்று நின்றது போல, மிகவும் அமைதியாக இருந்து, பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆர்வம் பெருகச் சுவாமிகளின் சொற்பொழிவைக் கேட்பார்களெனின், அவர் தம் சொல்வன்மையை என்னென்று சொல்வது ?

**சொற்பொழிவு நலங்கள் :**

ஞானியாரடிகளின் சொற்பொழிவுகள், கடல்மடை திறந்தாற் போலவும், திருக்குற்ருலத்து அருவிப் பெருக்கம் போலவும் தங்கு தடையின்றி, வெண்கல ஒலியுடன் 'கணீர்' என்று, செஞ்சொற்களான் இயன்று இன்னோசை அமைந்து, பயனில் சொற்கள் சிறிதும் விரவாமல், நயனொளிரும் கருத்துக்கள் செறிந்து, பொருள் நலங்கள் பொதுளிப் புலமை நலம் பொருந்தித் தொடக்க முதல் முடிவு வரையில் சுவைநிரம்பிக் களிதுளும்ப நிற்கும். "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" என்ற திருக்குறளுக்குச் சிறந்த இலக்கியமாக விளங்கியது, ஞானியார் சுவாமிகளின் சொற்பொழிவே யாகும். "நரைமுதிர் யாக்கை நடுங்கா நாவின் உரை மூதாளன்" என மணிமேகலையின்கண் அறவண அடிகள் போற்றப் பெறுதல் போல, நமது ஞானியார் அடிகளார், தமது முதுமை நிலையிலும் நடுங்கா நாவின் உரை மூதாளராகத் திகழ்ந்து தேன்தரு மாரி போன்று செஞ்சொல் விரிவுரைகள் செய்து போந்தனர்.

அவ்விரிவுரைகள் "உடல்குளிர, உயிர் தழைக்க, உணர்ச்சிஓங்க, உளங்கனிய, மெய்யன்பர் உள்ளத்தூடே கடல் அலைய பேரின்பம் துளுப்பச் செய்யும்". அடிகளார் வடமொழி தென்மொழி தெலுங்கு கன்னடம் ஆங்கிலம் என்னும் பல மொழிகளைப் பல ஆண்டுகள் முயன்று பயின்று தேர்ந்த "பல்கலைக் குரிசில்" ஆதலின், மேன்மேற் பொங்கிப் பெருகும் தங்குதடையற்ற கருத்துச் செறிவும், புலமை வளப்பமும், ஆராய்ச்சி மாட்சிமையும், அவர் தம் சொற்பொழிவுகளிற் காணப்படும்.

சுவாமிகள் தமது சொற்பொழிவுகளின் இடையிடையே உலகியற் பழமொழிகளின் செம்பொருளை விளக்குவார்கள்; சாத்திரங்

களின் நுணுக்கங்களையும் மரபுகளையும் தெளிவிப்பார்கள்; இனிமை பொருந்திய இயற்கையான இருபொருட் குறிப்பு மொழிகளை இடம் பொருள் என்பவற்றிற் கேற்பப் பேசி மகிழ்விப்பார்கள்; தூய்மை மிக்கு உயரிய பெருந்தகைமை சான்ற நகைச்சுவையினை விளைவிப்பார்கள்; அரிய நுண்ணிய கருத்துக்களை எளிய இனிய முறையில் தெளிவித்தல் குறித்துச் சிறிய சிறிய கற்பனைக் கதைகளையும் கூறுவார்கள். வேதாகம உபநிடதங்களிலிருந்தும், சங்க இலக்கியங்கள், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், தனிப் பாடல்கள், தொல்காப்பியம் போன்ற இலக்கணங்கள் ஆகியவற்றில் இருந்தும், சீரிய மேற்கோள்கள் பலவற்றை எடுத்துக் காட்டுவார்கள். புராண கதைகளின் நுண் பொருள்களைப் புலங்கொளத் தெருட்டுவார்கள். "உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்பதற் கேற்பச், சுவாமிகளின் பேச்சில் ஈடும் எடுப்பும் அற்ற பேராற்றலும் பேரொளியும் பிறங்கித் திகழ்ந்தன. கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் மட்டுமேயன்றி, அடிகளார் உலகியல் அறிவிலும் தலைசிறந்து கைவந்து இலங்கினர்.

காலமும் இடனும் வாலிதின் நோக்கி, எவர் மனமும் புண்படாமல், எச் சமயத்தினையும் இகழாமல், எடுத்துக்கொண்ட பொருளுக்குப் புறம்போகாமல், அவை யறிந்து பேசும் உலகியல் உணர்வில் ஒப்புயர்வற்ற பெருந்தகைமை மிக்கவர் நமது அடிகளார். மலைபடுகடாம் என்னும் சங்ககால நூலின் கண்,

"நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து
வல்லார் ஆயினும் புறம்மறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதின இயக்கும்அவன் சுற்றத்து ஒழுக்கமும்"

எனப் போதரும் வரிகளிற் கூறப்படுதல் போல, அறிஞர்கள் சிலர் அவையத்தின் கண் தாங்கள் கற்றவற்றை மனங்கொள்ளக் கூறமாட்டாமல் தடுமாறிப் பிழைபடக் குழறுவராயினும், அதனை மறைத்து, அவர்கள் சார்பில் அப்பொருளைத் தாம் சொல்லிக் காட்டிப் பிழையின்றாக எல்லார் மனமும் கொள்ளும்படி தெளிவிப்பார்கள்.

தமது தலைமையின்கீழ்ப் பேசுபவர்களைப் பெருமைப்படுத்தித் தண்ணளி புரியும் நல்லியல்பு உடையவராதலின், ஞானியார் அடிகளின் தலைமையிற் பேசி அவர்தம் அருள் கனிந்த வாழ்த்துரையைப் பெறுவதற்கு அறிஞர்கள் அனைவரும் ஏக்கற்று நிற்பர். "இல்லறத்தான் அல்லேன் இயற்கைத் துறவி யல்லேன்" என்பன போன்ற பலப் பல பாடல்கள் சுவாமிகளின் சொற்பொழிவாற் பெற்ற புதுப்பொருள் விளக்கங்கள் எவர் உளத்தையும் இன்புறுத்துவனவாகும். "யாவதும் கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத் தாம் வரம்பு ஆகிய தலைமையர்" என விளங்கிய சுவாமிகளின் சொற்பொழிவுகளைக் கேட்டுக் கேட்டுச் சுவைத்தே சிறந்த புலமை கைவரப்பெற்றோர் மிகப் பலராவர் எனின், அடிகளின் சொற்பொழிவு மாண்பு எத்தகையதாய் இருந்திருத்தல் வேண்டும் என யாவரும் தெள்ளிதின் உணரலாம்.

## முடிவுரை :

தமிழ்க் கல்லூரிகள் தோன்றாத காலத்தில், நூற்றுக் கணக்கான தமிழ்ப் பேரறிஞர்கள் தோன்றி விளங்குவதற்குக் காரணமாக இருந்தவர் ஞானியார் அடிகளேயாவர். இவ்வருட் பெருந்தகையின் தூண்டுதலாலேயே திரு. பாண்டித்துரைத் தேவர் அவர்கள், மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவினர்., செந்தமிழ்ப் புரவலர்—தமிழவேள்-இராவ்சாகிப் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களும், அவர் தம் அருமைத் தம்பியாரும் நிறுவிய தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கும், கரந்தைப் புலவர் கல்லூரிக்கும் அடிகள் பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தார் என்பது மிகையன்று. சமய சமுதாயச் சீர்திருத்த நோக்குடன் தோன்றிய "குடியரசு" என்னும் இதழைத் தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கி யருளியவர், ஞானியாரடிகளே என்பதும் நாம் அறிந்து மகிழ்தற்குரியது.

"ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேன்உனை நானலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத தாய்உனை நானும் தொழுவனே"

என்றாற் போல, எத்தனையோ பல்லாயிரக் கணக்கான மக்கள் தம்மைக் கண்டும் கேட்டும் தொழுதும், நல்லுணர்வும் நல்லொழுக்கமும் பெற்று வாழ்க்கை நலம் பெற்றுத் திருந்தி யுய்ந்து உயர்தற்கு வழிகாட்டியாக-ஞானாசிரியராக-விளங்கிய அருட்டிரு ஞானியார் அடிகளின் சிறப்பிற்கு ஓர் எல்லையே யில்லை.

—ஆசிரியர்.



★

# நம் கலைஞர் நீடூழி வாழ்க!

★

50ஆவது பிறந்த நாள் விழா வாழ்த்து

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

செந்தமிழ்த்தாய் ஈன்றளித்த திருப்புதல்வர்! அறிவு
திருஆற்றல் நலங்களெலாம் ஒருங்கிணைந்த செல்வர்!
அந்தமில்சீர்ப் பேரறிஞர் அண்ணாவின் அன்பிற்கு
அமைந்தபெருஞ் சீர்த்தம்பி! அரியசெயல் வீரர்!
சந்ததமும் தமிழ்தமிழர் நலங்குறித்துச் சற்றும்
தளராமல் உழைத்துவரும் சால்புடைய தலைவர்!
நந்தம்அரும் பெருங்கலைஞர்! நல்லதமிழ் முதல்வர்!
நலங்களெலாம் சிறந்தோங்கி நீடூழி வாழ்க! (1)

நல்லபெருந் தமிழுணர்ச்சி நாடெங்கும் பரவ
நயந்துமிக நாவலஞ்சேர் நற்பேச்சால், எழுத்தால்,
வல்லதிறல் இயல்நடிப்பால், மதிநலஞ்சால் நூலால்,
மற்றும்பற் பலவகையால், மனமொழிமெய் மூன்றால்,
ஒல்லும்நெறி களில்எல்லாம் உழைத்துவரும் தோன்றல்!
உத்தமர்நற் பெருங்கலைஞர்! உயிர்போலப் பேணிப்
பல்வகையில் தமிழ்தமிழர் நலம்பாது காக்கும்
பண்புடையார்! நம்முதல்வர்! பல்லூழி வாழ்க! (2)

148709
N73·15

கற்றோன்றி மண்தோன்றாக் காலம்எனும அந்தக்
காலமுதல், நாகரிகம் கலைநலப்பண் பாடு
பெற்றோங்கிப், பிறஎல்லா நாடுகளும் இருளிற்
பெரிதுழன்று நின்றக்கால், பெருமைசிறந் தொளிர்ந்து.
முற்றோன்றும் முதுகுடியாம் தமிழ்மக்கள், எல்லா
முற்போக்குத் துறைகளிலும் முதன்மையுற்று விளங்கப்
பொற்போடும் துணிவோடும் புரிந்துசெய லாற்றும்
பொருவில்புகழ் **நம்கலைஞர்! நீடூழி வாழ்க!** (3)

சங்கம்வைத்துத் தமிழாய்ந்து தமிழ்வளர்த்த பண்டைத்
தமிழ்வேந்தர் எனும்சேர சோழபாண் டியர்போல்,
**எங்கும்தமிழ் எதிலும்தமிழ் எதற்கும்தமிழ்** என்னும்
இனியதமிழ் நலம்போற்றும் இயல்நெறிநற் செயல்கள்,
பொங்குபெரும் உணர்ச்சியினால் பொருந்தும்வகையெல்லாம்
புகழ்த்தமிழர் நலஞ்சிறக்கப் புரிந்துவரும் **வீரர்!**
நங்கள் அரும் பெருங்**கலைஞர்!** நல்லதமிழ் **முதல்வர்!**
நாள்நாளும் நலம்பெருகி நீடூழி வாழ்க! (4)

மண்ணிழந்து வருந்துபவர்க்கு மனையளித்தும், குடிசை
மாற்றுவாரியம் அமைத்தும், மற்றும்பற் பலவாம்
எண்ணிறைந்த திட்டங்கள் எத்தனையோ வகுத்தும்,
இரவலரை வாழ்வுயர்த்தும் ஏந்தல்எனத் திகழ்வோர்!
கண்ணிழந்தோர் இலட்சம்பேர் கண்ணொளிதான் எய்தக்
கண்ணாடி கண்சிகிச்சை கனிந்தளித்தோர்! நல்ல
புண்ணியராம் **தமிழவேள்,** தமிழ் **முதல்வர், டாக்டர்**
புகழ்சிறந்த நம்**கலைஞர்,** நீடூழி வாழ்க! (5)

உலகமெலாம் புகழ்ந்துமிக வியந்துவந்து போற்றும்
ஒப்புயர்வில் பெருங்கவிஞர், **திருவள்ளு வர்**தம்
அலகில்புகழ்த் **திருக்குறள்நூல்** அரும்பெறற்சீர், யாரும்
அறிந்துணரப் பேருந்திற் குறள்மொழிகள் பொறித்தார்!
இலகுதிரு மயிலையினில் திருவள்ளு வனார்க்கு
எழில்நினைவா லயம்அமைக்க இனியதிட்டம் வகுத்தார்!
சிலவேயோ! செந்தமிழர் சீர்த்திநலம் ஓங்கச்
சிறந்தபெரு நம்முதல்வர் செய்துவரும் செயலே! (6)

**சிலப்பதிகாரம்** என்னும் செஞ்சொற்காப் பியச்சீர்
தேர்ந்துணர்ந்து, முத்தமிழும் செறிந்தொருங்கே திகழும்
நலத்தகைஅக் காப்பியத்தின் நாயகி,**கண் ணகிதான்**
நன்றுதித்த **பூம்புகார் நகரம்**பண் டேபோல்,
**கலைச்**சிறப்பின் உயர்ந்தொளிரக் கலையுலகம் வியப்பக்
**கலைஞர்,**உயர் நம்முதல்வர், **கலைக்கூடம்** அமைத்தார் !
**உலப்பில்**தமிழ் தமிழர்நலம் உயர்ந்தோங்கும் வண்ணம்
உஞற்றிவரும் **நம்கலைஞர்** வாழ்க !பற்பல் ஊழி ! (7)

பொய்ம்மையிலாத் தமிழ்ச்சங்கப் புலவர்களே போலப்
புலமைநலம் பெரிதமைந்து புகழ்நிறைந்த சான்றோர் !
செம்மைநல ஆராய்ச்சித் திறஞ்செறியும் நூல்கள்,
சிறந்ததனித் தமிழ்நடையில் செய்தளித்த மேலோர் !
மும்மொழிதேர்ந் துணர்ந்தமறை **மலையடிகள்** எனும்நன்
மூதறிஞர் தம்பெயரால், புறநகர்ஒன் றமைக்க,
அம்ம!நம **முதலமைச்சர்** அருங்கலைஞர் அவர்கள்,
அரியதிட்டம் வகுத்துள்ளார் ! வாழ்கஅவர் நன்றே ! (8)

(வேறு)

மனிதனை மனிதன் ஈர்க்கும்
மாபெரும் கொடுமை போக்கி,

இனிதிவண் வறியோர் எய்தும்
இன்னல்கள் யாவும் நீக்கி,

நனியவர் நலமே வாழ,
நற்பெரும் பணிகள் ஆற்றும்

புனிதர்நம் கலைஞர், என்றும்
புகழ்மிக்குப் பொலிந்து வாழ்க !

— ஆசிரியர்



# தமிழ் வளர்த்த துறவிகள்

(அருட்டிரு மறைமலை அடிகள்)

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

தனித்தமிழ் இயக்கத் தந்தை !
சைவசித் தாந்தச் சான்றோர் !
முனைத்தநற் கொள்கை வீரர் !
முத்தமிழ்ப் புலமை வேந்தர் !
மனித்தருள் தெய்வம் போன்ற
மறைமலை அடிக ளார்தம்,
எனைப்பல சிறப்பும் போற்றி
இனிதவர் நெறிநின் றுய்வாம் !

—ந. ரா. மு.

## முன்னுரை :

இவ்விருபதாம் நூற்றாண்டில் தோன்றி வாழ்ந்திருந்து, தமிழுக்கும் சமயத்திற்கும் அரும்பெரும் தொண்டுகள் ஆற்றிய சான்றோர்கள் பற்பலருள், அருட்டிரு ஞானியாரடிகளும், அருட்டிரு மறைமலை அடிகளாருமே, தலைசிறந்து திகழ்பவர்கள் எனலாம். கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் திருநாவுக்கரசர் பெருமானும், திருஞானசம்பந்தப் பெருமானும் தோன்றி, ஒருவரையொருவர் அன்பிற் போற்றி, நண்பு பூண்டு அளவளாவி, ஒருமிக்க கருத்துடன் தொண்டாற்றித் தமிழையும் சமயத்தினையும் தமிழ் நூல்களையும் போற்றிப் பாதுகாத்து வளர்த்தனர். இவ்வரலாற்று உண்மையை,

"பாடிய செந்தமிழாற் பழங்
காசு பரிசில் பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம்
பந்தன் நிறைபுக ழான்
கேடிய பூந்திரு நாவுக்
கரசோடு எழில்மிழ லைக்
கூடிய கூட்டத்தினால் உளது
ஆய்த்து இக் குவலயமே"

என, நம்பியாண்டார் நம்பிகள் சிறந்தெடுத்துக் கூறிப்புகழ்ந்து போற்றியிருத்தல் காணலாம். அதுபோலவே, இவ்விருபதாம் நூற்றாண்டில் தமிழுக்கும் சமயத்திற்கும், திரு

திருப்பாதிரிப் புலியூரில், தவத்திரு. ஞானியார் அடிகள் அவர்களின் நூற்றாண்டுவிழா நிகழ்ச்சியை முன்னிட்டு, புலவர் திரு. கா. கோவிந்தன், M.A., M.L.A., அவர்கள் தலைமையில், "தமிழ் வளர்த்த துறவிகள்" என்னும் பொருள்பற்றி, நடைபெற்ற கருத்தரங்கில், ஆற்றிய சொற்பொழிவினைத் தழுவியது. (21-5-78).

—ஆசிரியர்.

நாவுக்கரசரைப்போல ஞானியாரடிகளும், திருஞானசம்பந்தரைப்போல மறைமலை அடிகளும், தம்முள் மிகவும் அன்பு பாராட்டி நண்பு பூண்டு, ஒருமித்த கருத்துடன் இருந்து, அரும்பெரும் தொண்டுகள் ஆற்றியுள்ளனர்.

## திங்களும் ஞாயிறும் :

வடநாட்டில் தோன்றிய பிரம்மசமாசம் ஆரியசமாசம் என்பவற்றைப்போல, நம் தமிழ்நாட்டில் 'சைவசித்தாந்த மகாசமாசம்' என்னும் ஓர் அமைப்பை நிறுவுவதற்கு எண்ணிய மறைமலையடிகள், அதனைத் திருப்பாதிரிப்புலியூரில் அருட்டிரு ஞானியாரடிகள் அவர்களின் திருமுன்னிலையிலேயே, முதன் முதல் (7-7-1905) தொடங்கினர். அவ்வாறே திருப்பாதிரிப்புலியூரில் 1929-ஆம் ஆண்டில், மாபெரும் சைவர் மாநாடு ஒன்றினை ஆறுநாட்கள் மிகச் சிறப்பாக நடத்த முற்பட்ட ஞானியாரடிகள், வரலாற்றுச் சிறப்பு மிக்க அம்மாபெரும் சைவர் மாநாட்டிற்காக, ஆறுநாட்களிலும், மறைமலை அடிகளாரையே தலைமைப் பொறுப்பு ஏற்கும்படி செய்தருளினர்.

ஞானியாரடிகள் தமது உயரிய இணையற்ற சொற்பொழிவுகளால தமிழும் சமயமும் வளர்த்தருளினர். மறைமலையடிகள் தமது ஒப்புயர்வற்ற ஆராய்ச்சி நூல்களால் தமிழையும் சமயத்தையும் வளர்த்தருளினர். உலகிற்குத் திங்களும் ஞாயிறும் மிக மிக இன்றியமையாதன. ஞாயிறும் திங்களும் இன்றி, உலகம் வாழ்தல் இயலாது. அந்நிலையில் தமிழ் உலகிற்கும் சைவ உலகிற்கும் ஞானியாரடிகள் ஆகிய திங்களும், மறைமலை அடிகள் ஆகிய ஞாயிறும், அறிவொளி வழங்கிப் புரிந்தருளிய நலங்களுக்கு அளவேயில்லை. பழமையிலுள்ள நலங்களைத் தக்காங்குத் தழுவிப் போற்றுதலிலும், புதுமையிலுள்ள நலங்களைத் திறனறிந்து ஏற்று வளர்ப்பதிலும், இவ்விரு பெரும் சான்றோர்களும், இணையற்ற செயல் வீரர்களாகத் திகழ்ந்தனர்.

'' தொன்மையவாம் எனும்எவையும்
நன்றாகா! இன்று
தோன்றியன எனும்எவையும்
தீது ஆகா ''

என்பது, இவர்களின் சிறந்த திருவுள்ளக் கிடக்கையாகும். இவ்விரு பெருமக்களுமே,

'' என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே ''

என்று திருமூலர் அருளிச் செய்தாற்போல, அவர்தம் அருளுரையினையே தம்முடைய வாழ்வியற் குறிக்கோளாகக் கொண்டு, தமிழ் வாழ்வதற்காகத் தாம் வாழ்ந்தனர், எனக் கூறுதல் பொருந்தும்.

## ஞானியா ரடிகள் :

'தமிழ் வளர்த்த துறவிகள்' என்னும் தலைப்பில், இளங்கோவடிகள், குமரகுருபரர், சிவப்பிரகாசர், சிவஞானமுனிவர் என்பவர்களைப்பற்றி இங்கு எனக்கு முன்பே அறிஞர்கள் பலர் பேசினர். அவர்களுக்கெல்லாம் வாய்க்காத ஒரு பெரும்பேறு எனக்கு வாய்த்துள்ளது. இளங்கோவடிகள் குமரகுருபரர் சிவப்பிரகாசர் சிவஞானமுனிவர் என்பவர்களைப்பற்றிப் பேசிய அறிஞர்கள், அப்பெருமக்களைப் பார்க்கவும், அவர்களுடன் அளவளாவிப் பழகவும் பேறு பெற்றிலர். ஆனால் நூற்றாண்டு விழாத் தலைவராகிய ஞானியார் அடிகளையும், தமிழ் வளர்த்த துறவிகளில் ஒருவராகத் திகழ்ந்த மறைமலை யடிகளையும் காணவும், பழகவும் எனக்கு இளமையிலேயே ஒரு சிறந்த நற்பேறு வாய்த்திருந்தது.

'' அவ்வுதய காலத்தில் உயிர்வாழ்ந்திருந்தால்
அஃது ஒருபெறலரும் பேறு ;
அப்போது இளமையாக இருந்திருக்கப்பெற்றால்
அதனினும் மிக்க துறக்கம் ஏது வேறு ?''

என்னும் கருத்தமைய, வொர்ட்ஸ் வொர்த் என்னும் ஆங்கிலக் கவிஞர் பாடியிருப்பது, ஈண்டு என் நினைவுக்கு வருகின்றது. அப்பெறலரும் பேற்றை எண்ணிப் பெருமிதமும் இறும்பூதும் எய்தி, அவர்களை நினைந்து யான் பணிந்து வணங்குகின்றேன்.

காஞ்சிபுரத்தில், ஆடிசன் பேட்டை (காந்தி சாலை)யில் உள்ள, வழக்கறுத்த ஈசுவரர் கோயிலில், திரு. சிவசாமி தேசிகர் முதலிய பெருமக்களால் நிறுவப்பெற்றிருந்த

---

(1) ''Bliss was it in that dawn to be alive;
But to be young was very heaven''
—William Wordsworth,
On French Revolution.

சிவத்திரு ஞானியார் சங்கத்திற்கு, அவ்வப் போது ஞானியாரடிகள் எழுந்தருளுவர். அப்போதெல்லாம் என் சின்னஞ்சிறு குழந் தைப் பருவமுதல் ஞானியார் அடிகளை, யான் என் தந்தையாருடன் சென்று தரிசித்து மகிழும்பேறு பெற்றுள்ளேன். அடிகளின் தவநலஞ்சான்ற சிவவேடப் பொலிவழகு என் உள்ளத்தை என் சின்னஞ்சிறு வயதி லேயே பெரிதும் கவர்ந்தது. "என் நெஞ் சம் திறப்போர் நிற் காண்குவரே" எனப் புறநானூறு பாடுதல்போல, என்னுடைய இளமை முதலே என் உள்ளத்தில் ஞானி யார் அடிகள் வீற்றிருந் தருள்கின்ருர். அவர் சொற்பொழிவாற்றிய நிகழ்ச்சிகள், கனவுக் காட்சிகள் போல, என் உள்ளத்தில் நிலை பெற்று எனது சைவத் தமிழ் வாழ்வை உரு வாக்கி வளப்படுத்தி வளர்த்துள்ளன.

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகத்தின் சார்பில், திருவேகம்ப நாதர் திருக்கோயி லில், ஞானியாரடிகள் நிகழ்த்திய சில சொற் பொழிவுகள், இன்னும் என் உள்ளத்தில் பசுமையாகப் பதிந்து, செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அடிகளார் மறைந்து (31-1-1942) பதினுறு ஆண்டுகள் கழிந்து, 1958-ஆம் ஆண்டில், சென்னைச் சைவசித் தாந்த மகா சமாசத்தின் மூலம் "ஞானியார் அடிகள் நினைவு மலர்" என்னும் பெயரால் ஒரு சொற்பொழிவுத் தொகுப்புநூலைப் பதிப் பித்து வெளியிடும் பெறலரும் பேறு, அப் போது 'சித்தாந்தம்' என்னும் திங்கள் இத ழின் மதிப்பியல் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்த எனக்குக் கிடைத்தது (1958). இப் போது பதினைந்து ஆண்டுகள் கழிந்து (1973), அடிகளாரின் நூற்ருண்டு விழாவிற் கலந்துகொண்டு வணங்கி மகிழும் வாய்ப்பும் குருவருளாலும் திருவருளாலும் எனக்கு இயல்பாக வாய்த்துளது.

## மறைமலை யடிகள் :

இங்ஙனம் ஞானியாரடிகளைக் கண்டு பழகக் கிடைத்த வாய்ப்பினும், மிகப் பெரிய அளவில், ஒரு சிறிது அறிவு வளர்ந்த நிலை யில், மறைமலை யடிகளுடன், பல ஆண்டுகள் (1945-1951) நெருங்கிப் பழகும் வாய்ப்பு, இறையருளால், எளியேற்கு வாய்த்தது. அடிகளார் வாழ்ந்திருந்த பல்லவபுரமும், யான் இருக்கும் சைதாப்பேட்டையும் மிக அணித்தாக இருத்தலும், இதற்குப் பெருந் துணையாயிற்று. நல்ல அரும்பெறல் நண் பர்கள் பலருடன் சேர்ந்து, அடிகளாரின் அருள்வாழ்த்துடன் 'திருவள்ளுவர் செந் தமிழ்ச் சிவநெறிக் கழகம்" என்னும் பெய ரால் கழகம் ஒன்றை நிறுவவும், அதன் வாயி லாக அடிகளாரின் சொற்பொழிவுகள் சில வற்றை அவருக்குரிய அன்புக் காணிக்கைத் தொகை செலுத்தி ஏற்பாடு செய்யவும், 'மறைமலை அடிகளார் மாட்சி' என்னும் ஒரு சின்னஞ்சிறு நூலைத் தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனர் அவர்களின் அணிந்துரையுடன், அடிகளார் மகிழும்படி எழுதி வெளியிடவும், பல நல்ல வாய்ப்புக்கள் நேர்ந்தன. அடிகளாரின் தொடர்பே எனது தமிழறிவையும் சைவநலப் பற்றையும் வளர்த்து, வளப்படுத்தி வாழ்வளித்தன எனல் மிகையன்று.

## ஆராய்ச்சி நூல்கள் :

தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்னும் முப்பெரும் மொழிகளிலும் தேர்ந்து தெளிந்த சிறந்த புலமை வாய்ந்தவர் அடிகளார். தமிழ் உலகில் புதியதோர் ஆராய்ச்சி யுணர் வைத் தோற்றுவித்து ஒருவகைப் புரட்சி மறுமலர்ச்சி யுணர்வை வளர்த்தருளியவர், மறைமலை யடிகளாரே ஆவர். பட்டினப் பாலை ஆராய்ச்சி, முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, சிவஞானபோத ஆராய்ச்சி, சாகுந்தல நாடக ஆராய்ச்சி முதலிய நூல்கள், இவ் வுண்மைக்குச் சான்று பகரும். அடிகளார் இயற்றிய 'மாணிக்கவாசகர் வரலாறும் கால மும்' என்னும் பெருநூல், அரியதோர் ஆராய்ச்சிக் கருவூலமாகும். சைவ சித் தாந்த ஞானபோதம், மக்கள் நூருண்டு உயிர்வாழ்க்கை, தொலைவில் உணர்தல், மரணத்தின் பின் மனிதர்நிலை குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி கோகிலாம்பாள் கடிதங்கள், திருவாசக விரிவுரை, சோமசுந் தரக் காஞ்சி ஆக்கம், அறிவுரைக் கொத்து, தமிழர் மதம், திருவொற்றி முருகர் மும் மணிக்கோவை முதலிய நூல்கள். அடிக ளார் இயற்றிய பயன்மிக்க அரும்பெரும் நூல்களாகும் ஆலிவர் கோல்டுஸ்மித் என் னும் அறிஞரைப்பற்றிச் சாமுவேல் ஜான்சன் என்பார் கூறியதுபோல, அடிகளார் தாம்

தொட்ட எந்தத் துறையினையும் பொன் வண்ணமாக்கினார். (2)

**சிறப்பியல்புகள் :**

இலக்கணம், இலக்கியம், தருக்கம், ஆராய்ச்சி, கவிதை, உரைநடை, வரலாறு, கல்வெட்டு, உரைவரைதல், மறுப்பெழுது தல், புதினம்புனைதல், நாடகம் இயற்றல் முதலிய பற்பல துறைகளிலும், அடிகளார் தமது அறிவிலச்சினைகளைப் பொறித்தருளி யுள்ளார். ''ஒரு சிறு சொற்றொடர் அமைப் பதற்குக் குறைந்தது இருபது நூல்களை ஆராய்ந்தார். இயற்கை எழிற் புனைவுரை யாக ஒருவரி எழுதுவதற்குக் குறைந்தது நூறு கல் தொலைவு பயணம் செய்தார்'' என்று தாமஸ் பேபிங்டன் மெக்காலே யைப்பற்றி, வில்லியம் மாக்பீஸ் தாக்கரே என்பவர் குறிப்பிடுவது (3) போன்ற சிறப் பியல்பைப் பெற்றிருந்தவர், ஆசிரியர் மறை மலையடிகளார். அவர் தம் நூல்களும் கருத் துக்களும் பழமை நலமும், புதுமை எழிலும் பொலிந்து, பயில்வாருக்குப் பெரு நலம் பயப்பனவாகும்.

**கவிதைத்திறன் :**

வடமொழியிற் காளிதாசர் இயற்றிய சாகுந்தலம் என்னும் எழில்மிக்க நாடக நூலை, அடிகளார் சிறந்த முறையில் தமி ழாக்கம் செய்துள்ளார். காளிதாசரின் சாகுந்தல நாடகத்தில், துஷ்யந்தன் சகுந் தலையினைக் கண்டு, அவளது அழகினை வியந்து புகழ்ந்து விதூடகன்பால் உரைப்ப தாக வரும் சுலோகத்தினை,

'மோவா மலரோ? நகம் களை
யாத முழுமுறியோ?
ஆவா கருவி துருவாது
பெற்ற அருமணியோ?
நாவாற் சுவையாப் புது நறவோ?
செய்த நற்றவங்கள்
தாவாது ஒருங்கு திரண்டுவந்
தால் அன்ன தையலரே!''

என்றும்; சகுந்தலை துஷ்யந்தன்மேற் காதல் கொண்ட தன்னுடைய மன நிலையினைப் பிரியம்வதை அனசூயை என்னும் தனது இரு தோழியர்க்கும், ஒரு தாமரையிலையின் மேல் நகத்தினால் எழுதிக் காட்டியதாக வரும் சுலோகத்தினை,

''இரக்கமிலா அரசே! நான்
என்செய்வேன்? இரவு பகல்
எரிக்கின்றான் என் உடம்பை
எழிற் காமன்! நின்மேலே
பெருக்கின்றது என் காதல்!
பேதையேன் நின் நெஞ்சம்
இருக்குமாறு உணர்ந்திலேன்!
எனக்கதனை இயம்புதியோ?''

என்றும்; மூலத்திற் போன்றே சுவை சிறி தும் குறையாத நிலையில், அழகொழுக மொழி பெயர்த்துள்ள அரும்பெரும் திறன் ஒன்றே, அடிகளாரின் அரிய வடமொழிப் புலமை நலனை இனைத்தென யாவர்க்கும் உணர்த்தப் போதிய தாகும்.

மறைமலை அடிகளார் அழகிய உரை நடை எழுதுதலில் மட்டுமேயன்றி, சிறந்த கவிதைகள் இயற்றும் திறனிலும் வல்லவர் என்பதனை, அவர் தமது இளமைக் காலத் தில் யாத்த ''திருவொற்றி முருகர் மும் மணிக்கோவை'' என்னும் அரிய கவிதை நூலில்,

''உறுபொருள் காணு உணர்விலார் மாட்டுப்
பெறுபொருள் வேண்டல் பிழையால்;—
நறுநெஞ்சே!
ஏந்துமுலை வள்ளி கொழுநன் திருவொற்றிப்
போந்து குடியிருக்கும் போது'' (1)

''நமராய் இருந்து, பின் ஏதிலர்
ஆவர்; நயமிலரும்
தமர்ஆவர்; என்னில் தமர்பிறர்
என்று தகவு சொல்லி
அமர்ஆடி நிற்றல் வறிது
கண்டாய்; அலையாழி ஒற்றிக்
குமரா என்று ஓதிக் குடந்தம்கொண்டு
ஏத்தக் குறிக்கொள் நெஞ்சே'' (2)

என்பன போல வரும் அரிய இனிய செந் தமிழ்க் கவிதைகளால், யாவரும் செவ்விதிற் றெளியலாம்.

இவ்வாறே ஆக்சுஃபோர்டு பல்கலைக் கழகத்தின் தத்துவத் துறைப் பேராசிரியர்

---

(2) ''He touched nothing which he did not adorn''
—Johnson.

(3) ''To write a line of description he travelled hundred miles; to write a single sentence he consulted at least twenty books''
—W. M. Thackerayt.

ஆக விளங்கியிருந்த பேரறிஞர் திரு. எப். சி. எஸ். ஷில்லர் அவர்கள்தாமே வியந்து மகிழும் வகையில், அடிகளார் எழுதிய "சைவசித்தாந்தம் ஒரு நடைமுறை அறிவுக் கோட்பாட்டுக் கொள்கை" என்னும் ஆங்கில நூலும் பிறவும், அடிகளாரின் ஆங்கில மொழிப்புலமை மாட்சிமையினைப் பாங்குற விளக்கும். அவர்தம் அரும்பெரும் தமிழ்ப் புலமைத்திறனே, யாவரும் இனிது அறிந்த தொன்று.

**தண்ணளி :**

இத்தகைய பெருநலஞ் சான்ற அடிகளார் தமிழ் இளைஞர்கள் பால் மிக்க பரிவும் அன்பும் உடையவர். தமக்கு ஓய்விருக்கும் காலங்களில் எல்லாம், தம்பக்கல் அவ்வப்போது போந்து பணிந்து பழகும் தமிழிளைஞர்களோடு கலந்து உரையாடி, அவர்கள் வினவும் ஐயங்களுக்கு ஏற்றபெற்றி தெளிவுரைகள் நல்கி, அவர் மகிழ்விப்பது உண்டு. அக்காலங்களில் தமிழ் இளைஞர்களுக்கு மிகவும் எளியராய், இனியராய் விளங்கித் தண்ணளி புரியும் அவரது இயல்பு,

> ''ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
> நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
> இனியை பெரும எமக்கே; மற்றதன்
> துன்னரும் கடாஅம் போல
> இன்னாய் பெரும! நின் ஒன்னா தோர்க்கே!''

எனப் புறநானூற்றில், ஔவையார் அதியமானின் அருமைப்பாட்டினையும், எளிமைத் தண்ணளியினையும் வியந்து போற்றிப் புகழ்ந்திருக்கும் முறையில் அமைந்திருக்கும்.

மறைமலை அடிகள் "இமிழ்கடல் ஞாலம் முழுவதும் விளக்கும் தமிழ்முழு தறிந்த தனிப்பெரு ஞாயிறு" அனையவர். தமிழுலகிலும் சமய உலகிலும், அவரையும் அவர் நூல்களையும் அறியாதார் எவருமிலர். ஆதலின் அவைகளைப்பற்றி யெல்லாம் இங்குப் பேசாமல், அப்பெருஞ் சான்றோருடன் யான் பழகிய நாட்களில் நிகழ்ந்த ஒரு சில நிகழ்ச்சிகள் அல்லது பயன்மிக்க உரையாடல்கள் சிலவற்றைப்பற்றி மட்டுமே, இங்குள்ள நேரத்திற்கு ஏற்பச் சுருக்கமாகக் குறிப்பிடுதல் பொருத்தமாகும் என நினைக்கின்றேன்.

''தொழுது வாங்கி''

(1) அடிகளார் வாழ்ந்திருந்த பல்லவபுரம் மாளிகைக்கு அவ்வப்போது சென்று, அவரைப் பணிந்து வணங்கி யான் அளவளாவுவது உண்டு. அப்போதெல்லாம் அடிகளார் தமிழின் பெருமையையும், சைவத்தின் சிறப்பினையும், சைவசித்தாந்த நுட்பங்களையும், ஏற்றபெற்றி இடை இடையே அறிவுறுப்பார். அங்ஙனம் அறிவுறுக்குங்கால் உயர்ந்த மேலைநாட்டு ஆராய்ச்சி நூல்களின் கருத்துக்களை எடுத்துச் சொல்லி, அந்நூல்களில் சில பகுதிகளையும் படித்துக் காட்டுவதுண்டு. அவ்வாறு ஒருமுறை படித்துக் காட்டுவதற்காக மேல் மாடியில் நிலைப்பேழையில் இருந்த ஒரு புத்தகத்தை எடுத்து வருமாறு பணித்தார். அதன்படி ஓடோடிச் சென்று நிலைப்பேழையைத் திறந்து உயரத்திலிருந்த அப்பெரிய புத்தகத்தை, அந்நூலின் கட்டுக் குலையுமாறு, யான் அதன் முதுகினைப் பிடித்து ஈர்த்து எடுக்க முயன்றேன். புத்தகத்தைப் போற்றுதலில் மிகவும் கருத்துடைய அடிகளார், என் பின்னே வந்திருக்கின்றார். அதனை யான் அறிந்திலேன். யான் புத்தகத்தை எடுக்கும் முறையினைப் பார்த்து, அடிகளார் பதறிப்போனார். என் அருகே வந்து தடுத்து 'இவ்வாறு எடுத்தல் கூடாது; இங்ஙனம் எடுத்தல் வேண்டும்' எனக் கூறி மென்மையாக அப்புத்தகத்தை எடுத்தார். அப்போது புத்தகத்தை எடுக்கும் முறை, படிக்கும் முறை, கிழியாமலும் அழுக்குப்படாமலும் கிறுக்காமலும் பாதுகாக்கும் முறை, ஆகிய பல செய்திகளைப்பற்றி யெல்லாம் நயமாக விவரித்து உரைத்தார். நாலடியாரில் வரும் "புத்தகமே சாலத்தொகுத்துப் பொருள் தெரியார் உய்த்தகமெல்லாம் நிறைப்பினும், புத்தகத்தைப் போற்றும் புலவரும் வேறே; பொருள் தெரிந்து தேற்றும் புலவரும் வேறு" என்னும் பாடலின் பொருள் விளக்கங்களை யெல்லாம் கூறினார் அப்போது சிலப்பதிகாரத்திற் கானல் வரியின் தொடக்க வரிகளைக் கூறுமாறு பணித்தார்.

> ''சித்திரப் படத்துட் புக்குச்
> செழுங் கோட்டின் மலர்புனைந்து
> மைத்தடங்கண் மணமகளிர்
> கோலம்போல் வனப்பெய்திப்

பத்தரும் கோடும் ஆணியும்
நரம்பும் என்று
இத்திறத்துக் குற்றம் நீங்கிய
யாழ்கையில் தொழுது வாங்கி..''

என்று யான் சொல்லி வந்தபோது, நிறுத்து மாறு பணித்து, ''யாழ்கையில் தொழுது வாங்கி...''என்று வருகின்றதே, வாங்கியவர் யார்? கொடுத்தவர் யார்? என வினவினர். வாங்கியவள் மாதவி கொடுத்தவள் வயந்தமாலை என்றேன். வயந்தமாலை ஏவற் பணிப்பெண்ணாகிய சேடியேயன்றோ? அவளை மாதவி எற்றுக்குத் தொழுதல் வேண்டும்? என வினவினர். வினாவை எதிர்பாராத யான், சிறிது தயங்கினேன். உடனே அடிகளார், மாதவி தொழுதது வயந்த மாலையையன்று. யாழ்க் கருவியையே மாதவி தொழுதாள். இசைத் தெய்வம் அதன்கண் தங்கி உறைவதாகக் கலை உணர்வுமிக்க மாதவி கருதினள். ஆதலின் அக்கலையுணர்வு நலத்தால், அவள் யாழைத் தொழுதாள். அவள் தொழுதனளோ இல்லையோ, இசைக்கலையுணர்வில் பெரிதும் மேம்பட்டிருந்த இளங்கோவடிகளார், தமக்கு இயல்பாக வாய்த்திருந்த இசைக்கலையுணர்வின் நலத்தால், அங்ஙனம் அருமையாக அருளிச் செய்தார். இவ்வாறே இதற்கு முற்போந்த கடலாடு காதையிலும்,

''வருந்துபு நின்ற வயந்த மாலைகைத்
திருந்து நல்யாழ் செவ்வனம் வாங்கி.''

எனவரும் இறுதி வரிகளிலும், ''செவ்வனம் வாங்கி'' என்று அருளிச் செய்திருக்கின்றார். இதனால் கலைப் பொருள்களைக் கலையுணர்வு மிக்கவர்கள் எவ்வாறு போற்றிக் கையாளுதல் வேண்டும் என்பதனை, உணரலாம் என்று விவரித்து உரைத்தார். இந்நிகழ்ச்சியால் 'சொற்றொறும் இற்று இதன் பெற்றி' என்று,நுனித்தாய்ந்து நோக்கிக்கற்றுணர்ந்திருந்த அடிகளின் நுண்மாண் நுழைபுலமும், கலைப்பண்பு நலமும் பிறவும் எளியேற்கு இனிது விளங்கின; மறைமலையடிகளாரின் நிறைபெரும் புலமைத் திறனுக்கு இஃதொரு சான்றாகும் எனலாம்.

''கற்றபின் நிற்க''

(2) மறைமலையடிகளார் இயற்றியுள்ள ஆராய்ச்சி நூல்கள் பலவற்றுள், ''தென்புலத்தார் யார்?'' என்பது ஒன்று. அது வடிவாற் சிறியதாயினும் பொருளாற் பெரியது. மிகவும் சிறந்தது. அதன்கண் ''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை'' என்னும் திருக்குறளில் வரும் ''தென்புலத்தார்'' என்னும் சொல்லுக்குப் பரிமேலழகர், பிதிரர் எனப்பொருள் உரைத்து, ''பிதிரராவார் படைப்புக் காலத்து அயனால் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி...'' என விளக்க உரை வரைந்திருப்பதை அடிகளார் மறுத்து எழுதியுள்ளார். ஆதலின் அதனை நினைந்து, ஒரு முறை, அடிகளாரிடம் தங்களுக்குப் பரிமேலழகரைப் பிடிக்காதா? அவர் மீது உங்களுக்கு வெறுப்பா? என்று, என் சிறுபிள்ளைத் தன்மையால் விளையாட்டாக வினவினேன். அப்போது அடிகளார் புன்னகை பூத்த முகத்தினராய், 'அற்றன்று. ஏதோ ஒரு கருத்திற்காக ஓரிடத்தில் ஒருவரை மறுத்தால், அவர்மீது வெறுப்பு என்று எங்ஙனம் கொள்ளலாம்? பரிமேலழகர்பால் எமக்கு மிக்க மதிப்பும் ஈடுபாடும் உண்டு. தமிழ்நூல் உரையாசிரியர்களில் அவர் தலை சிறந்தவர். யாம் அவருடைய உரையினை எம் இளமைக் காலத்தில் மிகவும் ஊன்றிக் கற்று மனப்பாடம் செய்து பயின்றுள்ளேம். எம்முடைய தனித்தமிழ் உரைநடை வளத்திற்குப் பரிமேலழகரின் உரைநடை பெரிதும் வழிவகுத்துக் காட்டித் துணை புரிந்துள்ளது. நுட்பமும் திட்பமும் அமைய உரை எழுதுவதில் பரிமேலழகர் இணையற்றவராவர். சிவப்பிரகாசர் சிவஞான முனிவர் போன்ற மாபெருஞ் சான்றோர்கள் எல்லோரும் கூடப் பரிமேலழகரின் உரையினை நுணுகி ஆழ்ந்து கற்று மதித்துப்போற்றியுள்ளனர்'' என்றெல்லாம் விவரித்து உரைத்தார்.

அப்போது 'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக' என்னும் குறளைக் கூறுமாறு பணித்து, அதன்கண் வரும் 'கற்றபின்' என்னும் தொடரைச் சுட்டிப் பொருள் யாது? என வினவினர். அந்தோ! யான் என் அறியாமையால், கற்ற-படித்த, பின்-பிறகு என்று பொருள் கூறினேன். 'எளிய பொருள்தானே இது? இதுகூடவா எனக்குத் தெரியாது?' என்பது போல, யான் பெருமிதமாக அத்தொடருக்குப் பொருள் கூறினேன். பலரும் அவ்வாறே உரை எழுதியிருக்கின்றனர். அதனாலேயே அவ்

வாறு நான் துணிவாகத் தயங்காது கூறினேன். ஆனால் அடிகளாரோ, அங்கேயிருந்த பரிமேலழகர் உரைநூலை எடுத்துவரச் சொல்லி, அதில் அவ்வுரைப் பகுதியைப் படிக்குமாறு பணித்தார்.

அதன்கண் கற்றபிறகு என்று இல்லாமல், கற்றால் என்று உரை வரையப் பெற்றிருந்தது. 'கற்ற + பிறகு' என்பது இருசொற்களாலாகிய பெயரெச்சம் என்றும், 'கற்றபின்' என்பது ஒருசொல் நீர்மைத்தாய வினையெச்சம் என்றும் அடிகளார் விளக்கினார். 'கற்ற பிறகு' எனக் கொண்டால் உரையில் இரு வகையான குற்றங்கள் நேரும். அவற்றை விலக்குவதற்கே, பரிமேலழகர் கற்றால் என வினையெச்சமாக வைத்து உரை செய்தார். 'உண்ட பிறகு வருவேன்' என்றால் உண்ணுதலாகிய தொழில் முடிந்து, வருதல் ஆகிய தொழில் நிகழும். அதுபோலக் கற்றபிறகு நிற்க என்றால், கற்றலாகிய தொழிலுக்கு ஒரு முடிவுளது போன்ற குறிப்பு அமையும். 'என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு?' என்று அருளிச் செய்திருப்பதனால், திருவள்ளுவரின் கருத்துப்படி, கல்விக்கு ஒரு முடிவு இல்லை. ஆதலின் அவர் தம் திருவுள்ளக் கருத்திற்கு மாறாகக் கல்விக்கு ஒரு முடிவுண்டு போலும் என்னும் குறிப்பு அமையக் 'கற்றபிறகு' என உரை எழுதப் பரிமேலழகர் விரும்பிற்றிலர்.

மேலும் 'கற்றபிறகு நிற்க' என்றால், கற்கும்போது நிற்றல் வேண்டா; கற்று முடித்த பின்னரே நிற்றல் சாலும் எனவும் கருத்துக் கொள்ள இடம் அமையும். இவ்விரு காரணங்களுக்காகவே, கற்றால் என வினையெச்சமாக வைத்துப் பரிமேலழகர் உரை வகுத்தார். இந்த ஓரிடத்தில் மட்டுமேயன்றி, இவ்வாறு வரும் பிற இடங்களிலும் கூட, முன்னொடு பின் முரணாமல், பரிமேலழகர் பொருள் எழுதிச் சென்றுள்ளார். இத்தகைய திட்ப நுட்பம் மிக்க சிறந்த அரிய உரையாசிரியர் பரிமேலழகர் என்று அடிகளார் அறிவுறுத்தருளினர்.

**கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் :**

(3) பிறிதொரு சமயம் வேறு ஏதோ பொருள்பற்றி உரையாடிக் கொண்டிருந்த போது, "நூலாசிரியன் வழங்கும் சொற்களுக்கு உரிய பொருள் தெரியாமலே உரை வரைபவர் சிலர்; சொல்லுக்கு மட்டும் பொருள் வரைந்து செல்வோர் சிலர். சொல்லையும் அதற்குரிய பொருளையும் கடந்து சென்று, அவற்றிற்கு அப்பாற்பட்டு நிற்கும் ஆசிரியரின் உள்ளக் கருத்தை ஊடுருவி உணர்ந்து உரைவகுப்போர் சிலர். பரிமேலழகர் வெறும் சொல்லுக்கு மட்டுமே பொருள் எழுதிச் செல்பவர் அல்லர்; சொல்லின் வழியாக ஆசிரியனின் உள்ளக் கருத்தினை உன்னி ஓர்ந்துணர்ந்து உரை செய்பவர்" என அடிகளார் குறிப்பிட்டார்.

அதற்கு மேற்கோளாகக் "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர், மற்றீண்டு வாரா நெறி" எனவரும் திருக்குறளில், கற்று என்பதற்கு 'நூல்களைப் படித்து' என்ற பொருள் எழுதாமல், பரிமேலழகர் "உபதேச மொழிகளை அனுபவம் உடைய தேசிகர்பாற் கேட்டு" என எழுதியிருப்பதன் நுட்பத்தினை விளக்கினார். 'கற்று' என்னும் சொல், 'கேட்டு' என நேரே பொருள்படாதாயினும், பரிமேலழகர் அங்ஙனம் எழுதியதற்கு ஆழ்ந்ததொரு காரணம் உண்டு எனத் தெரிகிறது. 'எத்துணையவாயினும் கல்வி இடமறிந்து உய்த்துணர்வு இல்லெனின் இல்லாகும்'' என்றபடி, மூலத்தின் சொல் 'கற்று' என்றிருப்பினும், அதற்குப் பொருள் கேட்டு, என்பதே என்று பரிமேலழகர் உய்த்துணர்ந்து எழுதினார். அங்ஙனம் அவர் உய்த்துணர்தற்குத் துணைபுரிந்தது "மெய்யுணர்வு' என்னும் அதிகாரத் தலைப்பேயாகும் (4)

மெய்யுணர்வானது, வெறும் நூற்கல்வியினால் வருவதன்று. "கடல்நீரைப் பருகப் பருக நீர்வேட்கை மிகுமேயன்றித் தணியாது; அதுபோல வறிதே நூல்களைக் கற்கக் கற்க ஐயங்கள் பெருகுமேயன்றிக் குறையமாட்டா. நூல்கள் பலவற்றைக் கற்றும் தெளிய முடி

(4) "I have Studied now philosophy
and jurisprudence and medicine
and even alas theology,
With vision keen, from end to end
and yet poor fool, with all my lore
I am no wiser than before".

—Dr. Faust, Goethe.

யாத ஐயப்பாடுகளை, நல்லாசிரியன் ஒருவன் கூறும் எளிய சிறிய சொல் ஒன்றே, இனிது போக்கிவிடக்கூடும்'' என்று திருக்களிற்றுப் படியார் என்னும் சிறந்ததொரு, ஞானநூல் கூறுகின்றது. ஓதியோர்க்கு அகப்படாப் பொருளை ஓர்விப்பன, அருளாசிரியரின் உபதேச மொழிகளேயாகும். ''என்னை ஓர் வார்த்தையுட்படுத்திப் பற்றினாய்; காணாதன எல்லாம் கண்டேன்; கேளாதன எல்லாம் கேட்டேன்'' எனவரும் மணிவாசகர் போன்ற அருளாளர்களின் உரையால் இவ்வுண்மை வலியுறும்.

இதனாலேயே மெய்யுணர்வு என்னும் தலைப்பிற்கு ஏற்ப, ஆசிரியர் பரிமேலழகர், 'கற்று' என்னும் சொல்லுக்கு 'நூல்களைப் படித்து' என்று எழுதாமல், ''உபதேச மொழிகளைக் கேட்டு'' என்று உரை வரைந்தார். கேட்பன எல்லாம் மெய்யுணர்வு விளைவிக்காது ஆதலின், ''அனுபவம் உடைய தேசிகர்பால் கேட்டு'' என்று, கேட்பதற்கும் கேட்பிப்பதற்கும் உரிய தகுதியுடையவர்களையும் இத்தகையர் எனச் சுட்டி உணர்த்தினார். இதன் கண்ணும் 'அறிவுடையவர்கள்பால்' என்னாது, 'அனுபவம் உடையவர்பால்' என்றது உற்று நோக்கி உணரற்பாலது! மேலும் 'அனுபவம் உடைய அறிஞர்பால்' என்னாது 'தேசிகர்பால்' என்றது ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. அறிவு அனுபவமாகக் கைவரப்பெற்ற ஆன்றோர்கள்பால் பிறர்மாட்டுக் காணப்பெறாத தேசு(தேஜஸ்) என்னும் அருள்ஒளிநலம் மிக்குத் தோன்றுமாதலின், அவர்களையே அணுகிக் கேட்க என்று வலியுறுத்துதற்குத் 'தேசிகர்பால் கேட்டு' என்று எழுதியிருக்கும் மாட்சி பெரிதும் போற்றுதற்குரியது. மற்றும் இக்குறளில் 'ஈண்டு' என்னும் சொல் இருமுறை வந்துள்ளது. அவற்றுள் முதலதற்கு 'இம் மக்கட் பிறப்பின் கண்ணே' என்றும்; பின்னையதற்கு 'இப்பிறப்பின்கண்' என்றும் எழுதியுள்ள உரை நுட்பமும் உன்னித்து உணர்தற்குரியன, என்றெல்லாம் அடிகள் இனிதெடுத்து விளக்கியருளினர். 'அனுபவம் உடைய தேசிகர்' (குரு) என்பதுபற்றி அடிகள்கூறியகருத்துக்களை ஒருவகையில் விளக்குவதுபோலப் பின்வரும் ஆங்கில மேற்கோட் பகுதி அமைந்திருக்கின்றது எனலாம். (5)

(4) மறைமலை அடிகளார், ஆசிரியர் மெய்கண்டதேவர் வடமொழிச் சிவஞான போதத்தையே தமிழில் மொழிபெயர்த்து அருளிச்செய்தார் என்னும் கருத்துப்பட, மாதவச் சிவஞான சுவாமிகள் எழுதியிருப்பதனை உடன்படாமல் மறுத்து, சிவஞான போதம் மொழி பெயர்ப்பன்று, தமிழ் முதல் நூலே என்பதனைச் சொற்போர்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் சிறிதும் அஞ்சாது நிலை நாட்டியவராயினும், சிவஞான சுவாமிகளிடத்தில் மிக்க பேரன்பும் பெரும் பக்திமையும் உடையவர். சிவஞான சுவாமிகளின் நுண்மாண் நுழைபுலனையும், உரைத்திட்ப நுட்பங்களையும் பெரிதும் வியந்து போற்றும் இயல்புடையவர். ஒருமுறை,

> '' மேலைக்கு வித்தும் ஆகி
> விளைந்தவை உணவும் ஆகி
> ஞாலத்து வருமா போல
> நாமசெயும் வினைகள் எல்லாம் ''

எனவரும் சித்தியார் செய்யுளில், ''நாம் செய்யும் வினைகள்'' என்னும் தொடருக்கு ஏனைய உரையாசிரியர்கள் எல்லாம், 'நாம்' என்பதனை உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகக் கொண்டு பொருள் உரைத்துச் செல்ல, அதனை ஆகுபெயராகக் கொண்டு, 'நாம் என்னும் முனைப்பாற் செய்

---

(5) "A group of students in a Theological College asked a very learned Professor to read the Shepherd's Psalm (ps 23). He read it with feeling and beautiful emphasis. Then some one called for a retired Minister to come up and repeat the the 23rd Psalm. His sweat face shone with an inner light as he said the same words with reverence and meaning. When he had finished, there was not a dry eye in the room. Afterwards one of the students asked the Professor why he, with his great learning, could not produce the profound effect. The Professor was honest and humble in his reply: "Well" he said to the young men, "I have studied the Bible and I know all about the shepherd but you see, our friend **knows the shepherd**."

—**Geoffrey Hudson**,
Christianity and the Modern world,
The Hidden Wisdom in the Holy Bible, p. 21

யப்படுவதாகிய முயற்சிகளெல்லாம்' என்னும் கருத்துப்படச் சிவஞான சுவாமிகள் எழுதி யிருக்கும் திறத்தினை, அடிகளார் பெரிதும் வியந்து போற்றினர். 'நாம்' என்பதனை உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகக் கொண்டால், ஆசிரியர் அருள்நந்தி சிவமும் நம்மோடொத்த மனித நிலையினரே ஆவர் போலும் எனக் கருத இடம் நிகழும். சிவமாம் தன்மைப் பெருவாழ்வு பெற்ற அப்பெருந்தகையார் நம்மனோரைப் போன்றவரல்லர்; செம்மையேயாய சிவபதம் பெற்றவர் என்று தெளிவுறுத்துதற் பொருட்டே, அதனை ஆகுபெயராக வைத்துச் சிவஞான சுவாமிகள் பொருள் அருளிச் செய்தனர். மேலும், "ஒருவர் செய்கின்ற செயல்களெல்லாம் இதம் அகிதம் எனப்படும் ஆகாமிய வினையைப் பயப்பது, அவர் தன்முனைப்பாகிய பசுபோத வயப்பட்டுச் செயற்படும் வழியே; தன்முனைப்பாகிய பசுபோதம் இழந்து சிவபோதத்தின் வழி நின்று செய்யப்படுங்கால் பிறவிக் கேதுவாகிய ஆகாமிய வினையாக ஆகமாட்டா" என்னும் சைவசித்தாந்த தத்துவ உண்மையையும் 'நாம் என்னும் முனைப்பு' எனப் பொருள் கொண்டதனால், சிவஞான சுவாமிகள் செவ்விதின் தெளிவுறுத்தி அருளினார் என்றும் அடிகள் விவரித்து உரைத்தார்.

### சீகாழித்துரை :

(5) ஒருமுறை இராமலிங்க அடிகளின் திருவருட்பாவில், "முத்தியற் சிவிகை இவர்ந்து அருள் நெறியின் முதலரசு இயற்றிய துரையே" எனவும்; தாயுமான அடிகள், "சீகாழித்துரையே" எனவும் துரை என்னும் சொல்லைத் தம்முடைய பாடல்களில் வழங்கி யுள்ளமைபற்றி, நண்பர் ஒருவர் அது தமிழ்ச் சொல்லா? என அடிகளை வினவினர். அப்போது அடிகளார் "அதனைத் தமிழ்ச் சொல்லாகவும் கொள்ளலாம். ஒரு சொல்லின் மூலம் அல்லது வேர் தமிழெனக் கொள்ள இயலுமாயின் அது பிறமொழிச் சொற்போல ஐயுறக் கிடப்பினும், அதனைத் தமிழ்ச்சொல் என்றே கொள்ளுதல் கூடும். துரை என்னும் சொல் 'துர' (துரத்து) என்னும் மூலம் அல்லது வேரினின்று, செலுத்து ஏவு என்னும் பொருள் உடையதாய், ஏனையோரைச் செலுத்துபவன், ஏவுபவன் என்னும் குறிப்பில் ஒரு தலைவனைக் குறிப்பதாயிற்று. இவ்வாற்றால் அதனைத் தமிழ்ச்சொல் என்றே கோடல் பொருந்தும். திருவாசகத்தில் மணிவாசகராலும், "இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்தோடத் துரைமாண்டவா பாடித் தோள் நோக்கம் ஆடாமோ" என இச்சொல் வழங்கப் பெற்றுள்ளது. "அரசனும் செய்வது ஈசன் அருள்வழி" எனவரும் சித்தியார் செய்யுளிலும் "அரும்பாவங்கள் தரையுளோர் செய்யின் தீயதண்டலின் வைத்துத் தண்டத் துரை செய்து தீர்ப்பன்; பின்பு சொல்வழி நடப்பர் தூயோர்" என்புழி, இந்தத் துரை என்னும் சொல் பயின்றுள்ளது. இப்பகுதிக்கு உரை வரைந்துள்ள சிவஞானசுவாமிகள், துரை-மிகுதிப்பாடு என்று எழுதி, மேலைத் திருவாசகச் செய்யுட் டொடரை மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார், எனக் குறிப்பிட்டருளினார்கள். இவற்றினாலெல்லாம் அடிகளின் சிறந்த பெரும் புலமையும், ஒப்புயர்வற்ற நினைவாற்றலும், அளப்பரிய ஆராய்ச்சித் திறனும் விளங்குதல் காணலாம்.

### சங்க இலக்கிய மாண்பு :

(6) அடிகளார் பக்கல் சென்று அவர் தம்மைக் கண்டு வணங்கும் பேறு பெற்ற அவ்வொரு சில பயன்மிக்க நாள்களுள், ஒரு நாள் "தமிழ்ப் புலவர்கள்பால் இயல்பாகக் காணப்படும் இரு பொருண் மொழிகளும், நகைச்சுவை யுரைகளும், பிறவும் தங்கள்பால் காணப்படாமைக்குக் காரணம் என்னை?" என மெல்ல வினவ நேர்ந்தது. அதன் வாயிலாகப் பேச்செழுந்தபோது, "புலமை என்பது அறிவின் முதிர்ச்சி. அறிவோ சொல்லும் பொருளும் என்னும் இரண்டனால் வளர்வது. வெறும் சொல்லறிவைக் காட்டிலும் பொருளறிவே மிகவும் விழுமியது. பொருளறிவு பெறுதல் மிகவும் அருமையாதலின், அது நன்கினிது வாய்க்கப் பெறாதார் வெறும் சொற்களை மட்டுமே அடுக்கிக் 'கடபடம்' என்றுருட்டிச் சல சலப்பர். சொல்லறிவு சில பல நூல்களை நெட்டுருச் செய்வதால் உண்டாகி விடும். ஆனால் 'கேட்பவன் கேடில் பெரும்புலவன் பாட்டவன் சிந்தித்தல் தன்னினும்' என்றபடி, பொருளறிவாகிய சிறந்த நல்லிசைப் புலமையானது சிந்தனையையே அடிப்படையாகக் கொண்டது. ஒரு சிவர் ஆழியப் பெரும்

பான்மையான இடைக்காலப் புலவர்கள், சங்ககாலப் புலவர்களைப் போல ஒவ்வொன் றினையும் கூர்ந்து நோக்கி ஆழ்ந்தாராய்ந் தறியும் இயல்பினரல்லர். பல்வேறு காரணங் களால் அவர்தம் புலமை வெறுஞ் சொல்லள விலேயே நின்று கழிவதாயிற்று. அதனு லேயே, நடுக்கடலிற் காணப்பெருத துளக் கமும் அலையெழுச்சியும் கரையோரத்தே மட்டும் காணப்படுதல் போல, அறிவெனும் பெருங்கடலிற் பெரிதும் ஆழ்ந்து சென்று மூழ்கித் திளைத்தின்புற்ற சங்ககாலச் சான் ரோர்களின் செய்யுட்களிற் காணப்படாத சிலேடை யமகம் திரிபு மடக்கு முதலிய சொல்லணிகள், அக்கடலிடை ஆழச் செல் லாது மேலாகவே மிதந்து, சொல்லறிவு மட்டுமே வாய்ந்த இடைக்காலப் பிற்காலப் புலவர்களின் செய்யுட்களிற் பெருவரவின வாய்க் காணப்படுகின்றன. யாம் எமது இளமை முதலாகவே சங்கநூற் பயிற்சியில் தலைப்பட்டு அவற்றின் சொற்பொருட் சுவை நலங்களில் திளைத்திருந்தமையின், அவ் வியல்பு எமக்கு இயற்கையாக எம்மை யறி யாமலே அமைந்து விடுவதாயிற்று. எதனையும் நுணுகி ஊன்றி நோக்கி ஆராயும் சிந்தனைத் திறனுடையோர்க்கு, இயல்பாகவே வெறும் சொல் விளையாட்டுக்களில் கருத்துச் செல்வ தில்லை. வேடிக்கைக் குறும்புப் பேச்சுக் களும், வெறும் நகைப்பூட்டும் பயனில் உரைகளும், ஆழ்ந்த சிந்தனையாளர்கள் பால் இயற்கையாகவே அமைவதில்லை. இளங்கோவடிகள் ஆழ்ந்த சிந்தனைமிக்க அரும்பெரும் கவிஞர் தவநலஞ் சிறந்த சான்ரோர். தூய நல்ல எழிற் கலையுணர்வு களில் தோய்ந்தவர். அவர் இயற்றியருளிய நூல் ஆகிய சிலப்பதிகாரம், ஒரு பெரும் நாடகக் காப்பியம். நாடகங்களுக்கு நகைச் சுவைஇன்றியமையாதது. நகைவேழம்பர்கள் (Clowns, Comedians) நாடகங்களில் பெரி தும் இடம் பெறுவர். சேக்ஸ்பியர் 'Falstaff' முதலிய நகைவேழம்பர்களைத் தம் நாடகங்



திருமயிலைக் கபாலீச்சரத்தில் அபிராமி அந்தாதிக் கல்வெட்டுக்களை அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு மு. கண்ணப்பர் அவர்கள் திறந்து வைத்தல் (20-3-73)

களில் படைத்துள்ளார். காளிதாசரும் தமது சாகுந்தல நாடகத்தில் மாதவ்யன் என்னும் விதூடகனைப் படைத்திருக்கக் காண்கின்றோம். இங்ஙனம், நாடகத்திற்கு மிகவும் இன்றியமையாத நிலையிற் கருதப் பெறுகின்ற நகைச்சுவை நடிகன் எவனையும், இளங்கோவடிகள் தமது நாடகக் காப்பிய நூலில் படைக்கா தொழிந்தார். அதற்குக் காரணம், அவரது சீரிய ஆழ்ந்த சிந்தனையியல்பும், தவவொழுக்க நலமுமே யாகும் என்லாம்'' எனப் பலப்பல அரிய கருத்துக்களை விளக்கினார். அடிகள் கூறிய சொற்களாற் பெற்ற உணர்ச்சியின் கிளர்ச்சியால், 'சங்க இலக்கிய மாண்பு'' என்னும் ஒரு கவிதை நூலும் என்னால் இயற்றி வெளியிடப் பெற்றுள்ளது. இவ்வாறே சிவஞானசித்தியார்சுபக்கத்தில் வரும் பிரமாண இயல் என்னும் பகுதியில் நேர்ந்த பல ஐயப்பாடுகளை அடிகளார் தெளிவுறுத்திய தன் பயனாகவே, ''தருக்க இயல் விளக்கம்'' என்னும் ஒரு சிறு நூலும், யான் எழுதி வெளியிட முடிந்தது. இங்ஙனம் அடிகளார் என்பாற் செய்தருளிய தண்ணளிகள் எத்துணையோ பலப்பல.

**முடிவுரை :**

இருபதாம் நூற்றாண்டின் தமிழ் வரலாற்றில், மறைமலையடிகளுக்கு ஒரு பெருந் தனிச் சிறப்பிடம் உண்டு. தமிழுக்கும் சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் ஆகப் பல் வேறு துறைகளில், அளப்பரும் தொண்டுகள் ஆற்றியவர் அப்பெருந்தகையாளர்! அவற்றை விரிப்பிற் பெருகும், தொகுப்பின் எஞ்சும். அப்பெருமகனார் காட்டிச் சென்ற நெறியில், அவர் தம் அடிச்சுவட்டினைப் பின்பற்றி, நாம் தமிழும் சமயமும் தமிழ் நலங்களும் வளர்த்து, நல்வாழ்வு வாழ முற்படுவோமாக!

மறைமலை அடிகள், நாவலர் நாட்டார்,
வண்புகழ்ப் பண்டித மணியார்,
துறைகலை போய சுப்பிர மணியத்
தோன்றலார், ஞானியா ரடிகள்,
நிறைபுகழ் அறிஞர் பாரதி யார், நன்
முதறி ஞர்திரு. வி. க.
பிறபிற பெரியோர் புலமையும் தொண்டும்
பெரிதுணர்ந் தவரடி பணிவாம்!


— ஆசிரியர்

148709






திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அரசினர் கலைக்கல்லூரிக் கட்டிடக் கால் கோள் வழங்கல், கல்வி யமைச்சர் மாண்புமிகு நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் M A. அவர்களும். அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு மு. கண்ணப்பர் அவர்களும.



திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் [illegible] அவர்கள் கல்வி யமைச்சர் மாண்புமிகு நாவலர் திரு. இரா



திருத்தணிகையில் மாண்புமிகு கல்வி அமைச்சரும், மாண்புமித அறநிலைய அமைச்சரும்.



Published by the Commissioner, Hindu Religious and Charitable Endoments (Admn.)